GALAW | Gary Anandasangaree & Associates
Professional Corporation
416-321-1100
gary@galaw.ca

# www.ekuruvi.com
# e குருவி

Life 100
INSURANCE & INVESTMENTS INC.
416-918-9771
10 Milner Business Ct. Suite 208
Scarborough, ON. M1B 3C6

சிறகு 1 | 13.10.2014 | இணைய நாளிதழ் | பறப்பு-04



நகராட்ச்சிமன்றம்
கல்விச்சபை...

# தேர்தல் களத்தில் நம்மவர்

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
iNFORCE LIFe Financial Services Inc.
10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400
career@inforcelife.com www.inforcelife.com
CHANDRAN RASALINGAM CHS
President & CEO

Century 21
Regal Realty Inc., Brokerage*
The Local Experts
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929 www.ihomeandcondo.com

GT Brokers
Protect You & Your Family
நாளை நம் கையில்
இன்றே செயற்படுங்கள்
Critical Illness | No medical Life | Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances. RRSP | RESP
Guna Thuraisingham M.A.Sc(Eng) P.Eng
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
Tel: 905 230 4986 | guna@gtbrokers.ca
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Industrial Alliance | RBC Royal Bank | Assumption Life | Desjardins | Manulife | Canada Protection Plan | Foresters

MRI SUPER
SINCE 1990
RENOVATIONS AND PAINTING
www.mrisuperrenovations.com
Raj Munees
General Contractor
Cell: 416-618-4584 | Off: 416-299-3633
Free Estimate | Reasonable Price | Quality & Relible Work
Full Basement Renovation | Kitchen Cabinets
Hardwood & Tiling | Painting | Electrical & Plumbing

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
TIME FOR SOLUTIONS
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
BonaFide Mortgage Solutions Inc.
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

Biztha W... 2014 @ 6.01pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.ekuruvi.com
குருவி

# வாக்களியுங்கள்

இந்த மாதம் 27ஆம் திகதி ஒன்ராரியோ மாகாணத்தின் நகரசபைகளில் தேர்தல் வாக்களிப்பு நடைபெறுகின்றது. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் நகரசபைத் தேர்தல் இதுவாகும். இந்தத் தேர்தலின் மூலம் நகரபிதா, நகரசபை உறுப்பினர்கள் மற்றும் கல்விச் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

நமது வாழ்வின் அன்றாக நடவடிக்கையின் சீர்பாட்டிற்கு சிறந்த நகரசபைப் பிரதிநிதித்துவம் அவசியமானது. இவ்வாறான பிரதிநிதித்துவத்தை எமது வாக்குக்களால் உறுதிப்படுத்த ஓர் சந்தர்ப்பம் இந்த மாதம் காத்திருக்கின்றது. அந்த சந்தர்ப்பத்தை வாக்களிக்க தகுதிபெற்ற அனைவரும் தமது கடமையாக உபயோகிக்க வேண்டும்.

இம்முறை முன்னெப்போதும் இல்லாத அளவில் பெருமளவிலான தமிழர்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமது பெயர்களை முன்வைத்துள்ளனர். இவர்களின் தகுதியானவர்கள் தெரிவாவதன் மூலம் சிறந்த நகரசபை கட்டமைப்பை உறுதிப்படுத்துவதுடன் தமிழர் சமூகத்தின் வளர்ச்சியையும் வலுப்படுத்தலாம். உங்கள் தொகுதியில் தமிழ் வேட்பாளர்கள் போட்டியில் ஈடுபட்டிருந்தால் அவர்களின் தகுதிகளைக் கருத்தில் கொண்டு உங்கள் வாக்குப் பலத்தை உபயோகியுங்கள்.

துமிழர் என்ற ஒரே காரணத்திற்காக தமிழ் வேட்பாளர் ஒருவரின் பெயருக்கு அருகில் புள்ளியிடுதல் சரியான தெரிவாக இருக்காது. அதேவேளை ஒரு தமிழரின் வெற்றியை பாதிக்கும் வகையில் போட்டியிடுபவர்களை இனங்கண்டு வெளியேற்றுவதும் வாக்காளர்களின் கடமையாகும்.

இம்முறை தமிழர் சமூகத்திலிருந்து ஏழு உறுப்பினர்கள்வரை வெற்றிபெறக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. இது தமிழர்களின் வாக்குக்கள் பிரியாமல் தகுந்த முறையில் உபயோகிக்கப்படுமானால் சாத்தியமாகும்.

தேர்தல் காலங்களில் வாக்களிக்கும் உரிமையை தவறவிட்டு பின்னர் மக்கள் பிரிதிநிதிகளை குறைகூறுவதில் எவ்விதமான பயனும் இல்லை என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

வாக்களியுங்கள்.

**இது எமது ஜனநாயகக் கடமை. உரிமையல்ல.**




www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com

## டொரோண்டோ உள்ளூராட்சித் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது

அக்டோபர் மாதம் 27 ம் திகதி உள்ளூராட்சி தேர்தல் தினம். இந்த முறை நிறைய தமிழ் வேட்பாளர்களும் போட்டியிடுவது குறிப்பிடத் தக்கது. வாக்குச் சாவடிகள் காலை 10.00 மணியளவில் திறக்கப் பட்டு இரவு 7.00 மணிக்கு மூடப் படும்.

### யார் வாக்களிக்கலாம்

1. கனடியப் பிரசையாக இருக்க வேண்டும்.
2. வாக்களிக்கும் தினத்தன்று பதினெட்டு வயதினை அடைந்து இருக்க வேண்டும்
3. டொரோண்டோ மாநகரத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்
4. டொராண்டோவில் வசிக்கா விட்டால் அவருக்கு அல்லது வாழ்க்கைத் துணைவருக்குச் சொத்து இருக்க வேண்டும்.

### எங்கு வாக்களிப்பது

மாநகரசபை தேர்தல் இணைய தளமான My Vote என்ற இணைய தளத்திற்குச் சென்று உங்கள் முகவரியைத் தட்டச்சு செய்தால் எல்லாத் தகவல்களும் பெற முடியும். அன்றைய தினம் வாக்களிபதற்க்கு முடியாதவர்கள் அக்டோபர் 14 ம் திகதி முதல் 19 ம் திகதி வரை முன்னதாகவே (**advanced**) வாக்களிக்கலாம் இத் தேர்தலில் வாக்களிக்கலாம் .

இத் தேர்தலில் வழக்கமான தேர்தலின் போது இடப்ப படும் X அடையாளம் இடக் கூடாது.

வேட்பாளரின் பெயரை ஒரு நேரக் கோட்டினால் இணைக்க வேண்டும்.

**அடையாளத்திற்கு பின்வருவனவற்றில் ஒன்று கொண்டு செல்லவும்**

1. சாரதி அடையாள அட்டை
2. கடன் அட்டைகளின் அறிக்கை ( **statement**)
3. இரத்துச் செய்யப்பட்ட தனிப்பட்ட காசோலை.

## 2018 ம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் மாற்றங்கள்

ஒண்டாரியோ மாகாணத்தில் 2018 ம் ஆண்டில் நடைபெற இருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் தரப்படுத்தப் பட்ட வாக்குச் சீட்டுகளைப் பயன்படுத்த மாகாண முதல்வர் கத்லீன் வெயின் எண்ணி இருக்கின்றார். . உள்ளூர் ஆட்சிக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சர் மாக் மீகின் அவர்களிடம் இந்த மாதம் நடைபெற இருக்கும் தேர்தல் முடிந்தவுடன் 2018 தேர்தலில் தரப் படுத்தப் பட்ட வாக்குச் சீட்டுகளைப் உபயோகிப்பதற்க்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு அறிவுறுத்தி இருக்கின்றார். உத்தேச திருத்தத்தின்படி வாக்காளர்கள் ஒரு அபேட்சகருக்கு வாக்களிப்பதை விட தனது முதலாவது தேர்வை தாம் விரும்பும் ஒருவருக்கும் அதே போல 2, 3, 4... என்ற வரிசையில் தமது விருப்பு வாக்குகளை அளிப்பார்கள்.

முதலாவது வாக்கெடுப்பில் யாராவத்து 50 வீதத்திற்கும் மேலான வாக்குகளைப் பெறாவிட்டல் கடைசியாக வந்தவரது பெயர் வாக்குச் சீட்டில் இருந்து நீக்கப் பட்டு அவரது இரண்டாவது விருப்ப வாக்குகள் மற்றவர்களுக்கு அளிக்கப் படும்.ஒரு வேட்பாளர் 50 வீதம் வாக்குகள் பெரும் வரை இது நடை பெறும். இந்த முறை பெருமளவு ஜனநாயக முறை என்றும் வாக்குகள் பிரிந்து செல்வதைத் தடுக்க முடியும் என்றும் கருதப் படுகிறது. தரப் படுத்தப் பட்ட வாக்களிப்பு முறைக்கு ஆதரவு அளிக்கும் தலைவரான டேவ் மெஸ்ளின் முதல்வர் கத்லீன் வெயினைப் பராட்டியுள்ளார் .வாக்காளர்களுக்கு நிறைய தேர்வு இருக்கிறது என்றார். ஆனால் இதனை எதிர்ப்பவர்கள் இத் தரப் படுத்தப் பட்ட முறை வாக்காளர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும் என்கின்றார்கள். ஆனால் தற்போதைய முறையின் படி 50 வீதத்திற்கும் குறைவான வாக்குகள்ளைப் பெறுபவர்களும் வெற்றி பெறுகின்றனர். எனவே சீர்திருத்தம் அவசியம் என்று பலரும் கருதுகின்றனர்.

இ குருவி பெருமையுடன் வழங்கும் ***Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது தேர்தல் காலம்




ஒன்ராறியோ மாகாணத்தின் அனைத்து நகரசபைகளுக்குமான தேர்தல் இந்த மாதம் 27ஆம் திகதி நடைபெறுகின்றது. அன்றைய தினம் காலை 10 மணிமுதல் இரவு 8 மணிவரை நடைபெறவுள்ள வாக்குப் பதிவின்மூலம் 2800க்கும் அதிகமான நகரசபை உறுப்பினர்களும், 700க்கும் அதிகமான கல்விச் சபை உறுப்பினர்களும் தெரிவாகவுள்ளனர்.

இதில் ரொறன்ரோ நகரபிதாவிற்கான போட்டி பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத் தியுள்ளது. கட்சி பேதமின்றி தனி வேட்பாளர்களாக போட்டியிடும் இந்தத் தேர்தல் வெற்றிபெறுபவர் நான்கு வருடங்கள் 2.6 மில்லியன் குடியிருப்பாளர்களை (2011ஆம் ஆண்டின் மக்கள் கணக்கெடுப்பின் பிரகாரம்) தன்னகத்தே கொண்ட ரொறன்ரோ நகரபிதாவாகப் பதவி வகிப்பார்.

மொத்தம் 67 பேர் ரொறன்ரோ நகரபிதாவிற்கான போட்டிக்காக தமது பெயர்களைப் பதவி செய்துள்ளபோதிலும் இறுதித் தெரிவு மும்முனைப் போட்டியாக அமைகின்றது. John Tory, Doug Ford மற்றும் Olivia Chow ஆகிய மூவரில் ஒருவர் ரொறன்ரோ நகரபிதாவாகத் தெரிவாவது உறுதியாகியுள்ளது.

ரொறன்ரோநகரபிதா RobFordஇரண்டாவது தடவையாக நகரபிதாவாகும் எண்ணத்தில் தனது தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்து முன்நடத்தி வந்தார். இருந்தபோதிலும் Rob Ford திடீரென தனது பிரச்சாரத்தை இடைநிறுத்தி சுகயீனம் காரணமாக நகரபிதாவிற்கான போட்டியிலிருந்து இறுதி நேரத்தில் விலகிக்கொள்ள அவரது இடத்திற்கு சகோதரரான Doug Ford போட்டியில் இறங்கினார். இவரை எதிர்த்து முன்னாள் நகரசபை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் Olivia Chow தேர்தல் களத்தில் உள்ளார். மூன்றாவது பிரதான வேட்பாளராக இருப்பவர் ஒன்ராரியோ மாகாணத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் John Tory. இவர்களைத் தவிர பிரதான வேட்பாளர்களாகக் கணிக்கப்பட்ட மேலும் மூன்று (David Soknacki, Karen Stintz மற்றும் Sarah Thomson) முன்னணிப் போட்டியாளர்கள் போட்டியிலிருந்து பல்வேறு கட்டங்களில் விலகியுள்ளனர்.

## John Tory



John Tory நகரபிதாப் பதவிக்காகப் போட்டியிடும் இரண்டாவது தேர்தல் இதுவாகும். 60 வயதான John Tory 2003ஆம் ஆண்டு நடைபெற்ற ரொறன்ரோ நகரபிதாவிற்கான போட்டியில் 38 சதவீதமான வாக்குக்களைப் பெற்று (மொத்தம் பெற்ற வாக்குக்கள் 263,189) இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தார். 2010ஆம் ஆண்டு மீண்டும் நகரபிதாவிற்கான போட்டியில் John Tory ஈடுபடுவார் என பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது. இருந்த போதிலும் 2010ஆம் ஆண்டு நகரபிதாவிற்கான தேர்தலில் போட்டியிடாமல் தவிர்த்த John Tory இம்முறை பிரதான மூன்று வேட்பாளர்களில் ஒருவராக களத்தில் உள்ளார். ரொறன்ரோவைப் பிறப்பிடமாகக் கொண்ட John Tory நீண்டகாலம் அரசியல் அனுபவம் கொண்டவர். முன்னாள் மாகாண எதிர்க்கட்சித் தலைவராக இவர் ஓர் வழக்கறிஞராவார். மிகப் பெரிய நிறுவனங்கள் பலவற்றின் தலைமைப் பதவியையும் இவர் வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## Doug Ford



Doug Ford ஏற்கனவே நகரசபை உறுப்பினராகப் பதவி வகித்தவர். ரொறன்ரோ நகரசபையின் இரண்டாவது தொகுதியின் (Etobicoke வடக்கு) தற்போதைய நகரசபை உறுப்பினர். 2010ஆம் ஆண்டு நகரசபை உறுப்பினராகத் தெரிவான Doug Ford தனது குடும்பத்தின் தொழில் நிறுவனத்தில் உயர் பதவி வகித்து வருகின்றார். தனது சகோதரரை (Rob Ford) இரண்டாவது தடவையாக நகரபிதாவாக்க வேண்டும் என்ற வேட்கையில் ஈடுபட்டிருந்த Doug Ford இறுதி நேரத்தில் தானே நகரபிதாப் பதவிக்குப் போட்டியிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

நகரசபை அரசியலில் இருந்து மாகாணசபை அரசியலுக்குச் செல்வார் என பலராலும் எதிர்பார்க்கப்பட்டவர் Doug Ford. 50 வயதான Doug Ford சில வாரங்கள் மாத்திரம் பிரச்சார களத்தில் இருந்தாலும் தனது சகோதரருக்கான ஆதரப் பலத்துடன் தேர்தல் பிரச்சாரத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளார்.

## Olivia Chow



நகரசபைக்கான தேர்தலின் ஆரம்பத்தில் முன்னணிப் போட்டியாளராக அனைவராலும் நோக்கப்பட்டவர் Olivia Chow. 57 வயதான Trinity-Spadina தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான இவர், சுமார் 8 வருடங்கள் வகித்துவந்த தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு ரொறன்ரோ நகரபிதாவிற்கான போட்டியில் ஈடுபடுகின்றார். தமிழர்கள் பெரிதும் மதிக்கும் மறைந்த எதிர்க்கட்சித் தலைவர் Jack Jayton இன் துணைவியார். தனது கணவனான Jack Jayton வெற்றிபெற முடியாத நகரபிதாவிற்கான போட்டியில் தான் வெற்றிபெறவேண்டும் என்பது Olivia Chow இன்று எதிர்கொள்ளும் சவாலாகும். மூன்று மொழிகளைப் பேசும் வல்லமையுடைய Olivia Chow ஏற்கனவே நகரசபை உறுப்பினர் பதவியில் கடமையாற்றியவர்.

## தேர்தல் வாக்குறுதி

நகரபிதாவிற்கான இந்தத் தேர்தலில் வாக்காளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பிரதான வேட்பாளர்கள் அனைவரும் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டு வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்தத் தேர்தலில் மக்கள் கவனத்தை ஈர்க்கும் விடயங்களாக பொதுப் போக்குவரத்து, அதிகரிக்கும் சொத்து வரி, வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதாரம் ஆகியன அமைந்துள்ளன.

ரொறன்ரோ நகரசபையில் தமிழ் வாக்காளர்கள் அதிகளவில் வசித்துவரும் நிலையில் தமிழர்களை குறிவைத்து நகரபிதா வேட்பாளர்கள் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவது புலப்படுகின்றது. இறுக்கமான மும்முனைப் போட்டியில் தமிழ் வாக்காளர்களின் பலத்தை தமதாக்கும் வகையில் பிரதான நகரபிதா வேட்பாளர்கள் தமிழர் சந்திப்புக்களில் பெருமளவில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது. அண்மைய காலங்களில் தமிழ் விழாக்கள், ஆலயங்கள் மற்றும் தமிழர் நிறுவனங்களில் நகரபிதா வேட்பாளர்களின் முகங்கள் அடிக்கடி தென்படுகின்றன.

இதேவேளை தேர்தல் உறுதி மொழிகளையும் தமிழ் வாக்காளர்களுக் கென தனியே வழங்கவேண்டிய நிலையில் நகரபிதா வேட்பாளர்கள் இருபது கவனிக்கத்தக்கது. குறிப்பாக அண்மையில் நடைபெற்ற தமிழ் ஊடகவியலாளர் களுடனான சந்திப்பின்போது ரொறன்ரோ நகரபிதா வேட்பாளர் John Tory தான் நகரபிதாவாகத் தெரிவு செய்யப்பட்டால் இலங்கைத்தீவின் வடக்குக் கிழக்கு மாகாணத்துடன் இணைந்து செயல்படவுள்ளதாக அறிவித்திருந்தார். அதேவேளை யாழ்ப்பாண நகரை ரொறன்ரோவின் சகோதர நகரமாக அறிவிப்பதாகவும் John Tory கூறியிருந்தார். இதேபோல் தமிழ் வாக்காளர்கள் அதிகளவில் உள்ள மிசிசாகா நகரபிதாவிற்கான போட்டியில் ஈடுபட்டுள்ள Bonnie Crombie தான் மிசிசாகா நகரபிதாவாகத் தெரிவு செய்யப்பட்டால் மட்டக்களப்பு நகரம் மிசிசாகா நகரத்தின் சகோதர நகரமாக அறிவிக்கப்படும் என தனது பங்கிற்கு தேர்தல் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

## ஏனையவை

ரொறன்ரோவை அண்மித்த நகர சபைகளிலும் நகரபிதாவிற்கான தேர்தல் பிரச்சாரங்கள் சூடுபிடித்துள்ளன.

மிசிசாகா நகரசபையில் 36 ஆண்டுகளாக நகரபிதாவாக இருந்த Hazel McCallion 93ஆவது வயதில் ஓய்வு பெறுகின்றார்.



இவரது இந்த முடிவினால் 1978ஆம் ஆண்டின் பின்னர் Hazel McCallion தவிர்ந்த வேறு ஒருவர் மிசிசாகா நகரசபையின் நகரபிதாவாகப்பதவியேற்கும் சாத்தியக்கூறு தோன்றியுள்ளது. மொத்தம் 10 பதிவு செய்யப்பட்ட நகரபிதா வேட்பாளர்களுக்கு மத்தியில் முன்னிலையில் இருப்பவர்கள் Bonnie Crombie மற்றும் Steve Mahoney ஆகும். இவர்கள் இருவரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மிசிசாகா தவிர மார்க்கம், பிரம்டன், Pickering மற்றும் Ajax தொகுதிகளில் தற்போது நகரபிதாப் பதவியில் இருப்பர்கள் அனைவரும் மீண்டும் தமது பதவிகளுக்கான போட்டியில் மீண்டும்



ஈடுபட்டுள்ளனர்.

மார்க்கம் நகரசபையின் நகரபிதாவிற்கான தேர்தலில் தற்போதைய நகரபிதா Frank Scarpitti மீண்டும் வெற்றிபெறுவார் என்ற எதிர்பார்ப்பு பெருமளவில் உள்ளது. மொத்தம் 5 வேட்பாளர்கள் நகரபிதாவிற்கான தேர்தலில் ஈடுபட்டுள்ள போதிலும் Markham நகரசபையின் 7ஆவது நகரபிதாவான Frank Scarpitti க்கான ஆதரவு அதிகளவில் உள்ளது.

பிராம்டன் நகரசபையிலும் முன்னாள் நகரபிதா Susan Fennell மீண்டும் தெரிவாவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகளவில் தென்படுகின்றன. பிராம்டன் நகரசபையில் மொத்தம் 11 வேட்பாளர்கள் நகரபிதாவிற்கான போட்டியில் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

Pickering நகரசபையில் நகரபிதாவிற்கான போட்டியில் மீண்டும் Dave Ryan ஈடுபட்டுள்ளார். மூன்று பிரதான வேட்பாளர்களுக்கு மத்தியில் நடைபெறும் இந்தத் தேர்தலில் Dave Ryan மீண்டும் தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Ajax நகரசபையில் நகரபிதாவிற்கான போட்டியில் தமிழ் வேட்பாளர் ஒருவர் உள்ளார். வரன் வைத்திலிங்கம் இந்தத் தேர்தலில் போட்டியிடும் மூன்று நகரபிதா வேட்பாளர்களின் ஒருவராவார். இந்தத் தேர்தலில் தற்போதைய நகரபிதா Steve Parish கடுமையான போட்டியாளராகக் கணிப்பிடப்படுகின்றார்.

இலங்கதாஸ் பத்மநாதன்

இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறவுள்ள நகரசபைத் தேர்தலில் தமிழர்கள் பெருமளவில் போட்டியிடுவது வளர்ந்துவரும் ஒரு சமூகத்தின் எடுத்துக்காட்டாக அமைகின்றது. முன்னெப்போதும் இல்லாத அளவில் தமிழர்கள் நகரபிதா, நகரசபை உறுப்பினர் மற்றும் கல்விச்சபை உறுப்பினர் பதவிகளுக்குப் போட்டியிடுகின்றனர்.

முதல் தடவையாக கனடாவில் 21க்கும் அதிகமானவர்கள் தமிழர் சமூகத்திலிருந்து தேர்தலில் போட்டியிடுவது ஒருவகையில் வரவேற்க வேண்டியதொன்றாகும். குறிப்பாக ஸ்காபுரோ மற்றும் மார்க்கம் பிரதேசங்களின் தொகுதிகளில் தமிழ் வேட்பாளர்களின் பதாதைகள் பலவும் போட்டிபோடுவதைக் காண முடிகின்றது. ஆனாலும் பெருமளவிலான தமிழ்ப் பெயர்கள் வாக்குச்சீட்டில் இடம்பிடிப்பது




# தேர்தலும் தமிழர்களும்

## நகராட்சி மன்றம் - கல்விச் சபை தேர்தல் களத்தில் நம்மவர்

இலங்கதாஸ் பத்மநாதன்

மாத்திரம் வெற்றியாகி விடமுடியாது. இவர்களின் பலரது அரசியல் கனவு வாக்குச் சீட்டுக்கள் எண்ணப்படும் தருணத்தில் பகல் கனவாக மாறும் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நகரசபைத் தேர்தல்களில் தமிழர்களைப் பொறுத்தவரையில் மார்க்கம் நகரசபை வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றது. கனடாவில் தமிழர்களின் அரசியல் பிரவேசத்திற்கு இந்த நகரசபை முதலில் பாதையிட்டது. 2003 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் பெருமளவில் தமிழர்கள் மார்க்கம் நகரசபையில் பல்வேறு பதவிகளுக்கான போட்டியில் ஈடுபட்டனர். 2003ஆம் ஆண்டு தமிழ் வேட்பாளர்கள் தமக்குள் போட்டிபோட்டு வாக்குக்களைப் பிரித்துச் செல்ல, ஏனையவர்களின் வெற்றி இலகுவாக்கப்பட்டது. இந்தத் தேர்தலுக்காக தமிழர் பிரதிநிதிகளாக அரிதாரம் பூசப்பட்டு களம் இறங்கிய (இறக்கப்பட்ட) பலரது முகங்களை தேர்தலில் பின்னர் இன்றுவரை தமிழர் நிகழ்வுகளில் காணவில்லை.

2006ஆம் ஆண்டு நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் லோகன் கணபதி நகரசபை உறுப்பினராக தெரிவானதன் மூலம் கனடிய வரலாற்றில் அரசியல் பதவிக்கு தெரிவான முதல் தமிழர் என்ற பெருமையைத் தனதாக்கினார். இதே தேர்தலில் கல்விச்சபை உறுப்பினரான நீதன் சண் தெரிவாகியிருந்தார். 2010ஆம் ஆண்டு மீண்டும் நகரசபை உறுப்பினர் பதவிக்கு இரண்டாவது தடவையாக லோகன் கணபதி தெரிவு செய்யப்பட்டார். இம்முறை கல்விச் சபை உறுப்பினராக வொனிற்றா நாதன் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னர் கனடாவின் முதல் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபைஈசன் தெரிவு செய்யப்பட்டார். இவை அனைத்தும் வரலாறு. தற்போது மீண்டும் தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது. நகரசபைத் தேர்தல் அரசியல் பிரவேசத்திற்கு சிறந்த ஒரு ஆரம்பம். கனடாவில் தமிழர்களின் நீண்டகால அரசியலின் முதல்படியாகவே நகரசபை அரசியலைப் பார்க்க முடியும். அந்த வகையில் இந்தத் தேர்தலிலும் பல தமிழ் முகங்கள் அரிதாரம் பூசப்பட்டு களமிறங்கியும் (களம் இறக்கப்பட்டும்) உள்ளமை தெட்டத் தெளிவாகின்றது. இந்த முகங்களை இனங்கண்டு கொள்வது அவசியமானது.

தேர்தல் பிரச்சாரத்தில் தமிழ், தமிழர், தாயகம்,இனப்படுகொலை, விடுதலைஎன்ற சொற்பதங்கள், ஏன் என்ற காரணங்களோ எவ்வாறு என்ற கேள்விகளோ இல்லாமல் மலிவுப் பொருட்களாக வீசப்படுவது (அல்லது திணிக்கப்படுவது) நகைப்பிற்குரியது. தமிழர்களின் தாயக தேசியப் பயணத்தின் வெற்றிக்காகப் பாடுபடுவேன் என நகரசபைக்காப் போட்டியிடும் வேட்பாளர்கள் உறுதியளிப்பது அதைவிட அபத்தமான "அரசியல்".

### பிரியும் வாக்கு

தகுதியானவர்கள் தமிழர் சமூகத்திலிருந்து தெரிவு செயப்படுவது எதிர்கால அரசியல் வளர்ச்சிக்கு அவசியமானதாகும். அதேவேளை பலதொகுதிகளில் ஒன்றிற்கும் மேற்பட்ட தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடுவது தமிழர்களின் வாக்குக்களைப் பிரிக்கும் ஒரு நகர்வாகவே நோக்கப்படும் வேதனையும் இங்கு பதிவு செய்யப்பட வேண்டியதாகும். இவ்வாறு வாக்குக்கள் பிரியும்போது தகுதியான தமிழ் வேட்பாளருக்கு கிடைக்கவேண்டிய வெற்றி தட்டிப்பறிக்கப்படுகின்றது. இதற்கு தகுந்த உதாரணமாக மூன்று தொகுதிகளை குறிப்பிடலாம்

கனடாவில் முதல் தமிழ் நகரசபை உறுப்பினரை வெற்றியாக்கிய தொகுதி மார்க்கம் நகரில் தமிழர்கள் அதிகளவில் வாழும் ஏழாம் வட்டாரமாகும். இந்தத் தொகுதியின் நகரசபை உறுப்பினராக இருப்பவர் லோகன் கணபதி. இந்தத் தொகுதியை பல்லினத்தவர்கள் ஒரு "தமிழ்த் தொகுதி" எனப் பெயரிட்டு அழைத்து வந்ததை பல இடங்களிலும் அவதானிக்க முடிந்தது. இதற்குக் காரணம் இந்தத் தொகுதியை கடந்த இரண்டு நகரசபைத் தேர்தலிலும் லோகன் கணபதி வெற்றி கொண்டிருந்தார். பல்வேறு திட்டங்களை தனது தொகுதி மக்களுக்காக நிறைவேற்றியதன் மூலம் வாக்காளர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளார்.

இம்முறை இந்தத் தொகுதியில் நகரசபை உறுப்பினர் பதவிக்கு மூன்று தமிழர்கள் போட்டியிடுகின்றனர். இந்த நகர்வு தமிழர்களின் வாக்குக்களைச் சிதறடிக்கும் ஓர் ஆபத்தை உருவாக்கியுள்ளது. இந்த நகர்வின் மூலம் தமிழர் அல்லாத ஒருவர் நகரசபை உறுப்பினர் சீட்டை இலகுவாக வெற்றிபெறுவதற்கு தமிழர்களே வழிசமைத்துள்ளனர். இது 2003ஆம் ஆண்டு தமிழ் வாக்குக்கள் சிதறடிப்பின் மூலம் தமிழர்கள் தோல்வியை எதிர்கொண்டதைப் போன்ற மற்றுமொரு முடிவை மீண்டும் தந்துவிடும் அபாயத்தைத் தோற்றுவித்துள்ளது.

இதேபோன்றதொரு ஆபத்தை ஸ்காபுரோவின் Rouge River தொகுதி (42ஆவது வட்டாரம்) எதிர்கொள்கின்றது. இந்தத் தொகுதியில் தற்போது நகரசபை உறுப்பினராக உள்ள Raymond Cho, 20 வருடங்களுக்கும் மேலாக இந்தத் பதவியில் இருக்கின்றார். இவர் பதவி விலகி மாற்றம் ஒன்று இந்தத் தொகுதிக்குத் தேவை என்ற கருத்தை பலரும் எடுத்துரைத்துள்ளனர். இவ்வாறான பின்னணியில் தமிழ் வாக்காளர்களை அதிகமாகக் கொண்ட இந்தத் தொகுதியில் தகுதியான தமிழ் வேட்பாளர் வெற்றிபெறுவது சாத்தியமான தொன்றாகும். ஆனாலும் இந்தத் தொகுதியில் மொத்தம் மூன்று தமிழ் வேட்பாளர்கள் நகரசபை உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடுகின்றனர். இது மீண்டும் தமிழர்களின் வாக்குக்களைச் சிதறடிக்கும் ஆபத்தைத் தோற்றிவித்துள்ளது. மார்க்கம் ஏழாம் வட்டாரம் போலவே இங்கும் தமிழர் வாக்குக்கள் சிதறடிக்கப்பட்டால் அது வேறு ஒருவருக்கு வெற்றியை இலகுவாக்கிவிடும். இதேபோன்று பிரமடன் தொகுதியிலும் இரு தமிழர்கள் தோற்றிவித்துள்ளனர்.

### வெற்றிக்கனி யாருக்கு?

நடைபெறவுள்ள தேர்தலில் 25க்கும் அதிகமான தமிழர்கள் போட்டியிட்டாலும் தமிழர் சமூகத்திலிருந்து அதிகளவில் வெற்றிபெறக்கூடிய பதவிகளின் எண்ணிக்கை ஏழு. நான்கு நகரசபை உறுப்பினர் மற்றும் மூன்று கல்விச் சபை உறுப்பினர்களுக்கு வெற்றிக்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இந்த எண்ணிக்கை தமிழர்களின் வாக்குக்கள் தமிழ் வேட்பாளர்கள் மத்தியிலான போட்டியினால் பிரியுமானால் இரண்டாகக் குறையும் சாத்தியக்கூறும் உள்ளது. ஏழிற்கும் அதிகமான தமிழ் வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றால் அது ஆச்சரியத்துடன் வரவேற்கப்படவேண்டிய முடிவாகவே நோக்கப்படும்.

நடைபெறப்போகும் தேர்தல் முடிவு எவ்வாறாக அமைந்தாலும், 2014ஆம் ஆண்டை கனடியத் தமிழரின் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் ஒரு வருடமாக எதிர்கால சந்ததி குறித்து வைத்திருக்கும்.

## ஹரி ஆனந்தசங்கரி உற்பட ஜோன் டோரிக்கு லிபரல் கட்சி பிரமுகர்கள் ஆதரவு வழங்கினார்கள்



லிபரல் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் டொரோண்டோ மேயர் பதவிக்கு போட்டியிடும் ஜோன் டோரிக்குத் தமது ஆதரவைத் தெரிவித்தார்கள். 20-09- 2014 சனிக்கிழமை இஸ்கார்பரோ 820 மார்க்கம் வீதியில் அவரது தேர்தல் பிரச்சார அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஸ்கார்பரோ கில்ட்வூட் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் மக்கே, ஸ்கார்பரோ அஜின்கோர்ட் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்னோல்ட் சான்,அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் ஸ்கார்பரோ மத்திய தொகுதியில் போட்டியிடத் தேர்வு செய்யப் பட்டுள்ள சல்மா ஷாஹித், ஸ்கார்பரோ ரூஜ் பார்க் தொகுதியில் போட்டியிட தேர்வு செய்யப் பட்டுள்ள ஹரி ஆனந்தசங்கரி ஆகியோர் கலந்து கொண்டு தமது ஆதரவினை ஜோன் டோரிக்கு வழங்குவதாக உருது அளித்தனர் .இவர்கள் அனைவருமே லிபரல் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இந்த நிகழ்ச்சியில் பல்லின மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பெருந் தொகையான தமிழ் மக்களும் சீன இன மக்களும் கலந்து கொண்டார்கள். தமிழ் மக்கள் எந்த ஒரு அமைப்பினையும் சாராது பெருமளவில் கலந்து கொண்டமை கவனிக்கத் தக்கது.

ஜோன் டோரி அவர்கள் உரையாற்றும் போது தான் மேயராகத் தெரிவு செய்யப் பட்டால் சகல மட்டத்திலும் உள்ள அரசாங்கங்களுடன் இணைந்து அவர்களின் உதவியுடன் டொராண்டோவினைச் சிறந்த நகரமாக உருவாக்கப் போவதாகக் கூறினார். அத்துடன் சகல உள்ளூர் ஆட்சி சபைகளில் உள்ள உறுப்பினர்களோடும் இணைந்து அவர்களுடைய ஒத்துழைப்பையும் பெறப் போவதாகவும் உறுதி அளித்தார்

மேலும் அன்று சமுகமளித்திருந்த தமிழ் மக்கள் பலரை நோக்கும் போது ஜான் டோரிக்கு தமிழ் மக்கள் சார்பாக பெரும் ஆதரவு இருப்பது அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அதேவேளை ஜோன் ரோறிக்கு ஆதரவு தொடர்ந்து அதிகரித்துச் செல்வதைக் கருத்துக் கணிப்பொன்று காட்டுகின்றது

இ குருவி பெருமையுடன் வழங்கும் Bizlha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலமும் கருத்தும் ......

# சிறீலங்காவின் போர்க் குற்றவாளிகளின் வளங்களும் வரம்புகளும்



செந்தமிழ்ஞானி

முள்ளிவாய்க்காலின் கோர முடிவிற்கு முன்னும் பின்னும் ஸ்ரீலங்காவின் சிங்கள அரச அதிகாரிகளும், அடியாட்களும் பல்வேறு வகையிலும் அளவிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் அடிப்படை மனித உரிமைகளுக்கும் மனிதாபிமானதிற்கும், போர் சட்ட மரபுகளுக்கும் முரணான, எதிரான பல்வேறு பாரிய போர்குற்றச் செயல்களில் ஈடுபட்டார்கள். இன்னும் ஈடுபடுகின்றார்கள்.

ராஜபக்சே குடும்பத்தினரின் ஆணைப்படி சிங்கள இராணுவ அதிகாரிகளும் படையினரும், கடற்படை, வான்படையினரும், பொலிசாரும் பாரிய தமிழ் இனவழிப்புக் கொலைக் குற்றங்கள் பலவற்றை புரிந்தார்கள். தமிழ்ப் பெண்கள் குழந்தைகள், வயோதிபர், எதிலிகள் என்ற வேறுபாடு ஏதும்இன்றி, தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக அப்பாவிமக்கள் பல்லாயிரக்கணக்கில் கொன்று குவிக்கப்பட்டார்கள், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டர்கள், அனாதைத் தமிழ் சிறுவர்கள் அடிமைகளாக சிங்கள வீடுகளுக்கு விற்கப்பட்டர்கள், பலர் அங்கவீனர்களாக ஆக்கப்பட்டார்கள். இதற்கான சான்றுகளும் கண்கண்ட சாட்சியங்களும் தற்போது பெருமளவில் சேகரிகப்பட்டு, நீதிகோரும் படியாக ஆவணப்படுத்தப் பட்டுள்ளன.

சர்வதேச மனித உரிமை முன்னேடுப்புக் குழுக்களும், ஆணையகங்களும், உண்மையை உலகிற்கு எடுத்துரைக்கவேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் செயற்படும் ஒரு சில பன்னாட்டு ஊடகங்களும், நேர்மைமிக்க பத்திரிகை நிருபர்களும் இந்த முயற்சியில் மிக முனைப்புடன் இன்றுவரை மிகவும் காத்திரமான முறையில் செயற்பட்டும் வருகின்றனர்.
இந்த மனிதாபிமான மனசாட்சியின் செயலை முறியடிக்கவும், மழுப்பி மூடிமறைக்கவும், பலபேர்வழிகள் ஸ்ரீலங்கா அரசின் கணக்கற்ற பண உதவியுடனும். அரசியல் பக்கபலத்தினுடனும் செயற்படுகின்றனர். ஆசியா திறிபிஜூன் நடத்துனர் கே.ரி. றாஜசிங்கம் போன்ற சில தமிழர்களும், சிங்கள-பௌத்த இனவாதிகளும் கொலைகுற்ற உண்மைகளை மூடிப்புதைக்கவும் கிரிமினல் குற்றவாளிகளை பாதுக்காக்கவும் பல குள்ளத்தனமான ஏமாற்று முயற்சிகளை முன்னேடுத்துக் கடுகதியில் செயலாற்றி வருகின்றனர். ஸ்ரீலங்காவின் சிங்கள அரச அதிகாரிகளும் சிங்களக் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மதபீடங்களை சார்ந்த பேராயர்களும், குருக்களும் சர்வதேச அரங்கில் சிங்கள அரசையும் தமிழ் இரத்தக் கறைபடிந்த அதன் தலைவர்களையும் பாதுக்காத்து அவர்களுக்கு வீடுபேறு தரும் வகையில் உண்மைக்கு புறம்பான பரப்புரைகளை சாதுரியமாக செய்து வருகின்றனர்.

மிக அண்மையில் கொழும்புப் பேராயர் மல்கம் இறஞ்சித் என்பவர் ராஜபக்சே குடும்பத்தினரை வத்திக்கான் வரை அழைத்துசென்று போப்பாண்டவரை அறிமுகம் செய்து, ராஜபக்சேயின் இரத்தக்கறை படிந்த கைகளுக்கு பொன்முலாம் பூசித் தெருட்டும் திருப்பணியில் ஈடுபட்டார். இதது உலகறிந்த உண்மை என சர்வதேச அரசியல்ஆய்வாளர் சுதர்மன் ஒரு நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார்.

ஸ்ரீலங்காவின் அரசியல் தலைவர்களையும் இராணுவத்தினரையும் போர் குற்றக் கழுவிலிருந்து காப்பதற்காக, பயங்கரவாதம் பற்றிய ஆய்வாளர், புலமையாளர் என்ற போலி முகமூடிகளுடன் ரோஹான் குணவர்த்தனா (Rohan Gunawardene) சோனாலி வடுகே (Sonali Waduge) போன்ற சிங்கள-பௌத்த பேரினவாதிகளும் சர்வதேச மட்டத்தில் தமிழர்களைப் பயங்கரவாதிகளாகப் புனைவு செய்து பேசியும், எழுதியும் வாதாடியும் வருகின்றனர்.

போர்க் குற்றம் மற்றும் இன அழிப்பு பற்றிய சட்ட வரைவிலக்கணங்களை விரித்து நோக்கும்போது மேலேகுறிப்பிட்ட அனைவருமே போர் குற்வாளிகள் என்ற வரம்பினுள் வைத்துக் கணிக்கப்படுவதற்கான ஆதாரங்கள் நிறையவே உள்ளன.

இறுதிப் போருக்கு சாட்சிகள் உண்டு ஏனெனில் ஸ்ரீலங்க-இந்தியப் படையினருடன் முரளிதர் ரெட்டி என்ற தெலுங்கு நிருபர் இருந்தார் என்று என்று சோனாலி வடுகே எழுதிய



ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். பொல்லைக்குடுத்து அடிவாங்குதல் போன்று பொய்யை நிலைநிறுத்த வந்த சோனாலி வடுகே, ஸ்ரீலங்கா-இந்திய படையினருடன் இந்திய பிராமண ஊடக கும்பல் போர் முனைக்குச் சென்ற உண்மையை உலகறியச் செய்து விட்டார். தமிழர் படுகொலை செய்யப்பட்டதை இந்த ஊடகக் கும்பல் பார்த்தது மட்டுமல்லாமல் பல பொய்யான தகவல்களையும் பின்பு பத்திரிகை மூலம் பரப்பியது என்பதும் இதனால் அம்பலமகியது. இவைகூட சட்டப்படி போர் குற்றங்களே.
போர்க் களத்தில் கொல்லப்பட்ட மக்களின் நகைகள், பணங்கள், சொத்துகள் போன்றவையை திருடி விற்பதும் அப்பணத்தை வைப்பகத்தில் இடுவதும் சட்டப்படி போர்க்குற்றமாகும். கீளே ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள சட்ட வரைகள் இதனை தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

இந்த விரிவான சட்டங்களின் அடிப்படையில்தான் ஜெர்மனியில் ஜூதஇனவழிப்பு இடம்பெறவில்லை என பேசிய, எழுதிய, இதனை மூடிமறைத்த பலர் நீதியின் முன் நிறுத்தப்பட்டு பின்பு சிறையிடப்பட்டார்கள்.

ஸ்ரீலங்காவின் சிங்களஅரச தலைவர்களும் அதிகாரிகளும், அடியாட்களும் பல்துறைப் படையினரும், ரோஹான் குணவர்த்தனா, சோனாலி வடுகே போன்ற சிங்கள பேரினவாத பொய்ப்பரப்புரையாளர்களும், இவர்களுக்குத் துணை போகும் சிங்கள கத்தோலிக்க ஆயர்கள், கிறிஸ்தவ குருக்களும் போர்க் குற்றவாளிகளாகக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டியவர்களே.

இவர்களை இனம்கண்டு, உலக நீதிமன்றிலும், ஐ.நா. குற்ற பட்டியலிலும் இணைத்து இவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கும் செயலில் உலக மனிதாபிமான செயற்பாட்டாளர்கள் ஈடுபடவேண்டும்.

கொல்லப்பட்ட தமிழர்களுக்கு நீதி கேட்டு செயற்படும் தமிழ்த் தலைவர்கள், பேரறிஞர்கள், புத்திஜீவிகள், சட்ட வல்லுனர்கள், நாடுகடந்த தமிழ் ஈழ அரசவையினர், மற்றும் இதய சுத்தியோடு செயற்படும் ஈழத்தமிழ்த் தேசிய வாதிகள், இதனை விரைவாகவும் காத்திரமாகவும் முன் எடுக்க வேண்டும். ஈழத்தமிழர் அனைவரும் இதற்கான ஆதரவினை மனமுவந்து கொடுக்கவேண்டும். இறந்த அப்பாவித் தமிழர்களுடன் நீதியும் இறந்துவிடக்கூடாது. உலகில் உயிர் வாழும் தமிழரே இதனைச் செவ்வனே செய்ய முடியும்.

## War Crimes: Legal Definitions and Applications

War Crimes: Legal Definitions and Applications

War crimes are: Acts that violate the international laws, treaties, customs, and practices governing military conflict between belligerent states or parties.
War crimes may be committed by a country's regular armed forces, such as its army, navy, or air force, or by irregular armed forces, such as guerrillas and insurgents. Soldiers may be punished for war crimes, as may military and political leaders, members of the judiciary, industrialists, and civilians who are enlisted by a belligerent to contravene the Rules of War.
Most war crimes fall into one of three categories: 1. crimes against peace, 2. crimes against humanity, and 3. traditional war crimes.
Crimes against humanity include the deportation, enslavement, persecution, and extermination of certain peoples based on their race, religion, ethnic origin, or some other identifiable characteristic. This category of war crimes was created almost entirely from the catalog of atrocities committed by the Nazi regime in World War II. Although other regimes have since committed horrors of their own, the Nazis established the standard by which the wartime misconduct of all subsequent regimes is now measured.

The Rome Treaty of 1998-2002 creating the International Criminal Court defined war crimes at great length as is typical with treaties, and as follows:

(a) Grave breaches of the Geneva Conventions of 12 August 1949, namely, any of the following acts against persons or property protected under the provisions of the relevant Geneva Convention:

(i) Wilful killing;
(ii) Torture or inhuman treatment, including biological experiments;
(iii) Wilfully causing great suffering, or serious injury to body or health;
(iv) Extensive destruction and appropriation of property, not justified by military necessity and carried out unlawfully and wantonly;
(v) Compelling a prisoner of war or other protected person to serve in the forces of a hostile Power;
(vi) Wilfully depriving a prisoner of war or other protected person of the rights of fair and regular trial;
(vii) Unlawful deportation or transfer or unlawful confinement;
(viii) Taking of hostages.
It also includes:
(i) Intentionally directing attacks against the civilian population as such or against individual civilians not taking direct part in hostilities;
(ii) Intentionally directing attacks against civilian objects, that is, objects which are not military objectives;
(iii) Intentionally directing attacks against personnel, installations, material, units or vehicles involved in a humanitarian assistance or peacekeeping mission in accordance with the Charter of the United Nations, as long as they are entitled to the protection given to civilians or civilian objects under the international law of armed conflict;
(iv) Intentionally launching an attack in the knowledge that such attack will cause incidental loss of life or injury to civilians or damage to civilian objects or widespread, long-term and severe damage to the natural environment which would be clearly excessive in relation to the concrete and direct overall military advantage anticipated;
(v) Attacking or bombarding, by whatever means, towns, villages, dwellings or buildings which are undefended and which are not military objectives;
(vi) Killing or wounding a combatant who, having laid down his arms or having no longer means of defence, has surrendered at discretion;
(vii) Making improper use of a flag of truce, of the flag or of the military insignia and uniform of the enemy or of the United Nations, as well as of the distinctive emblems of the Geneva Conventions, resulting in death or serious

( continue on next page)

இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Continue ...**



personal injury;

(viii) The transfer, directly or indirectly, by the Occupying Power of parts of its own civilian population into the territory it occupies, or the deportation or transfer of all or parts of the population of the occupied territory within or outside this territory;
(ix) Intentionally directing attacks against buildings dedicated to religion, education, art, science or charitable purposes, historic monuments, hospitals and places where the sick and wounded are collected, provided they are not military objectives;
(x) Subjecting persons who are in the power of an adverse party to physical mutilation or to medical or scientific experiments of any kind….
(xi) Killing or wounding treacherously individuals belonging to the hostile nation or army;
(xii) Declaring that no quarter will be given;
(xiii) Destroying or seizing the enemy's property unless such destruction or seizure be imperatively demanded by the necessities of war;
(xiv) Declaring abolished, suspended or inadmissible in a court of law the rights and actions of the nationals of the hostile party;
(xv) Compelling the nationals of the hostile party to take part in the operations of war directed against their own country, even if they were in the belligerent's service before the commencement of the war;
(xvi) Pillaging a town or place, even when taken by assault;
(xvii) Employing poison or poisoned weapons;
(xviii) Employing asphyxiating, poisonous or other gases, and all analogous liquids, materials or devices;
(xix) Employing bullets which expand or flatten easily in the human body, such as bullets with a hard envelope which does not entirely cover
the core or is pierced with incisions;
(xx) Employing weapons, projectiles and material and methods of warfare which are of a nature to cause superfluous injury or unnecessary suffering …or
(xxi) Committing outrages upon personal dignity, in particular humiliating and degrading treatment;
(xxii) Committing rape, sexual slavery, enforced prostitution, forced pregnancy, as defined in article 7, paragraph 2 (f), enforced sterilization, or any other form of sexual violence also constituting a grave breach of the Geneva Conventions;
(xxiii) Utilizing the presence of a civilian or other protected person to render certain points, areas or military forces immune from military operations;
(xxiv) Intentionally directing attacks against buildings, material, medical units and transport, and personnel using the distinctive emblems of the Geneva Conventions in conformity with international law;
(xxv) Intentionally using starvation of civilians as a method of warfare by depriving them of objects indispensable to their survival, including wilfully impeding relief supplies as provided for under the Geneva Conventions;
(xxvi) Conscripting or enlisting children under the age of fifteen years into the national armed forces or using them to participate actively in hostilities.
Nuremberg war crime defendants (1946)
(c) In the case of an armed conflict not of an international character, serious violations of article 3 common to the four Geneva Conventions of 12 August 1949, namely, any of the following acts committed against persons taking no active part in the hostilities, including members of armed forces who have laid down their arms and those placed hors de combat by
sickness, wounds, detention or any other cause:
(i) Violence to life and person, in particular murder of all kinds, mutilation, cruel treatment and torture;
(ii) Committing outrages upon personal dignity, in particular humiliating and degrading treatment;
(iii) Taking of hostages;
(iv) The passing of sentences and the carrying out of executions without previous judgement pronounced by a regularly constituted
court, affording all judicial guarantees which are generally recognized as indispensable.
(....)
into armed forces or groups or using them to participate actively in hostilities;

Canada's Crimes Against Humanity and War Crimes Act, at Chapter 24, Statutes of Canada 2000, takes a more succinct approach:
"war crime means an act or omission committed during an armed conflict that, at the time and in the place of its commission, constitutes a war crime according to customary international law or conventional international law applicable to armed conflicts,.whether or not it constitutes a contravention of the law in force at the time and in the place of its commission.

இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலாவது ஈழப் போர் முடிந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இருந்தும் எமது தாயக உறவுகளின் துன்பம், துயர், அவலம், அல்லல் நீங்கினபாடாக இல்லை.

போர் முடிந்தால் வாழ்வு மலரும் விடியல் பிறக்கும் எனக் கனவுகள் கண்ட எமது மக்கள் தொடர்ந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

2009 மே மாதத்துக்குப் பின்னரான அடைக்கப்பட்டு, புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றப்பட்டு, தற்போது விடுதலை செய்யப்பட்டு வடக்கு கிழக்கில் வாழும் முன்னாள் போராளிகளில் பலர் சமுதாயத்தில் கலந்து வாழ முடியாமல் தவிக்கிறார்கள் என்பது கசப்பான உண்மை. பலர் சமுதாயத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு வேலை கொடுக்கத் தமிழ் வணிகர்கள் அச்சப்படுகிறார்கள். "துப்பாக்கி தூக்கிய முன்னாள் போராளிகளைப் பணிக்கு அமர்த்தினால் இராணுவ நெருக்கடியைச் சந்திக்க வேண்டி வரும்" என அவர்கள் ஒதுங்கிவிடுகிறார்கள். சில போராளிகளை இராணுவம் மீண்டும் கைது செய்துள்ளது.

கைம்பெண்கள்

கணவனை இழந்த கைம்பெண்களின் எண்ணிக்கை 89,000 என அரசே அறிவித்துள்ளது. இதில் 39,000 பேர் வடக்கு மாகாணத்திலும் 40,000 பேர் கிழக்கு மாகாணத்திலும் வாழ்கிறார்கள்.

இவர்களது வாழ்வாதரங்களை மீள்கட்டியெழுப்ப இதுவரை சிங்கள அரசு ஒரு துரும்பைத் தன்னும் கிள்ளிப் போடவில்லை. ஒரு வீட்டைத் தன்னும் கட்டிக் கொடுக்கவில்லை. ஒரு வீட்டைத்தன்னும் திருத்திக் கொடுக்கவில்லை. வீடுகளைக் கட்டவோ திருத்திக் கொடுக்கவோ முடியாது என சிங்கள அரசு தொடக்கத்திலேயே கைவிரித்து விட்டது.

89,000 ஆயிரம் கைம்பெண்களில் ஒரு சிறு விழுக்காட்டினருக்கு அரசு சார்பற்ற நிறுவனங்களும் தொண்டு நிறுவனங்களும் அறக்கட்டளைகளும் சில உதவிகளைச் செய்திருக்கின்றன. கனடாவில் இயங்கும் மறுவாழ்வு அமைப்பு 50 ஒற்றைக் குடும்பங்களை இனம் கண்டு அவர்கள் ஆடு, மாடு, கோழி, தோட்டம் செய்ய தனித்தனி ஆயிரம் டொலர்கள் கொடுத்துவியிருக்கிறது. இன்னும் சிலருக்கு தையல் இயந்திரம், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொடுத்து உதவியுள்ளது. இங்கு இது போன்று வேறு சில அமைப்புக்களும் தன்னலமற்ற தொண்டு மனப்பான்மையுடன் இந்த மக்களுக்கு உதவி செய்து வருகின்றன. ஆனால் இவை எல்லாம் பெரிய கடலில் புளியைக் கரைத்த கதை போன்றது என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.



## தமிழகத்தில் ஈழ ஏதிலிகள்

போர் காரணமாக 1983 இல் இருந்து தமிழகத்துக்கு அரசியல் அடைக்கலம் கோரிச் சென்றவர்களது வாழ்வு இருள் சூழ்ந்ததாகவே இருக்கிறது. இவர்கள் இரண்டு தலைமுறை வாழ்க்கையை தமிழகத்தில் கழித்து விட்டார்கள்.

தமிழீழத்தைவிட்டு வெளியேறி ஏதிலிகளாக வாழும் மக்களுள், மேற்கு நாடுகளுக்கு அரசியல் அடைக்கலம் கேட்டவர்கள் ஏதிலிகளாக ஒப்புக்கொள்ளப்பட்டு பின்னர் குடிமக்களாக சகல வசதிகயோடு வளமான வாழ்வை வாழ்ந்து வருகின்ற போதிலும் தமிழகத்துக்குச் சென்றவர்களின் வாழ்வு இடர் நிறைந்நததாகவே இருந்து வருகின்றது.

தந்தையர் நாடு எனத் தமிழர்களால் வாஞ்ஞையோடு கருதப்படும் இந்தியா, குறிப்பாகத் தமிழகம், இராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின்னர் மாறிப் போய்விட்டது. உடன்பிறப்புக்கள், தொப்புக்கொள்கொடி உறவினர் என பாசத்துடன் வரவேற்கப்பட்ட ஈழத் தமிழர்கள் ஒரே நாளில் வேண்டாத விருந்தாளிகளாக ஆகிப் போனர்கள்.

இன்று தமிழகத்தின் பல பகுதிகளிலும் உள்ள 112 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் ஏதிலிகள் திறந்தவெளிச் சிறைச்சாலையில் வாழ்வதைப் போன்ற உணர்வோடு வாழ வைக்கப்பட்டுள்ளார்கள். சுமார் 73,000 ஈழத் தமிழர்கள் முகாம்களில் வாழுகின்றார்கள். இதைத் தவிர சுமார் 34,000 பேர்வரை முகாம்களுக்கு வெளியே வாழ்வதாக அரசு புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றது. இந்த முகாம்கள் ஈழத் தமிழ் ஏதிலிகளுக்கு திறந்த வெளிச் சிறைச்சாலைகளாகவே இருக்கின்றன.

முகாம்களைப் பொறுத்தவரை சேரிகளைப் போன்று சிறிய குடிசைகளிலும் நல்வாழ்வு சீர்கேடுகளுக்கு மத்தியில் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர்.

# இராணுவ ஆக்கிரமிப்பினால் அல்லல்படும்

## முன்னாள் போராளிகள் தமிழ் ஏதிலிகள், கைம்பெண்கள், முதியோர், சிறார்கள்ஆகியோருக்கு

# விடிவு எப்போது?

நக்கீரன்

சிறிலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு போர் சொல்லில் வடிக்க முடியாத பேரழிவுகளை ஏற்படுத்தி நின்ற நிலையில் தாயக மக்கள் அவற்றில் இருந்து இன்னமும் மீண்டு தங்கள் வாழ்வாதாரங்களை மீள் கட்டியெழுப்பு முடியாத நிலையில், சிறிலங்கா இனவாத அரசு மீண்டும் மீண்டும் அந்த மக்களைத் துன்பத்துக்கும் துயரத்துக்கும் ஆளாக்கி வருகிறது. இது மரத்தில் ஏறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதைக்கு ஒப்பானது.

போர்க் காலத்தில் இடம் பெயர்ந்த மக்களில் இன்னமும் மீள்குடியமர்த்தப் படாமல் 90,000 ஏதிலிகள் முகாம்களிலும் தகரக் கொட்டில்களிலும் அடைபட்டுக் கிடக்கிறார்கள்.

மீள் குடியேற்றப்பட்ட மக்களும் குடிதண்ணீர், மருத்துவம், பள்ளிக்கூடங்கள் போன்ற அடிப்படை வசதிகளின்றிக் கொட்டில்களில் வாழ்கிறார்கள். அவர்களின் அன்றாடத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைப் பெற முடியாத வறுமை அவர்களை வாட்டுகிறது. அதிலும் கணவரை இழந்த கைம்பெண்களின் வாழ்க்கை நிலை என்பது மிகவும் துன்பமானதாகும். இவர்கள் வீட்டுத் தலைவனை மட்டுமல்ல வீடு வாசல் என அனைத்து உடமைகளையும் இழந்துள்ளார்கள்.

தமிழ்மக்களில் மிகவும் பாதிப்புள்ளாகி இருப்பவர்களில் கணவனை இழந்த கைம்பெண்கள், முதியோர்கள், சிறார்கள், உடலுறுப்பை இழந்த போராளிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரது வாழ்வு இருண்டு போய்க் கிடக்கிறது. இவர்கள் மனதளவிலும் உடலளவிலும் தாக்கத்துக்கு உள்ளாகி இருக்கிறார்கள். குறிப்பாக உடல் உறுப்புகளை இழந்த சிறுவர் முதல் முதியோர் வரை அல்லல்படுவர்களது எண்ணிக்கைக்கு அளவில்லை.

## முன்னாள் போராளிகள்

முப்பது ஆண்டு காலப் முடிந்த போரில் எல்லோரும் பாதிக்கப்பட்டார்கள். எனினும் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் முன்னாள் போராளிகளே.

களமுனையில் கையிழந்து, காலிழந்து, கண்ணிழந்து ஊனமுற்ற போராளிகளது நிலைமை கவலை தருவதாக உள்ளது. இதில் கொடுமை என்னவென்றால் தமிழ் சமூகம் இவர்களுக்கு உதவப் போதியளவு முன்வரவில்லை என்ற செய்தியகும்.

போர் முடிந்த போது இராணுவத்திடம் சரண் அடைந்த போராளிகள் முதலில் தடுப்பு முகாம்களில் தங்கவைத்துப் பின்னர் புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றப்பட்டனர். அவ்வாறு மாற்றப்பட்ட போராளிகளின் எண்ணிக்கை 11,808 பேர் ஆவர். இவர்களில் பலர் ஊனமுற்ற போராளிகள் ஆவர். புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் பெரிய விழுக்காட்டினர் விடுவிக்கப்பட்டு விட்டனர். ஆனால் பல முன்னாள் போராளிகள், விடுதலை நாளை எதிர்நோக்கி, புனர்வாழ்வு முகாம்களில் உள்ளனர். விடுவிக்கப்பட்டவர்கள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் பெரும்பாலும் வாழ்கின்றனர். கிழக்கு மாகாணத்திலும் மிகச் சொற்ப அளவில் நாட்டின் மற்றைய பகுதிகளிலும் உள்ளனர். தமிழகத்திலும் நூற்றுக்கணக்கான முன்னாள் போராளிகள் முகாம்களில் இருக்கிறார்கள்.

"இனத்தின் விடுதலைக்காகத், தமது உயிரைப் பணயம் வைத்து போர் புரிந்தவர்கள்" என்று போர் நடந்த காலத்தில் புலம்பெயர் தமிழர்களால் கொண்டாடப்பட்ட இவர்கள், தற்போது என்ன ஆனார்கள், எப்படி உள்ளார்கள், இவர்களின் எதிர்காலம் என்ன என்பது குறித்து கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

போர் முடிந்தபின் கைது செய்யப்பட்டு, அல்லது சரணடைந்து தடுப்பு முகாம்களில்

இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ வேண்டியுள்ளது. முகாம்களில் வசிப்போர் மாலை 6.00 மணிக்குள் தத்தம் முகாமிற்குத் திரும்பிவிட வேண்டும். திரும்பத் தவறுபுபவர்கள் தண்டனையை அனுபவிக்க வேண்டி ஏற்படும்.

தமிழ்நாட்டுக்கு செல்லும் ஈழ அகதிகளில், போராளி இயக்கத்தில் இருந்தவர்கள் மற்றும் குறிப்பிட்ட குற்ற செயல்களில் ஈடுபட்டு நீதிமன்றத்தில் வழக்குகளைச் சந்தித்து வருபவர்கள் தனியாக பிரிக்கப்பட்டு, சென்னையை ஒட்டிய பூந்தமல்லி மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள உயர்மட்ட பாதுகாப்புடன் கூடிய முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டு முகாம்களில் வாழும் ஈழத்தமிழ் எதிலி வீட்டுப் பெண்களை கியூ பிரிவு உளவுத்துறை வல்லுறவுக்கு ஆளாக்குவதும் மனைவியை அனுப்ப மறுக்கும் கணவன் மீது பொய் வழக்குப் போடுவதும் முகாகம்களுக்கு அருகில் உள்ள காவல் நிலையங்களின் அதிகாரிகள் கேட்கும் போதெல்லாம், அவர்களுக்குத் தேவைப்படும் வழக்குகளில் "குற்றத்தை ஒப்புக் கொண்டு சிறைத்தண்டனை அனுபவிப்பதற்கு" ஆள் அனுப்ப வேண்டியிருப்பதும் ஈழத்தமிழ் ஏதிலிகள் அனுபவித்து வரும் இன்னபிற துயரங்களும் தமிழக மக்கள் பலரும் அறியாதவை.

இந்தியா முழுவதிலுமே கோடிக்கணக்கான மக்கள் பசி பட்டினியோடு வாழ்கையில் மூன்று நேரமும் பசியாறத் தேவையான பணத்தை அரசு வழங்கும் என எதிர்பார்க்க முடியாதுதான். ஆனால், குடிப்பதற்குத் தண்ணீர் கூடவா தரமுடியாது? இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். பக்கத்தில் உள்ள கர்நாடகத்தில் திபேத்திய ஏதிலிகள் சகல வசதிகளோடு வாழ்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், பவுத்த விகாரைகள், காப்பகங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு குட்டி திபேத்தைப் பார்ப்பது போன்று தோற்றமளிக்கிறது. இந்திய அரசு தமிழ் ஏதிலிகளை மட்டும ஏன் பாரபட்சமாக நடத்துகிறது?

வட கிழக்கை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இராணுவமே எமது மக்களின் துன்ப துயரங்களுக்கு முதல் காரணம் ஆவர். இராணுவம் மக்களது உறுதிக் காணிகளைப் பறித்துள்ளது. அந்தக் காணிகளில் முகாம்கள், படைக் குடியிருப்புக்கள், உல்லாச விடுதிகள், நட்சத்திர உணவகங்கள், பவத்த விகாரைகள், நீச்சல் தடாகங்கள் போன்றவற்றை இராணுவம் நிறுவி உள்ளது.

வலிகாமம் வடக்கில் இருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த 5878 குடும்பங்களைச் சேர்ந்த 19765 பேர் மீள் குடியேற்றப்படவில்லை. இவர்களுக்குச் சொந்தமான 6382 ஏக்கர் காணியை இராணுவம் கைப்பற்றியுள்ளது. இதனால் தங்களது சொந்த வீடு வாசல்களுக்குத் திரும்பலாம் என்ற அவர்களது கனவு நொருக்கப்பட்டுவிட்டது.

இதே போல் சம்பூர் பகுதிகளில் 2006 இல் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்த மக்களில் ஒரு சாரார் இன்னும் மீள்குடியமர்த்தப் படவில்லை. வாழையடி வாழையாக வாழ்ந்த இந்தக் கிராம மக்களுக்குச் சொந்தமான 10,000 ஏக்கர் நிலம் உயர்பாதுகாப்பு வலயமாக இராணுவம் அறிவித்துள்ளது. இதில் 500 ஏக்கர் அனல்மின் நிலையம் கட்டவும் மேலும் 1,000 ஏக்கர் கடற்படை முகாம் நிறுவவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்களில் சில கிராமங்களைச் சார்ந்த ஒரு சாரார் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டாலும் இன்னும் ஆயிரக்கணக்கான மக்கள் தெருவோரம் குடிசைகள் அமைத்து வாழ்கிறார்கள்.

முல்லைத்தீவில் மட்டும் 34,191 ஏக்கர் நிலம் அபகரிப்பு

வடமாகாண சபை காணி அபகரிப்புத் தொடர்பாக கடந்த ஒக்தோபர் 8 ஆம் நாள் ஒருசிறப்பு அமர்வை நடத்தியது. இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் குறைந்தது 34,191 ஏக்கர் நிலம் அபகரிக்கப்பட்டுள்ளதாக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா இரவிகரன் புள்ளிவிபரங்களுடன் வெளிப்படுத்தினார்.

அவர் வெளிப்படுத்திய விபரங்களின் படி முல்லைத்தீவில் பிரதேச வாரியாக குறைந்தது கரைதுறைப்பற்று - 17,919 ஏக்கர், ஒட்டுசுட்டான் - 12585 ஏக்கர், புதுக்குடியிருப்பு - 1,008 ஏக்கர், துணுக்காய் - 2,350 ஏக்கர், மாந்தை கிழக்கு - 329 ஏக்கர் என்றவாறு காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. மணலாறு, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், நாயாறு, கேப்பாபுலவு உள்ளிட்ட மாவட்டத்தின் சகல இடங்களிலும் நடைபெறுகிற நில அபகரிப்பை சான்றுகளுடன் வெளிப்படுத்தினார்.

மற்றும் சுதந்திரபுரம், தேவிபுரம், முத்தையன்கட்டு, திருமுறிகண்டி, வசந்தநகர் உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 139 குடும்பங்களுக்கு மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழ் காணிகள் வழங்கப்படாததையும் இதனால் வீட்டுத் திட்டமும் கிடைக்காமல் அவர்கள் அலைகிற நிலையையும் எடுத்துக்கூறினார். இவர்கள் கடந்த 30 ஆண்டுகளாக அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

## தமிழ்ச் சிறுவர்கள்

வடக்கில் சிறீலங்கா அரச படைகளால் நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்களினால் சிறுவர்கள் உடலாலும் உள்ளத்தாலும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தமது தாய் தந்தையரைப் போர்க் காலத்தில் பலிகொடுத்து திக்கற்றவர்களாக்கப் பட்டுள்ளனர். புத்தகப் பொதிகளுக்குப் பதிலாக அவர்கள் தமது உடல்களில் எறிகணைத் துவள்களையும் குண்டுகளையும் தாங்கியவாறே பள்ளிக்கூடம் போகின்றனர். இவ்வாறு 1,200 க்கும் மேல்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள். அறுவை வைத்தியம் மூலம் அவற்றை அகற்ற பண வசதியில்லாமல் உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர்கள் தமது நாளாந்த கடமைகளை ஆற்றி வருகின்றனர். இதன் காரணமாக வலிப்பு போன்ற நோய்கள் ஏற்பட்டு வகுப்பறைகளுக்குள்ளேயே மாணவர்கள் மயங்கி விழும் அவலநிலையும் காணப்படுகிறது. நூற்றுக்கணக்கான சிறார்கள் அன்பு இல்லம், குருகுலம் போன்ற இல்லங்களில் வாழ்கிறார்கள். மேலும் பெண்கள் சிறுவர்கள் மீது கட்டவுழ்த்து விடப்பட்டிருக்கும் தனி மனித அச்சுறுத்தல், சட்ட விரோதக் கைதுகள் மற்றும் போதிய காரணங்களின்றி, பயங்கரவாதச் சட்டங்களின் மூலம் பெண்களைக் கைது செய்து சிறையில் அடைக்கிறது.

## தமிழ் முதியோர்கள்

முதியவர்கள் எமது மண்ணின் சொத்துக்கள். அவர்கள் தமது குடும்பத்துக்காகவும் ஊருக்காகவும் உழைத்திருக்கிறார்கள். சமூக அடிப்டையிலும் பொருளாதார அடிப்படையிலும் தன்னலமின்றி பொதுநலத்துக்காக அவர்கள் உழைத்திருக்கிறார்கள். அவர்களிடமிருந்து வாழ்க்கை அநுபவங்களை இளையோர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். வறுமை, குடும்ப பொருளாதார நெருக்கடி நிலைமைகள் காரணமாக உணவு, பாதுகாப்பு, நல்வாழ்வு குறைபாடுகளுடனேயே முதியோர்கள் வாழுகின்றனர். அவர்களைப் பிள்ளைகள் முதியோர் இல்லங்களில் பாரப்படுத்தி விட்டுச்செல்லும் நிகழ்வுகளும் நடக்கின்றன. பெற்றோர்களையும் வயதானவர்களையும் பாரம் என்று கருதி முதியோர் இல்லங்களுக்குக் கொண்டு போய் விட்டு விட்டு வந்து விடுகின்றனர். வயது வந்தவர்களைக் கூடவே வைத்துப் பராமரிக்கும் பாதுகாக்கும் மதிப்பளிக்கும் கூட்டுக் குடும்ப மரபும் அருகி வருகிறது. இதனால் தனிமையும் வெறுமையுமே மிஞ்சுகின்றன. பாதுகாப்பின்மை காரணமாக வயதானவர்களுக்கு மன அழுத்தமும் விரக்தியும் அதிகரிக்கின்றன.

போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டம் தர்மபுரம் போன்ற இடங்களில் கவலைக்கிடமான நிலையிலேயே முதியவர்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. மீண்டும் தமது பழைய வாழ்க்கைக்குத் திரும்புவதற்குத் தவித்துக் கொண்டிருக்கின்ற குடும்பங்களில் உள்ள முதியவர்களைப் பராமரிக்க முடியாதிருப்பதனால், அவர்கள் பிச்சை எடுக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். தர்மபுரம் கிராமத்தில் 20 பேர் வரையில் பிச்சை எடுத்துப் பிழைப்பதாக பிபிசி தமிழோசைக்கு இந்தக் கிராம முதியோர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

அண்மையில் திருகோணமலை சம்பூர் அகதிகள் முகாமில் உண்பதற்கு உணவின்றி பசி தாங்க முடியாது கழுத்தை அறுத்து தற்கொலை செய்ய ஒரு முதியவர் முயன்றுள்ளார். இவ்வாறு தற்கொலைக்கு முயற்சித்தவர் சம்பூர் பகுதியை பிறப்பிடமாகவும் கிளிவெட்டி அகதி முகாமில் சிறைக்கைதி போல வாழ்ந்து வரும் மயில்வாகனம் தாமோதரம் (78) ஆவார். தமது சொந்த வீடுவாசல்களில் மீள் குடியமர்த்தப் பட்டால் வீட்டுத் தோட்டம் செய்தாவது சீவியத்தைக் 'கழிக்க முடியும் எனவும் அகதி முகாமில் கைதிகள் போல வாழவேண்டிய அவலம் இருக்காதெனவும் பாதிக்கப்பட்டவர்கள் கவலையுடன் சொல்கிறார்கள்.

அனைத்துலக முதியோர் நாளையொட்டி அனைத்துலக மட்டத்தில் நடத்தப்பட்ட ஆய்வொன்றில் முதியோரைப் பராமரிப்பது தொடர்பில் தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கை 96 நாடுகளில் 43 ஆவது இடத்தில் உள்ளது.

எமது மக்களது துன்பங்கள், துயரங்கள், அவலங்கள், அல்லல்கள் தொடர்கதையாக நீண்டு கொண்டு போகிறது. சொந்த நாட்டிலேயே ஏதிலிகளாக, அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள்.

எமது மக்களின் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், பொது இடங்களில் கூடும் சுதந்திரம், சொத்துரிமைச் சுதந்திரம் தொடர்ந்து சிங்கள ஆட்சியாளர்களால் மறுக்கப்பட்டு வருகிறது. அவர்களது இயல்பு வாழ்க்கை படு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

எமது மக்கள் தமது உரிமைகளைக் பெற்று சமத்துவமாகவும் தன்மானத்தோடும் பாதுகாப்போடும் தங்களது சொந்த வீடுவாசல்களில் வாழ வேண்டும். அந்த நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

இராணுவ ஆக்கிரமிப்பினால் அல்லல்படும் முன்னாள் போராளிகள் தமிழ் ஏதிலிகள், கைம்பெண்கள், முதியோர், சிறார்கள் ஆகியோருக்கு விடிவு எப்போது?

அன்புநெறி
Anpuneri
Humanitarian Relief Organization.
Annual Dinner 2014
Dec 5th, Friday 2014 7:00 pm.
New Jaasmin Banquet Hall 90 Nolan Crt, Markham, ON L3R 4L9
www.anpunericanada.org | info@anpunericanada.org | Tel: 647-800-8724

இ குருவி பெருமையுடன் வழ... 2014 , Dec 12th 2014 @ 6.00pm
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீன மக்கள் குடியரசின் ஆட்சிக்கு உட்பட்ட ஹொங்காங்கில் இப்போது இளைஞர்களும் மாணவர்களும் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கியுள்ளனர்.

செப்டம்பர் 26 முதல் இந்தக் கிளர்ச்சி வேகம் பிடித்திருக்கிறது.

சுமார் 80,000 பேர் நகரின் மையத்தில் திரண்டு, தங்களுக்கு வாக்குறுதி அளித்தபடி, முழு ஜனநாயக உரிமைகளை வழங்க வேண்டும் என்று

# சீனப் புரட்சி 2014





போராடிவருகின்றனர். இவர்களைக் கலைக்க பெப்பர் ஸ்பிரேயையும் கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும் போலீஸார் பயன்படுத்தினர்.

ஷதியானென்மென் சதுக்கத்தில் இதே போல ஜனநாயக உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த பெய்ஜிங் நகர மாணவர்கள், சீன ராணுவத்தின் டாங்கிப் படையால் நசுக்கி அழித்து ஒடுக்கப்பட்டார்கள். அந்தக் கிளர்ச்சியில் பங்கேற்றோர் எத்தனை பேர், இறந்தவர்கள் எத்தனை பேர், வீடு திரும்பியோர் எத்தனை பேர், உடலுழைப்பு முகாம்களுக்கு அனுப்பப்பட்டோர் எத்தனை பேர் என்றெல்லாம் இதுவரை துல்லியமாக யாருக்கும் தெரியாது. அதேபோல் இந்தப் போராட்டமும் நசுக்கப் படுமோ என்ற அச்சம் நிலவுகிறது.

சுமார் 155 ஆண்டுகள் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த ஹொங்காங்கை சீனத்திடம் ஒப்படைக்க பிரிட்டன் 1984-ல் ஒப்பந்தம் செய்துகொண்டது. 1997 ஜூலை 1 முதல் ஹொங்காங் சிறப்பு நிர்வாகப் பகுதியாக அறிவிக்கப்பட்டது. "ஒரு நாடு, இரு ஆட்சி முறைகள்" என்ற வகையில் ஹொங்காங்கும் மகாவ் என்ற பகுதியும் சுயேச்சை அதிகாரங்களுடன் சீனத்துடன் இணைக்கப்பட்டன. சீனா மீண்டும் 1997-ல் தன் பொறுப்பில் ஏற்றது. ராணுவம், வெளியுறவு ஆகிய இரு துறைகள் மட்டுமே பிரதான நிலப் பகுதியான சீனத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும், இதர துறைகள் சிறப்பு நிர்வாகப் பகுதியின் சுயேச்சை ஆட்சியதிகாரத்தின் கீழ் வரும் என்று உறுதியளிக்கப்பட்டது. ஹொங்காங்கின் நீதித் துறை சுயேச்சையானது. அதுவும் அப்படியே பராமரிக்கப்படுகிறது. கல்விமுறை பிரிட்டிகூஷ் கல்வி முறையை ஒட்டியே இருந்தது. இப்போது முதல் முறையாக சீன அரசு அதில் சில மாறுதல்களைச் செய்துகொள்ளுமாறு கூறியிருக்கிறது.

ஹொங்காங்கின் அரசியல் உரிமையில் தலையிட மாட்டோம் என்று கூறியிருந்தது சீன கம்யூனிஸ்ட் கட்சி. கடந்த ஜூலை மாதம் பெய்ஜிங் வெளியிட்ட வெள்ளை அறிக்கை ஒன்று ஹொங்காங்கின் சிறப்பு அதிகாரக் குழுவுக்கு உள்ள அதிகாரங்கள் அனைத்தும் தங்களால் அளிக்கப்படுவது என்றும், 2017 பொதுத்தேர்தல் வேட்புமனுத் தாக்கலுக்கு முன்னதாகவே வேட்பாளர்களைப் பற்றிய தகவல்களைத் தங்களிடம் தர வேண்டும் என்றும் தங்களால் அங்கீகரிக் கப்பட்டவர்கள் மட்டுமே வேட்பாளர் ஆக முடியும் என்றும் திட்டவட்டமாகக் கூறியது. அப்போதுதான் பெரிதானது பிரச்சினை. சீன அரசின் போக்கைக் கண்டித்து நகரின் மையப் பகுதியில் வண்ணவண்ணக் குடைகளின் கீழ் திரண்டு நின்று, அரசியல் சுதந்திரத்தில் கைவைக்கக் கூடாது என்று கோஷமிடுகின்றனர். இந்த எழுச்சியை "குடைப் புரட்சி" என்று அரசியல் விமர்சகர்கள் வர்ணிக்கின்றனர்.

> ஹொங்காங் மக்கள் வெறும் அரசியல் உரிமைகளுக்காக மட்டும் போராடவில்லை, தங்களுடைய தனித்துவமான கலாச்சாரம், கல்வி, வியாபார, தொழில் உரிமைகள் போன்றவற்றுக்காகவும் போராடுகின்றனர்.

கான்டன் மொழி பேசும் இளைஞர்கள் சீன ஆதிக்கத்தின் கீழ் வந்ததும் மண்டாரினையும் கற்றுக்கொண்டு சரளமாகப் பேசுகின்றனர். ஹொங்காங்கின் செல்வ வளம், கலாச்சாரத் தனித்தன்மை, பொழுதுபோக்கு அம்சங்கள் போன்றவற்றுக்காக ஆண்டுதோறும் லட்சக் கணக்கான சீனர்கள் சீனாவின் பிற மாநிலங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகளாக வருகின்றனர். எனவே, ஹொங்காங்கில் வழங்கும் அரசியல் உரிமைகள் தங்களுக்கு ஏன் தரப்படவில்லை என்று பிற மாநிலங்களிலும் எதிர் காலத்தில் கேட்கக்கூடும் என்பதால், சீன அரசு இப் போது ஹொங்காங்கின் ஜனநாயக உரிமைகளில் கைவைக்கத் தொடங்கியிருக்கிறது என்கிறார்கள் மேற்கு நாட்டு அரசியல் பார்வையாளர்கள்.

ஹொங்காங்கின் வர்த்தகத்தில் பிரதான நிலப் பகுதியில் சீனர்களே இப்போது ஆதிக்கம் செலுத்துகின்றனர் நிலம், அடுக்குமாடி விலைகள் சாதாரண மக்கள் வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்துவிட்டது. வீட்டுக் கடன் வட்டி அதிகரித்துவிட்டது. இதனால் தங்களின் எதிர்காலம் குறித்து ஹொங்காங் மக்களிடம் அச்சமும் கவலையும் அதிகரித்துவருகிறது. கிளர்ச்சிக்கு இவையும் உள்ளார்ந்த காரணங்கள்.

மக்களுக்கு எது நல்லது என்பதை கம்யூனிஸ்ட் கட்சியால் மட்டும்தான் தீர்மானிக்க முடியும் என்று சீன அரசு கருதுகிறது. கடந்த சில மாதங்களாக ஹொங்காங் நிர்வாகம் தன்னுடைய மக்களுக்குப் பதில் சொல்வதைவிட, மத்திய சீன அரசின் கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கவே நேரம் சரியாக இருக்கிறது.

சுதந்திர வர்த்தகப் பிரதேசமான ஹொங்காங் அரசியல் போராட்டப் பிரதேசமாக மாறிக்கொண்டுவருகிறது


City Councillor
Neethan Shan
Scarborough First
✓subways ✓community centres ✓local jobs ✓safety



நீதன் சண் (NEETHAN SHAN)
ரொரன்ரோ மாநகர சபை, 42ஆம் வட்டாரம்
– கவுன்சிலர் வேட்பாளர்

கனடாவில் கடந்த 19 வருடங்களாக சமூக, கல்வி, கலை, மொழி, அரசியல், ஊடகத்துறை ஆகிய பல துறைகளுடன் தொடர்பான பல்வேறு பணிகளில் தொண்டாற்றியுள்ள நீதன் சண் ஆகிய நான், எதிர்வரும் தேர்தலில் ரொரன்ரோ மாநகர சபையின் 42ஆம் வட்டாரக் கவுன்சிலராகத் தெரிவு செய்யப்படுவதற்கு உங்களின் ஆதரவை அன்புடன் வேண்டி நிற்கின்றேன்.

- போக்குவரத்துச் சேவை, சுரங்க இரயில் பாதை விரிவாக்கம்
- வேலைவாய்ப்பு அதிகரிப்பு, பொருளாதார அபிவிருத்தி
- சனசமூக நிலைய சேவை விரிவாக்கம்

இவை போன்ற பல செயற்திட்டங்கள் அடங்கிய எனது தேர்தல் விஞ்ஞாபனத்தை www.neethanshan.ca என்ற இணையத்தளத்திற்குச் சென்று பார்வையிடலாம்.

கடந்த தேர்தலில் எனக்கு சுமார் 13,000 வாக்குகளை அளித்த உங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி. தொடர்ந்தும் எனக்கு நீங்கள் அளித்து வரும் அன்புக்கும், ஆசிகளுக்கும், ஆதரவுக்கும் நான் என்றென்றும் நன்றியுடையேன்.

இம்முறை கடுமையான இழுபறியான போட்டி எனக்கும் ரேமண்ட் சோ (Raymond Cho) அவர்களுக்கும் இடையே மீண்டும் உருவாகியுள்ளது. உங்கள் வாக்குகளை இத்தேர்தலில் மீண்டும் எனக்கு அளித்து எனது வெற்றிக்கும், எமது சமூகத்தின் வெற்றிக்கும் உதவுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

எனது வேட்பாளர் இலக்கம் 75

முற்கூட்டிய வாக்குப்பதிவு ஒக்டோபர் 14ஆம் திகதி செவ்வாய்க் கிழமையில் இருந்து ஒக்டோபர் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை 10 மணிக்குத் தொடங்கி மாலை 7 மணி வரை நடைபெறும்.

வாக்களிக்கும் இடம்: Burrows Hall Community Centre ([illegible])

தேர்தல் வாக்களிப்பு நாள்: ஒக்டோபர் 27, திங்கட்கிழமை காலை 10 மணியிலிருந்து இரவு 8 மணிவரை

எனது தேர்தல் பிரசாரக் குழுவில் இணைந்து செயலாற்ற விரும்புபவர்கள் எனது தேர்தல் தலைமைப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளலாம்.

"Neethan Shan, Ward 42, Scarborough-Rouge River. This remarkable Tamil-Canadian has an impressive record of community service, including advocacy for children, youth and immigrants. Shan has political experience as a school board trustee when he lived in Markham. He's a far better choice than the hapless Raymond Cho, an inarticulate and ineffective councillor who has clung to municipal office for more than 20 years."

Toronto Star - October 11, 2014

416-287-9292 NeethanShan.ca 5790 Sheppard Avenue East, Unit 1, Scarborough, M1B 1H9


இ குருவி பெருமையுடன் வழ[illegible] 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எபோலா வைரஸ்

கினியா நாட்டின் குயிக்கேடாரய் நகரில் வசித்தான் அந்த இரண்டு வயதுச் சிறுவன். ·அவனுக்கு முதலில் காய்ச்சல் ஏற்பட்டு அழுது கொண்டிருந்தான். பிறகு வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்பட்டு அழுது கொண்டிருந்தான். தனக்கு பீடித்திருப்பது உலகம் இதுவரை அறிந்திராத ஒரு புதிய நோய் என்பது அவனுக்கு அப்போது தெரியாது. அவனது தாயும் பாட்டியும் வைத்தியசாலைக்கு அவனை எடுத்துச் சென்றனர். வைத்தியர்கள் முதலில் சாதாரண நோய்தான் என்று நினைத்து மருந்து கொடுத்கிறார்கள். ஆனால் நோய் குணமடைவதாக இல்லை. யாருக்கும் எதுவும் புரியவில்லை. ஏதோ ஒருவகை நோய் என்ற அளவில் மட்டுமே

**அவனுக்கான கவனிப்பு இருக்க...**
**அவன் இறந்து போனான்.**

அதன்பின் அவனது தாய்க்கு அதே பிரச்சனைகள் ஏற்பட்டன. பாட்டிக்கும் அதே பிரச்சனைகள்' தாயும், பாட்டியும் இறந்தனர். அவர்களின் ஈமச்சடங்குக்கு வந்த இரண்டு பேர் பின்பு இதேபோல சிரமத்துக்குள்ளாகி இறந்து போயினர். அதைத் தொடர்ந்து அவர்களுக்கு வைத்தியம் செய்த சுகாதார ஊழியரும், டாக்டரும் இறந்தனர். அப்படியே அருகிலுள்ள நகரங்களில் வசித்த உறவினர்களுக்கும் இந்நோய் பரவி'. படிப்படியாய் ஒட்டுமொத்த கினியா நாட்டிலும் நோயின் சீற்றம் உறைந்தது. அதன்பின்தான் நோயிள் தன்மை சிலருக்குப் புரிய ஆரம்பித்தது. "ஒரு வைரஸ் பரவுகிறது..." இந்த வைரஸ் நோய் குறித்து அரசின் கவனம் திரும்பியது. சுகாதார அதிகாரிகள் இந்தநோய் பற்றி அறிய அரம்பித்தனர். நோய் குறித்து அறிவிப்பு வெளியிட்டது. உலக அளவில் கவனம் திரும்பியது. "எபோலோ" வைரஸ் என அந்த வைரஸ் பெயர் இடப்படுகிறது. எபோலா வைரஸ் பிடித்தால் சாவு நிச்சயம் என்ற பீதி உலகத்தில் பரவ ஆரம்பித்தது. அதற்கிடையில் இந்நோய் கினியாவின் அருகிலுள்ள சியாராலியோன், லைபீரியா ஆகிய நாடுகளில் வசித்த பலருக்கு பரவியது. அதைத் தொடர்ந்து அடுத்தடுத்த நாடுகளான கானா, நைஜீரியா, கேமரூன், காங்கோ ஆகியவற்றின் மக்களுக்கும் பரவி உலகளாவிய நோயாக மாறிக்கொண்டு வருகிறது. குறுகிய காலத்துக்குள்ளாகவே பல்லாயிரக்கணக்கானோரைத் தாக்கி, இதுவரை ஆயிரக்கணக்கில் மக்களைப் பலி கொண்டுவிட்டது. உலக சுகாதார நிறுவனத்தின் கணக்குப்படி சுமார் 3,400 பேர்வரை இந்நோயால் மாண்டிருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது.

இந்தக் கொடிய எபோலோ வைரஸ் நோய் சாகடிக்கும் வீரியம் கொண்டதாகக் இந்த வருடத்தின் ஆரம்பகாலங்களிலிருந்துதான் அறியப்பட்டாலும், இது 1976லேயே கொங்கோ நாட்டில் காணப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. கொங்கோ நாட்டின் எபோலோ நதிக்கரையில் முதன்முதலாக பரவியதால்தான் இதற்கு "எபோலோ வைரஸ்" என பின்னர் பெயரிட்டார்கள்.

எபோலா வைரஸ் விலங்குகளிடம் இருந்துதான் மனிதர்களுக்கு பரவுகிறது. பழம்தின்னி வவ்வால் மூலமும், அவற்றை உணவுக்காக வேட்டையாடும் மற்ற மிருகங்கள் மூலமும் இந்த வைரஸ் பரவுவதாகக் கண்டுபிடித்துள்ளனர். வைரஸ் தாக்கிய விலங்குளின் ரத்தம், மலம் உள்ளிட்டவற்றில் இருந்து பரவுகிறது. பாதிக்கப்பட்ட கால்நடைகளை உண்ணுதல், நெருங்கிப் பழகுதல், அவற்றின் கழிவுகள் உடலில் படுதல் ஆகிய காரணங்களாலும் பரவுவதாகவும் அறியப்படுகிறது..

எபோலா வைரஸ் தாக்கி அறிகுறிகள் தெரிய 2 முதல் 21 நாட்க்ள் வரை கூட ஆகலாம்.

நோய்க்கான அறிகுறிகள் என்ன என்று பார்ப்போம். இந்த எபோலா வைரஸ் தாக்கினால் காய்ச்சல், உடல் சோர்வு, தசை வலி, தொண்டை வலி, தலைவலி ஆகியவை எற்படும். பிறகு வாந்தி, பேதி, சிறுநீரக மற்றும் நுரையீரல் செயல் இழப்பு, சில நேரம் வெளி மற்றும் உடலுக்குள் ரத்தக்கசிவு என்பனவற்றில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேலான பிரச்சனைகள் உருவாகும்.

எபோலா நோய்க்கு இது தான் சிகிச்சை என்று இதுவரை ஒன்றும் இல்லை. இருப்பினும் தீவிர சிகிச்சை மூலம் சிலர் குணமடையலாம் என்கிறார்கள். ஆனால் தீவிர சிகிச்சை எது என்பது இன்னும் தெளிவில்லை. ஆக சாவு நிச்சயம். எபோலா நோயை தடுக்க மருந்துகள் பரிசோதனை செய்யப்பட்ட போதிலும் அவை சந்தையில் தற்போது இல்லை எனினும் நோயின் பாதிப்பைக் கட்டுப்படுத்த தீவிர சிகிச்சைகள் பற்பல மேற்கொள்ளப்படுகின்றன. உடலின் திரவங்கள் வறட்சி அடையாமலிருக்க சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. காய்ச்சலுக்கு கொடுக்கப்படும் மருந்துகள் வழங்கப்படுகின்றன. நோயாளியின் ரத்த அழுத்தம் சீராக இருக்க சிகிச்சை அளிக்கப்படுகிறது. தேவைப்படுவோருக்கு ஒட்சிசனும் அளிக்கப்படுகிறது. இழந்த ரத்தத்துக்கு பதிலாக புதிய ரத்தம் ஏற்றப்படுகிறது. நோய் தொற்று ஏற்படாமல் இருக்க அன்டிபயோடிக் மருந்துகள் வழங்கப்படுகின்றன. எபோலோ வைரஸ் நோயியிலிருந்து தடுத்துக்கொள்ள, நோய் தொற்றிய நபருடன் எவ்வித. உடல் ரீதியான உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது, எபோலோ தாக்கியவருடன் கைகுலுக்கக் கூடாது. கைகளை சோப்பினால் சுத்தமாகக் கழுவ வேண்டும்.

கனடாவில் இந்த வைரஸ் குறித்த பீதி இருப்பினும், நோய் இதுவரை யாரையும் தாக்கி அழித்தாக அறியப்படவில்லை. பலநாடுகளிலிருந்தும் மக்கள் இங்கு வருவதால் இதுபோன்ற நோய்களின் பரவல் குறித்த அச்சம் மட்டும் சுகாதார அதிகாரிகளிடம் மிகவும் வேகமாகப் பரவிவருகிறது. நோயின் பரவலை கட்டுப்படுத்த கனடிய அரசு உலக சுகாதார நிறுவனத்திற்கு பரீட்சார்த்த தடுப்பு மருந்துகளை அன்பளிப்பாக அளித்திருக்கிறது. அம்மருந்துகளை கனடாவில் உபயோகிக்க வேண்டிய தேவை வராது என்று நம்புவோமாக.

நாராயணா சாமிஜி






Dear Friends,

Election Day on Monday, October 27th Markham have the opportunity to exercise their responsibility to elect the right person for the important position of Public School Board Trustee.

I am grateful and honoured that in 2010 you chose to elect me as your School Board Trustee in Markham Ward 7 and 8. I sincerely wish to continue to work in partnership with the parents and diverse communities of Markham to help develop an improved school system that addresses the needs of all students.

Working in cooperation with my Trustee colleagues on the York Region District School Board, we have succeeded in producing some important improvements:

Anti-Bullying Policy designed to ensure a safe, secure, and comforting environment in which all students can be inspired to achieve their full potential.

21st Century Curriculum – Inquiry based learning, letting technology in our classrooms.

Expansion of Community Classrooms in which students with diverse social needs are provided the opportunity to succeed.

I am also very happy and very proud to point out the hiring of the very first South Asian Heritage Director of Education in Ontario. In a community such as Markham that is undergoing significant demographic changes, I cannot stress enough the importance of developing educational leaders who can better reflect the growing diversity of our communities.

All of this is just a beginning. We have much, much more to accomplish. This is why I am seeking to be re-elected as your School Board Trustee for Markham Ward 7 & 8 and it is why I am grateful and honoured to ask for your support. I want to continue to be a strong ambassador for public education in my role as an experienced advocate for Markham's students and parents.

I am both proud and humbled to have been awarded the Queen Elizabeth II Diamond Jubilee Medal in recognition of my efforts as a front-line social services worker in Markham in helping to improve the lives of youths and seniors and for my efforts in the as your School Board Trustee for Ward 7 & 8 in helping to reform our educational system.

If I am granted the privilege of being re-elected as your School Board Trustee, I will work tirelessly to achieve vitally important improvements to our school system. All of these advancements that I seek are based upon one guiding principle: Every decision 2014 is rapidly approaching and the residents of

and policy change must address the best interests of our students in providing them

with the best opportunity to achieve their fullest potential.Every decision and policy change must address the best interests of our students in providing them with the best opportunity to achieve their fullest potential.

Juanita Nathan

Re-Elect
Juanita Nathan
As your local School Board Trustee

Experienced Leadership
- Community Outreach Worker
- Youth Addiction Counselor
- Domestic Abuse Counselor
- Parenting Worker
- Senior Support Worker

Juanita is advocating for :
- Equity and Inclusivity
- Parent Engagement with schools
- Student Success and Well-being.

Advanced voting October 17-23
E-Day - October 27

PUTTING STUDENTS
647.504.2136
info@juanitanathan.ca
www.juanitanathan.ca

"Education needs to be at the top of the agenda in every community, in every school and in every family"
- Juanita Nathan



இ குருவி பெருமையுடன் வழங்கும் Birtha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்
THAMIL CREATIVE WRITERS ASSOCIATION

ரொறன்ரோ மாநகர சபைக்கு 42 ஆவது வட்டாரத்தில் போட்டியிடும்

# நீதன் சாண்

## அவர்களைத் தெரிவு செய்யுமாறு பிரபல ரொறன்ரோ ஸ்ரார் நாளேடு பரிந்துரை

ரொறன்ரோ மாநகர சபைக்கு 42 ஆவது வட்டாரத்தில் போட்டியிடும் நீதன் சாண் அவர்களைத் தெரிவு செய்யுமாறு பிரபல ரொறன்ரோ ஸ்ரார் நாளேடு பரிந்துரை

எதிர்வரும் ஒக்தோபர் 27 இல் ரொறன்ரோ மாநகர சபைக்கும் மார்க்கம் நகரசபைக்கும் அங்குள்ள கல்வி வாரியங்களின் அறங்காவலர் பதவிகளுக்கும் தேர்தல் நடைபெற இருக்கிறது.

இந்தத் தேர்தல்களில் 25 க்கும் மேற்பட்ட தமிழர்கள் போட்டியிடுகிறார்கள். இந்த எண்ணிக்கையில் தமிழர்கள் போட்டியிடுவது எமது அரசியல் விழிப்புணர்ச்சியையும் ஈடுபாட்டையும் காட்டுகிறது.

போட்டியிடுவோர் பதவிகளைப் பொது மக்களுக்குப் பணி செய்யக் கிடைத்த வாய்ப்பாகக் கருத வேண்டும். பொதுவாழ்வில் நேர்மை, தூய்மை, வாய்மை, பணிவு தேவை.

மக்களாட்சி முறைமையில் குடிமக்கள் விருப்புப்படி குடி வாழ்வு அமையும். இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன இடையில் வந்த குரங்கு ஆண்டால் என்ன என்று வாழாவிருத்தல் கூடாது. தமிழ் சமூகம் இங்கும் தாயகத்திலும் பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இன்று வெளிவந்த ரொறன்ரோ ஸ்ரார் நாளேடு ரொறன்ரோ மாநகரசபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்களில் தகுதி, திறமை, தொண்டு, சமூக ஈடுபாடு அடிப்படையில் யாரைத் தெரிவு செய்தால் நல்லது எனப் பரிந்துரை செய்திருக்கிறது. முதல் கட்டமாக வட்டாரம் 1, 2, 7, 18, 26, 42 மற்றும் 44 போட்டியிடும் வேட்பாளர்களில் ரொறன்ரோ ஸ்ரார் நாளேட்டின் தெரிவாக அடையாளம் காட்டியிருக்கிறது.

பரிந்துரைக்கப்பட்டவர்களில் 42 ஆவது வட்டாரத்தில் போட்டியிடும் திரு நீதன் சாண் அவர்கள் ஒருவராவர். கனேடிய தமிழரான திரு நீதன் ஒரு கவர்ச்சிகரமான சமூக சேவையாளர் என ரொறன்ரோ ஸ்ரார் புகழாரம் சூட்டியுள்ளது. மேலும் சிறார்கள், இளையோர் மற்றும் குடிவரவோர் போன்றவர்களது நலங்களுக்காக நீதன் சாண் குரல் கொடுத்து வருபவர் எனவும் குறிப்பிட்டுள்ளது. அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் 20 ஆண்டுகளாக மாநகர சபைப் பதவியில் ஒட்டிக் கொண்டுள்ள ஆகூழ் இல்லாத (அதிட்டமில்லாத) திறமையற்ற, தெளிவாகப் பேசும் ஆற்றலற்ற தற்போதைய உறுப்பினர் றேமொன்ட் சோ வை (He is a far better choice than the hapless Raymond Cho> an inarticulate and ineffective councillor who has clung to municipal office for more than 20 years) விட நீதன் சாண் மிக நல்ல தெரிவு எனத் தெரிவித்துள்ளது.

நீதன் சாண் அவர்களிடம் சமூக ஈடுபாடு, அறிவு, ஆற்றல், தமிழுணர்வு காணப்படுகின்றன. அவர் ஒரு சிறந்த — பொருத்தமான வேட்பாளர் என்பதில் எந்த ஐயமுமில்லை.

றேமொன்ட் சோ நல்லவர் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. இருந்தாலும் ஓய்வுபெறும் அகவையைத் தாண்டிய அவர் தனது இருபது ஆண்டுகால அரசியலில் இருந்து ஓய்வு பெற்று இளைய தலைமுறையினருக்கு வழிவிட்டுக் கொடுப்பதே அவருக்கும் 42 ஆவது வட்டார மக்களுக்கும் நல்லதென்றே நாமும் கருதுகிறோம்.

RE/MAX
Friendly Realtor
Thipan Raj
Sales Represntative
416-629-2444



Markham NS Dental
905-472-4111
www.MarkhamNSDental.com



STANDARD MORTGAGES INC.
RAJ SUBRAYAM AMP
Director
416.993.2638

Computek College
BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY
416.321.9911
www.computek.edu

Vote for Change,
Vote for the Future.

Brampton
வாழ் தமிழ் மக்களே!

உங்கள் பிரதிநிதியாக வட்டாரடம் 2&6
Councillor ஆக நிற்கும் தமிழ் மகன்
Cassian Joseph க்கு
உங்கள் வாக்கை அளியுங்கள்.



on October 27th, vote for
Cassian Joseph
for Brampton City Councillor
Ward 2&6
www.cassianjoseph.com
@CassianJoseph | facebook.com/cjosephforbcc

இ குருவி பெருமையுடன் வழங்கும் Bizma Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















## கனேடிய தமிழர் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இருதய நோய் தடுப்புக்கான நிதி திரட்டும் நடை பவனி

கனேடிய தமிழர் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி சேர் நடை பவனியில் இளைஞர்கள், முதியோர்கள் உட்பட பல நூற்றுக்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் பங்கு பற்றினார்கள். ஸ்காபுறோவில் லோறன்ஸ் வீதி- பிறிம்லி வீதி சந்திக்கு அண்மையிலுள்ள "தொம்சன் மெமோறியல் பார்க்" கில் அனைவரும் கூடினார்கள்.11 மணியளவில் நடைபவனி தொடங்கி 12.30 மணி யளவில் முடிவுக்கு வந்தது .கனடிய தமிழர் பேரவையினால் கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்க் கனடியர் நிதிசேர் நடை மூலம் பல இலாப நோக்கமற்ற அமைப்புகளுக்கு $250 000 இற்கும் அதிகமான நிதி சேகரித்து வழங்கப்பட்டுள்ளது.இம்முறை ஐம்பதாயிரம் டொலர்களை திரட்டலாம் என எதிர்பார்ப்பதாக நடை பவனிக்கான குழுவின் உப தலைவியான திருமதி கிறிஸ்டின் சீவரெட்னம் தெரிவித்தார் .இந் நிதிசேர் நடைநிகழ்வில் சேகரிக்கப்பட்ட நிதி உயிர் காக்கும் இதய நோய் ஆராய்ச்சி மற்றும் அறிவூட்டல் , இருதய நோய்,வலிப்பு ஆகியவற்றுக்கான சிகிச்சைக்காகப் பங்களிப்பை வழங்க தமிழ்க் கனடியர்கள் மூலம் வழங்கப்படுகின்றது .

அசாதாரண குளிரையும் பொருப்படுத்தாது நடை பவனியில் இளைஞர்களும் முதியோர்களும் பெருமளவில் பங்குபற்றியது ஒரு வரவேற்கத் தக்கதாக விடயமாக இருந்தது.இந்நிகழ்வின் புகைப்படங்களின் தொகுப்பு





















இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



past graduates



Teaching diploma graduates




lighting the lamp with the guru and past graduates



Smt.Nirainjana Chandru



Niruththa Niraignar Jothi



Mr.Janak Khendry



Niruththa Niraignar Gayathri



Niruththa Niraignar graduates

**கலைமன்றம் அதிபர் நிரஞ்சனா சந்துரு அவர்களது மாணவிகளின் "நிருத்த நிறைஞர் " பட்டமளிப்பு விழாவில் இகுருவி ஐயாவின் வண்ணப் புகைப் படங்கள்.**



Grade Three and four students



Grade two students



Niruththa Niraignar Yalani



Grade one students

இ குருவி பெருமையுடன் வழங்கும் Bitha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபரல் கட்சியின் ஸ்காபரோ ரூஜ் பார்க் தொகுதி வெற்றி

## "இது எங்களின் காலம் "


























பலத்த எதிர்பார்ப்புக்களிற்கிடையே இடம்பெற்ற ஸ்காபரோ ரூச்பார்க் தொகுதிக்கான லிபரல் கட்சியின் வேட்பாளர் தெரிவிற்கான போட்டியில் ஹரி ஆனந்தசங்கரி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

சுமார் ஆயிரம் பேர் அடங்கக்கூடிய மண்டபத்தில் பெருந்திரளான மக்கள் திரண்டு பொறுமையுடன் காத்திருந்து தமது கட்சியின் உள்ளகத் தேர்தலிற்கான வாக்களிப்பில் கலந்து கொண்டதோடு மண்டபம் நிறைந்த, மண்டபத்தின் வெளியரங்கு நிறைந்த ஆர்வலர்கள் முடிவுகளை அறிவதற்காகக் காத்திருந்தது இந்தத் தேர்தலின் முக்கியத்துவத்தைக் எடுத்துக் காட்டியது.

குறிப்பாக ஹரி அவர்களிற்கான ஆதரவாளர்கள் பட்டியலில் வயது முதிர்ந்தவர்கள், இடைவயதினர், இளையோர் என வயது வேறுபாடற்ற தொண்டரணி இடம்பெற்றிருந்ததோடு, அவர்களே இந்த வெற்றிக்கான அடித்தளமாகவும் அமைந்திருந்தனர்.

ஹரி ஆனந்தசங்கரி அவர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உலகத்தமிழர் பேரவை உள்ளிட்ட 85ற்கும் மேற்பட்ட கனடிய தமிழ்ச் சமூகம்சார் தலைவர்களும், கனடியத் தமிழ்க் காங்கிரஸ், அவுஸ்திரேலியத் தமிழ்க் காங்கிரஸ், நாடு கடந்த அரசு, போன்ற அமைப்புக்களின் இந்நாள் மற்றும முன்னாள் தலைவர்களும் ஆதரவளித்து ஹரியைத் தேர்வு செய்யுமாறு இந்தத் தொகுதியில் மேற்படி கட்சியின் அங்கத்துவம் பெற்ற தமிழ் மக்களைக் கோரியிருந்தனர்.

அடுத்த ஆட்சியை அமைக்கும் என எதிர்பார்க்கப்படும் லிபரல் கட்சியின் தலைவரான ஜஸ்ரின் ரூடோவுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள ஹரி ஆனந்தசங்கரி பொதுத் தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில், லிபரல் கட்சி ஆட்சியமைத்தால் அமைச்சராவதற்கான வாய்ப்புக்கள் மிக மிக அதிகமாக உள்ளதாக ஹரியின் தொண்டர்கள் தெரிவித்தனர்.

ஹரி ஆனந்தசங்கரி வெற்றி பெற்ற செய்தியை லிபரல் கட்சியின் உத்தியோகபூர்வ ருவிட்டரில் தெரிவிக்கப்பட்டதானது இந்தத் தேர்தல் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் கனடியத் தமிழர்களிற்கான தலைமைத்துவத்தை இந்தக் கட்சி எவ்வளவு தூரம் உண்ணிப்பாக கவனிக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டியது

இ குருவி பெருமையுடன் வழங்கும் *Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டொரோண்டோ புளுஸ் நடத்திய தியாக தீபங்கள் ஞாபகார்த்த மின்னொளியில் உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் புகை படத்துளிகள்














# Critical Illness Insurance without Medical Exam

Covers Cancer, Heart Attack, Bypass Surgery, Stroke, Coma and Paralysis

LaCapitale




இ குருவி பெருமையுடன் வழங்கும் *Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm*


noolaham.org | aavanaham.org

# ஈழநாடு நடத்திய இரவு விருந்து மூலம் 60 இலட்சம் ரூபாவை ஈழநாடு கொடுத்துதவியது

ஈழநாடு பத்திரிகை நடத்திய இன்னிசை விருந்தின் புகைப்படத் துளிகள் '

முல்லைத்தீவு புனிதபூமி இல்லத்திலுள்ள 320 குழந்தைகளினது வாழ்வாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்கான ஈழநாடு பத்திரிகை நடாத்திய இன்னிசை விருந்தும் இராப்போசன விருந்து நிகழ்வின் புகைப்பட காட்சிகள் ..

ஈழநாடு பத்திரிகை கடந்த 2011 ஆம் ஆண்டு தொடக்கம் அன்பு இல்லத்தில் உள்ள குழந்தைகளுக்கு ஒரு நாள் உணவு வழங்குவதற்கு கொடையுள்ளம் படைத்த வாசகர்களது ஆதரவோடு உதவி வருகிறது. இந்த இல்லத்தில் தொடக்கத்தில் 86 பிள்ளைகளே இருந்தார்கள். இன்று அந்தத் தொகை 324 ஆண், பெண் குழந்தைகளாக அதிகரித்துவிட்டது.முன்னர் ஒரு நாள் உணவுக்கு 180 டொலர் போதுமானதாக இருந்தது. இப்போது அது போதுமானதாக இல்லை. 4 அல்லது 5 கொடையாளர்கள் தலைக்கு 180 டொலர் உதவினால்தான் ஒரு நாள் உணவைக் கொடுக்க முடியும்.இந்தப் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கு 2012 இல் இரவு விருந்து மூலம் 32 இலட்சம் ரூபாய் ஈழநாடு அனுப்பி உதவியது. மீண்டும் 2013 இல் நடத்திய இரவு விருந்து மூலம் 28 இலட்சம் ரூபாவை ஈழநாடு கொடுத்துவதியது. இம்முறையும் மண்டபம் நிறைந்த மக்கள் ஆதரவுடன் நிகழ்வைச் சிறப்படையச் செய்தார்கள்



























இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் ஏழாம் ஆண்டு குழிப் பந்தாட்டப் வெற்றி கிண்ண முடிவுகள்

வருடந்தோறும் குழிப் பந்தாட்டப் போட்டிகளை நடத்தி வரும் கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் இந்த ஆண்டுக்கான போட்டிகள் அஜெக்ஸில் உள்ள Dear Greak Golf மைதானத்தில் செப்ரெம்பர் 3 ஆம் திகதியன்று நேற்று வெகு சிறப்பாக நடந்து முடிந்தது. கால நிலை சூழ்நிலை சிறப்பாக அமைந்ததுடன் கனேடிய தமிழ் வர்த்தகர்கள் மற்றும் மேலும் டொராண்டோவின் முன்னணி தொழில் நிறுவனங்களின் தலைவர்களும் பங்குபற்றியிருந்தார்கள் .

ஒரு நாள் சுற்றுப் போட்டியான குழிப் பந்தாட்டப் போட்டிகள் நான்கு பேர் கொண்ட சுமார் 30 குழுக்ள் கொண்ட அணிகளாக பிரித்து மதியம் 12 மணிமுதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது .கனடிய தமிழர்களின் நன்கு திறமை வாய்ந்த குழிப் பந்து விளையாட்டு வீரர்கள் தமிழ் வர்த்தகர்களில் உள்ளார்கள் என்பதும் தமிழ் வர்த்தக சம்மேளன ஆரம்பகால உறுப்பினரான திரு ராஜி முத்து அவர்கள் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கில்ண்டனுடன் விளையாடியது என்பது குறிபிடத்தக்கது .

கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் சின்னத்துரை ஜெயக்குமார் நன்றி கூறி உரையாற்றிய பின்னர் , பரிசளிப்பு நிகழ்வுகளுடன் போட்டிகள் முடிவுக்கு வந்தது. இந்த போட்டிகளில் சேகரிக்கப்பட்ட நிதியும் அத்துடன் பல பெறுமதி வாய்ந்த பொருட்களின் ஏல விற்பனை மூலம் பெற்றுக்கொண்ட பெருந்தொகை நிதியும் ஸ்காபுறோ மருத்துவ அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

நிதியை பெற்றுக் கொண்ட ஸ்காபுறோ மருத்துவ அறக்கட்டளைத் தலைவர் மைக்கேல் மாசா , ஆண்டு தோறும் பல வழிகளில் ஸ்காபுறோ மருத்துவமனைக்கு நிதி திரட்டி வழங்கி வரும் கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முயற்சியைப் பாராட்டினார். இந்த நிதியின் மூலம் ஸ்காபுறோ மருத்துவமனைக்குத் தேவைப்படும் உபகரணங்கள் வாங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.






















இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடல் , பாடல் கொண்டாட்டங்களுடன் கோலாகலமாக நடந்த ஹார்மோனி ஹால் பாஷன் ஷோ மற்றும் நவராத்திரி பூஜா திருநாள் சிறப்புத் தொகுப்பு !!





பொதுவாக பண்டிகைகள் அனைத்துமே சிறுவர், சிறுமிகள் , வயதினரால் மட்டுமே உற்சாகமாகக் கொண்டாடப்படும் என்ற எண்ணங்களைத் தவிடு பொடியாக்கும் வகையில் அமைந்திருந்தது ஹார்மோனி ஹால் முதியோர் மையத்தில் நடந்த நவராத்திரி வாணி விழா நிகழ்வுகள்.








## Kingston City



- Starting at an unbelievable price of $188,990
- Walk to Queen's University
- Walk to Hospital
- Easy Deposit structure
- 9 feet Ceiling
- Fully Furnished
- Free window coverings
- Close to post office, Metro , Entertainment areas, Fitness
- Free property management fees for 3 years
- Leaseback Guarantee for 3 years
- Completion date in May 2017
- Builder allows Name transfer (Assignment)

EXCLUSIVE ACCESS

UNIVERSITY SUITES

## Bayview & Shappard



OMEGA On The Park -new condo release at Concord Park place community
- Minutes to the Sheppard Line Subway (Leslie Station or Bessarion Station)
- Minutes to North York General Hospital
- Close to Bayview Village shopping / Fair view Mall / IKEA /
- Nearby parks (Ambrose, Maureen & Clarinda )
- Close to all the other Amenities.

Special for my Clients
- VIP advance pricing
- VIP Deposit Structure
- Free Locker
- One year of free maintenance fees credit
- Discounted assignment fees

($ 500.00) Price 1BR Starting From $230,500

VIP ACCESS

## Call for more details



**Ranjan** Francis Xavier
Sales Representative
**416.816.1220**

HOMELIFE HIGHER STANDARDS
**HomeLife Galaxy**
REAL ESTATE LTD., BROKERAGE, INDEPENDENTLY OWNED & OPERATED
111 Grangeway Ave, Suite:301, Toronto, M1H 3E9



**Killi** Chelliah BSc.Eng
Sales Representative
**416.624.7562**


இ குருவி பெருமையுடன் வழங்கும் *Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RE/MAX Friendly Realtor Thipan Raj Sales Represntative 416-629-2444
Markham NS Dental 905-472-4111 www.MarkhamNSDental.com
STANDARD MORTGAGES INC. RAJ SUBRAYAM AMP Director 416.993.2638
Computek College BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY 416.321.9911 www.computek.edu

# உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்கள் விபரம்

## நகராட்ச்சிமன்றம் ... கல்விச்சபை...

**இவர்களின் காணொளி நேர்காணலை இ-குருவி இணையத்தளத்தில்...** (www.ekuruvi.com)



**பெயர்: வாரன் வைத்திலிங்கம்**
**அஜக்ஸ் நகர முதல்வர் பதவிக்குப் போட்டியிடுகிறார்**
**தகவல்கள் :** அஜக்ஸ் நகரில் தொழில் வசதிகளைப் பெருக்குதல். எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சொத்து வரியினை அறவிடுதல். நகரினை சிறந்த நகரமாக உருவாக்குதல். சிறந்த போக்குவரத்து மற்றும் அதிக வேலை வாய்ப்புகளை உண்டாக்குதல் பொழுது போக்கு வசதிகளை ஏற்படுத்துதல்..



**பெயர் : கசியன் ஜோசப்**
**வட்டாரம் : 2&6 பிரம்ப்டன் நகரசபை**
**தகவல்கள் :** நீண்ட காலமாக பிரம்ப்டன் நகரில் வசிக்கிறார். சமூகம் பாதுகாப்பாக வாழ்வதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுத்தல்.எமது குடும்பங்களும், சமூகமும் சிறந்த வாழ்க்கை வாழ்வதற்கு உழைத்தல்.



**பெயர் : ஜோசப் (மோகன்) ரெமிசியர்**
**வட்டாரம் : 8 மார்க்கம்**
**தகவல்:** நீண்ட காலம் இந்த வட்டாரத்தில் வசிப்பதால் மக்களின் தேவைகளை நன்கு அறிந்தவர். அவற்றைப் பூர்த்தி செய்தல். சமூக சேவையாளர். ஒரு தலைவர் வெளிப்படையாகவும் தனது செயல்களுக்குத் தானே பொறுப்பேற்பவராகவும் இருக்க வேண்டும் என்று நம்புபவர். பல அமைப்புகளுக்குத் தலைமை ஏற்றுச் சிறப்பாக செயலாற்றியவர்.



**பெயர் : லோரன்ஸ் மாணிக்கம்**
**வட்டாரம் : 2 & 6 பிரம்ப்டன் நகரம்**
**தகவல்கள் :** பல பொது நிகழ்வுகளுக்கு நிதி சேகரித்ததுடன் தானும் நிதி அளித்தும் இருக்கின்றார். பிரம்ப்டன் நகருக்குப் பல புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்.கல்வி, போக்குவரத்தில் பல மாற்றங்கள் கொண்டுவருதல். மக்கள் பாதுகாப்புக்கு பாடுபடுதல். புதிய மருத்துவ மனை அமைத்தல்.



**பெயர் : ராஜ் சுப்ரமணியம்**
**வட்டாரம் : 5 மார்க்கம்**
**தகவல்கள்:** உள்ளூர் அரசியலில் விழிப்புணர்வைக் கொண்டு வருதல். கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்துதல். குடியிருப்பாளர்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுதல். வாகனப் போக்குவரத்தில் உள்ள நெரிசலைக் குறைத்தல். வெளிப்படையாகச் செயலாற்றுதல். பூங்காக்களையும் பொழுது போக்கு நிலையங்களையும் அமைத்துப் பாதுகாத்தல்.



**பெயர்: சுசி நடராஜா**
**வட்டாரம் : 6 விட்சர்ச் ஸ்டுவில்**
**தகவல்கள் :** இளைய சமூகத்திற்கும் மூத்த சமூகத்திற்கும் ஒரு இணைப்புப் பாலமாக இருந்து சேவை செய்தல்.வட்டார மக்களை அடிக்கடி சந்தித்து அவர்களின் தேவைகளை அறிந்து ஒவ்வொரு நகர சபைக் கூட்டத்திற்கும் தவறாது சென்று அவற்றை எடுத்துக் கூறி அவற்றை நிறைவேற்றுதல். சமூகத்தின் பாது காப்புக்கு உழைத்தல். நகர வரவு செலவுத் திட்டம் கவனமாகத் திட்டமிட உதவுதல்



**பெயர் : நீதன் ஷான்**
**வட்டாரம் : 42 ரூஜ் ரிவர்**
**தகவல்கள் :** இந்த வட்டாரம் நிறைய அபிவிருத்தி செய்யப் பட வேண்டிய ஒன்றாகும் என்பதனை நன்கு உணர்ந்தவர். சமூக அபிவிருத்திக்கான திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல். போக்குவரத்துச் சேவையை அபிவிருத்தி செய்தல், வேலை வாய்ப்புகளைஉருவாக குதல்,பொருளாதாரத்தை முன்னேற்றுதல் ஆகியன முக்கிய செயல் திட்டங்களாகும்.



**பெயர் : நீதன் சபா**
**வட்டாரம்: 42 ரூஜ் ரிவர்**
**தகவல்கள் :** சமூக நலனில் அக்கறை. பல்லின மக்களையும் அறிந்து வைத்து இருப்பவர். அவர்களுக்குச் சிறந்த பிரதிநிதியாக இருந்து சேவை செய்வது முக்கிய நோக்கம். தனது வட்டாரத் தேவைகளை நன்கு அறிந்தவர். அவற்றை நிறைவேற்றுவதற்கு உழைத்தல்.



**பெயர் : பாலச்சந்திரன் நிரஞ்சன்**
**வட்டாரம் : 37 ஸ்கார்பரோ மத்தி**
**தகவல்:** குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குப் பொழுது போக்கு வசதிகளை ஏற்படுத்துதல். சுத்தமான நகரம் ஆக்குதல். திறமை வாய்ந்த எல்லோரும் பெறக் கூடிய போக்குவரத்து வசதியைக் கொண்டுவருதல். சமூக சேவைகள் மூலம் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல். சமத்துவமுள்ள பல்கலாச்சாரத்தை வளர்த்தல்.



**பெயர் : வேந்தன் ரமணா**
**வட்டாரம் : 42 ரூஜ் ரிவர்**
**தகவல்கள் :** இந்த வட்டாரத்தின் தேவைகளையும் இங்கு வாழும் பல்லின மக்களின் தேவைகளையும் நன்கு அறிந்து இருத்தல். தமிழ் டைம் என்ற சஞ்சிகையை வெளியிட்டு இங்குள்ள தமிழ்க் கலைஞர்களுக்கு ஊக்கம் அளித்தவர். சமூகத்தின் பாதுகாப்பினை உறுதிப் படுத்துதல்,தொழில் வாய்ப்புக்களைப் பெருக்குதல், மூத்த குடி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், போக்குவரத்து வசதிகளை அதிகரித்தல்.



**பெயர் : செந்தூரன் பரமசாமி**
**வட்டாரம் : 6 ஸ்டுவில்**
**தகவல்கள் :** வரி கொட்டுபவர்களின் பணம் சரியான வழியில் செலவு செய்யப் படுவதை உறுதிப் படுத்துதல்.ஸ்டுவில் நகரின் வளர்ச்சிக்குப் பாடுபடுதல். தமது பிள்ளைகளப் பாது காப்பான சூழலில் வளர்க்க உதவுதல். மூத்த குடி மக்களுக்கும் புதிய குடி வரவாளர்களுக்கும் உயர் வரி விதிக்காமல் இருப்பதை உறுதிப் படுத்துதல். எல்லாச் சமூகத்தவரையும் சமமாக நடத்துதல்.



**பெயர்: சிவா சிவஞானம்**
**வட்டாரம் : 5 மார்க்கம்**
**தகவல்கள்:** சமூகம் சார்ந்த திட்டங்கள். மருத்துவ மனை வசதிகளைப் பெருக்குதல் . புதிய மசூதி அமைத்தல். கல்வி , வேலை வாய்ப்பு வசதிகளை அதிகரித்தல். மக்களின் அன்றாட தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுதல். போக்குவரத்து வசதிகளை அதிகப் படுத்தல்

இ குருவி பெருமையுடன் வழங்கும் *Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்: லோகன் கணபதி**
**வட்டாரம் : 7 மார்க்கம்**
**தகவல்கள்:** இந்த வட்டாரத்தின் தற்போதைய அங்கத்தவர் .கடந்த மூன்று வருடங்களாக சொத்து வரி, அதிகரிக்கப் படவில்லை. மார்க்கம் நகருக்கு முதன் முதலாக ஒரு கிரிக்கெட் மைதானம், பேரம் செலவில் ஒரு சன சமூக நிலையம். மார்க்கம் நகரில் " வன்னி வீதி" உருவகக் காரணமாக இருந்தவர். தமிழ் புது வருடத்தையும் பொங்கல் திருநாளையும் தமிழரின் பாரம் பரிய தினங்களாக மார்க்கம் நகர சபை அறிவிக்கக் காரணமாக இருந்தவர். மேலும் பல திட்டங்களை நிறைவேற்ற எண்ணம் கொண்டுள்ளார்.



**பெயர் : கிரு குலேந்திரன்**
**வட்டாரம் : 10 மிசிசாகா**
**தகவல்கள் :** சமூக ஆர்வலர். நகர சபையின் நிதியைச் சரியான வழியில் பயன்படுத்த உதவுதல். மாகாண, மத்திய அரசுகளிடம் இருந்து உள்ளூராட்சிக்குக் கூடிய நிதியினைப் பெற்று மக்களின் தேவைகளை நிறைவ்ற்றுதல். வரி செலுத்துவோரின் பணம் தகுந்த முறையில் செலவு செய்யப்படுவதைக் கண்காணித்தல். சிறந்த போக்குவரத்து வசதியை அளித்தல். உயர் பாடசாலை மாணவர்களுக்கு இலவச போக்குவரத்து வசதியை அளித்தல்.பொழுது போக்கு வசதிகளை அதிகரித்தல். சுகாதார வசதிகளை மேன்படுத்தல் .



**பெயர் : சிவவதனி பிரபாகரன்**
**வட்டாரம் : 41 ரூஜ் ரிவர்**
**தகவல்கள் :** பல்வேறு சிறுபான்மை இன மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல். வேலை வாய்ப்பினை அதிகரித்தல். சிறு தொழில்களை உருவாக்குதல். மூத்த குடி மகளுக்குப் பல நலத் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப் படுத்துதல். வன்செயல்களைத் தடுத்தல். வரி அதிகரிப்பு ஏற்படாமல் கவனித்தல். பொழுது போக்கு வசதிகளை அதிகரித்தல். மூத்த குடி மக்களுக்கு வீட்டு வசதிகளை உருவாக்குதல்.



**பெயர் : தாமஸ் டேவிட்**
**வட்டாரம் : 38 ஸ்கார்பரோ மத்தி**
**தகவல்கள் :** புதிய தடங்களில் பேருந்து சேவைகளை உருவாக்குதல். புதிய சமூக மண்டபங்களை அமைத்தல். வேலை வாய்ப்பை அதிகரித்தல் .வெளிநாட்டு கல்வித் தகமைகளை அங்கீகரிக்கச் . செய்தல். வேலை வாய்ப்புகளை அதிகரித்தல். அடிப்படைச் சம்பளத்தை உயர்த்துவதற்கு முயற்சி செய்தல்.



**பெயர்: சோதி செல்லா**
**வட்டாரம்: 7 மார்க்கம்**
**தகவல்கள்:** சொத்து வரி அதிகரிப்பை நீக்குதல்.வீதிப் போக்கு வரத்து வசதிகளை அதிகரித்தல்.எல்சன் வீதியால் சென்ற டி. டி, சி (.வுவுஊ) பேருந்தை மீண்டும் இயக்குதல்.புதிய குடியிருப்பு ஏற்படும் இடங்களில் சனசமூக நிலையம் அமைத்தல். பூங்காக்களும் பொழுது போக்கு வசதிகளும் உண்டாக்குதல். சமூகத்தின் பாது காப்பினை உறுதிப் படுத்துதல்.



**பெயர் : வாசு முருகேசு**
**வட்டாரம்: 7 மார்க்கம் நகர சபை**
**தகவல்கள் :** போக்குவரத்து வசதிகளை அதிகரித்தல். வீட்டு வரியில் மாற்றம் கொண்டு வருதல். பனி அகற்றலை துரிதப்படுத்தல்.



**பெயர் : சுப்பையா மாணிக்கம்**
**வட்டாரம் : 7 சூ 8 பிரம்ப்டன்**
**தகவல்கள்:** எல்லாச் சமூகத்தவருக்கும் நகரசபையின் சகல சேவைகளிலும் நியாயமான பிரதிநிதித்துவம் கிடைக்க வழி செய்தல்.போக்குவரத்து வசதியினை அதிகரித்தல். சொத்து வரியினைக் குறைத்தல். பிரம்ப்டன் நகருக்கு ஒரு தனி பல்கலைகழகம் அமைத்தல் .



**பெயர் : சத்தியநிதி சடகோபன்**
**வட்டாரம் : 6 & 11 மிசிசாகா . கல்விச் சபை**
**தகவல்கள் :** ஆங்கிலம் கற்பிக்கும் தரத்தை உயர்த்துதல். அதிக நிதியை ஒதுக்குதல்.ஆசிரியர்கள் பற்றாக் குறையை நீக்குதல். பாடசாலைகளுக்கு வசதிகளை அதிகரித்தல்.



**பெயர் : புஸ்பா மதனலிங்கம்**
**வட்டாரம் : 13 கல்விச் சபை. டான் வலி மேற்கு**
**தகவல்கள் :** கல்வித் தரத்தை உயர்த்துதல் .ஒவ்வொரு மாணவனும் தனக்கேற்ற கல்வியைச் சிறப்பாகப் பெருதல். சிறுபான்மை மக்களுக்கு இங்குள்ள கல்வி முறையினைப் பற்றி விளக்குதல். பாடசாலைகளில் வசதிகளைப் பெருக்குதல். கல்வி நிதியினைச் சரியான முறையில் செலவு செய்வதைக் கண்காணித்தல். பாதுகாப்பான பாடசாலைச் சூழலை ஏற்படுத்துதல்.



**பெயர் : பார்த்திபன் கந்தவேல்**
**வட்டாரம்: 18 கல்விச் சபை. நகர வட்டாரம் 35, 36**
**தகவல்கள் :**பாடசாலைகளில் உடற் பயிற்சியைக் கட்டாயப் படுத்துதல். வாசிப்பு, கணிதம், எழுத்து ஆகிய படங்களைத் திறமையாகக் கற்பிப்பதற்கு மேலதிக பயிற்சி ஆசிரியர்களை நியமித்தல். கற்பிற்கும் திறனை அதிகரிதல். பாடசாலைகளைப் பாதுகாப்பு உள்ளவைகளாக மாற்றுதல். பாடசாலைக்கும் பெற்றோருக்கும் நெருங்கிய தொடர்பினை உண்டாக்குதல்



**பெயர் : ருக்க்ஷான் பரா**
**வட்டாரம் : 4 & 5 மார்க்கம் கல்விச் சபை**
**தகவல்கள்:** மாணவர்கள் தமது கல்வியில் எதிர்நோக்கும் சவால்களை அறிந்து அவர்களுக்கு ஆதரவாக இருத்தல். கல்வித் தரத்தை உயர்த்துதல்.கல்வி முறைக்கும் பெற்றோருக்கும் உள்ள இடைவெளியைஇல்லது செய்தல். எமது சமூகத்தின் அறிவினை வகுப்பு அறையில் பயன்படுத்துதல். அவரவர் தேவைக்கு ஏற்ற கல்வியினை அளிக்கப் பாடுபடுதல்.



**பெயர். கிரிசாந்தி சரோஜ்குமாரன்**
**வட்டாரம்: 21 கல்விச் சபை. ரூஜ் ரிவர்**
**தகவல்கள் :** கல்விச் சபையில் வரிப் பணம் தவறாகப் பயன்படுத்தப் படுவதைத் தடுத்தல்.வெளிப்படைத் தன்மையாக இருத்தல்.வரி செலுத்துவோருக்குப் பொறுப்புக் கூறுதல். பின் தங்கிய மாணவர்களுக்காகக் கல்வித் திட்டம். பாதுகாப்பான பாடசாலைகள். பயமுறுத்தலில் இருந்து மாணவர்களுக்குப் பாது காப்பு அளித்தல். பாடசாலைகளில் கற்பிக்கும் மொழிகளை விரிவு படுத்துதல்



**பெயர். பிறவீனா சத்தியநாதம்**
**வட்டாரம்: 21 கல்விச் சபை. ரூஜ் ரிவர்**
**தகவல்கள் :** கல்விச் சபையில் மாற்றத்தை எற்படுத்தல், பெற்றோருடனும் ஆசியருக்கும் இடையில் உறுதியை பேணல், பாடசாலை முடிந்தபின் செயத்திறனை கூட்டுதல்



**பெயர் : ஜனித்தா நாதன்**
**வட்டாரம் : 7&8 மார்க்கம் கல்விச் சபை**
**தகவல் :** 2010 ம் ஆண்டு மார்க்கம் கல்விச் சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டார். தொடந்து பெற்றோருடனும் சமூகத்துடனும் இணைந்து பாடசாலை முறைமையினை அபிவிருத்தி செய்வதாக உறுதி பூண்டுள்ளார்.



**பெயர் : ஜீவிதா டெபோரா லிபமன்**
**வட்டாரம் : 21 ரூஜ் ரிவர். கல்விச் சபை**
**தகவல்கள் :** .வரி செலுத்துவோரின் பணம் தவறாகப் பயன்படுத்தாமல் கவனித்துக் கொள்ளுதல். உள்ளூர் மக்களின் விழுமியங்களை மதித்து அவற்றுக்கு ஏற்ப செயல் படுத்தல். பெற்றோரிடையே பாடசாலைகள் பற்றிய நடை முறைகள் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குதல்.தொழில் சார்ந்த கல்வி,தொழில் நுட்ப அனுபவம் தரும் கல்வித் திட்டத்தை நடை முறைப் படுத்தல்.

இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் சார்பில் சேகரிக்கப்பட்ட நிதி 150,740.85

தமிழ் மக்கள் சார்பில் சேகரிக்கப்பட்ட நிதி 150,740.85 டொலர்களை ஸ்காபரோ மருத்துவமனைக்கு கையளிக்கும் நிகழ்வு ஒக்ரோபர் 7ந் தேதி செவ்வாய்கிழமை நடைபெற்றது. **Ontario Minister of Health and Long-Term Dr. Eric Hoskin** சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சேகரிக்கப்பட்ட நிதியினைப் பெற்றுக் கொண்டார். அங்கு அவர் உரையாற்றியபோது தமிழ் மக்களின் இந்த பெரும் முயற்சியை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார்.






தமிழ் மக்களிற்குப் பெருமை தருவதாக இந்த நிதிக் கையளிப்பு நிகழ்வு அமைந்தது. மருத்துவர்கள், அரகசாங்க அதிகாரிகள், நாடளுமன்ற உறுப்பினர்கள், தொழிலதிபர்கள், மருத்துவமனை ஊழியர்கள், சமூகத் தொண்டர்கள் என சமூகத்தின் பலதுறைகளையும் சார்ந்தவர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பாக்கினர்.

ஸ்ரீ வரசக்தி வினாயகர் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் தலைமையேற்க பலரும் இணைந்து நிதிசேகரிப்பை நிறைவாக்கினர். நிதி சேகரிப்பில் முன்நின்று செயல்பட்டவர்களுள் ஒருவரும் ஸ்காபரோ மருத்துவமனை இயக்குனர்கள் சபை உறுப்பினருமான ஸ்ரான் முத்துலிங்கத்திடம் இது குறித்துக் கேட்டோம். அவர் 'இந்த நிதி சேகரிப்பில் எங்களுக்கு நன்கொடையளித்த அனைத்து தமிழ் மக்களுக்கும் நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். கடந்த 30 வருடகாலங்களாக நம் சமூகத்திற்குத் துணையாக இருந்த கனடிய சுகாதார நிறுவனங்களுக்கு நம் நன்றியை திருப்பிச் செலுத்தும் கடமைகளுள் ஒன்றாக இந்த நிதிக் கையளிப்பை கருதுகிறோம். ஏராளமான நண்பர்கள் இம்முயற்சியில் எம்மோடு இணைந்து கைகொடுத்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நம் நன்றிகள்' என்றார்.






இ குருவி பெருமையுடன் வழங்கும் *Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்துக் கல்லூரியின் 'கலையரசி" நிகழ்வு.

04- 10-2014 சனிக்கிழமை சீன கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற " கலையரசி " நிகழ்வில் ஈகுருவி புகைப்படக் கலைஞரால் எடுக்கப் பட்ட புகைப் படங்கள். இந்த நிகழ்வின் காணொளி மற்றும் புகைப் படத் தொகுப்பினையும் ekuruvi.com என்ற இணைய தளத்தை நாடுங்கள்.



























இ குருவி பெருமையுடன் வழங்கும் Bizthe Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












# நீதன் சபாவின் (Ward 42) தேர்தல் பிரச்சார பணிகளின் முன்னெடுப்புக்கள்...

















இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனாக் கல்லூரியின் வெள்ளி விழா

மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தனது வெள்ளி விழாவை இம்மாதம் 5 ம் திகதியும் 11ம் திகதியும் இசுகார்பரோ சீன கலாச்சார மண்டபத்தில் மண்டபம் நிறைந்த பார்வையாளர்களின் மத்தியில் வெகு சிறப்பாகக் கொண்டாடியது.



















இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் பைகள் மூலம் பாய்கள் செய்து சாதனை கனடா முதுதமிழர்கள்

பிளாஸ்ரிக் பால் பைகளை வெட்டி பாய்கள் இழைத்த ஒன்ராறியோ முதுதமிழர் மன்ற அங்கத்தவர்களான பெண்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டும் கிடைத்துள்ளது.



ஒன்ராறியோ முது தமிழர் மன்றத்தினைச் சேர்ந்த தமிழ் முதியவர்கள் நேற்று கனடாவில் கிடைக்கும் பிளாஸ்ரிக் பால் பைகளை வெட்டி பாய்கள் இழைத்து சாதனை படைதுள்ளர்கள் .இதன் மூலம் வரும் பாய்களை ஸ்காபுறோ டொன் மில்ஸ் வீதியிலுள்ள "செலஸ்ரிக்கா" என்ற கொம்பியூட்டர் கொம்பனியினர் ஊடாக அப் பாய்களை வசதி குறைந்த மக்களின் பாவனைக்காக டொமினிக்கன் றிப்பப்ளிக், ஹெயிற்றி, நிக்கருவா, பெரு, பிறேசில், ஆபிரிக்கா, மாலி, பிலிப்பைன்ஸ் போன்ற நாற்பது நாடுகளுக்கு அனுப்பி வைத்திருகிறார்கள்

450 பால் பிளாஸ்ரிக் பைகளைக் கொண்டு ஒரு பாயினை செய்யலாம். பாய்களை மாத்திரமல்ல பெரிய அளவிலான சொப்பிங் பைகள், சப்பாத்துக்கள் ஆகியவற்றினையும் பிளாஸ்ரிக் பைகளைக் கொண்டு உருவாக்கலாம்.

நீங்கள் விரும்பினால் அது பற்றிய பயிற்சியினையும் நாம் உங்களுக்கு வழங்குவோம் என பெருமிதத்தோடு கூறுகின்றார்கள் .

ஒன்ராறியோ முது தமிழர் மன்றத்தினைச் சேர்ந்த திருமதிகள்: தமயந்தி காந்தன், விக்டோரியா அந்தோனிப்பிள்ளை, மலர் நம்பியூரான், மகா மகேஸ்வரி, ராணி தில்லைஈசன் ஆகிய ஐவரும் தலைமை தாங்க மொத்தம் 42 பாய்களை செய்து வழங்கியுள்ளனர்.

செலஸ்ரிக்கா நிறுவனத்தினத்தைச் சேர்ந்த அஞ்சலா, டெனி, டொமே கெஸ்லி திருமதி தமயந்தி காந்தன் பேராயிரவர் ஆகியோர் இன்று வெள்ளிக்கிழமை மார்க்கத்தில் உள்ள பரோஸ் ஹோலில் அவர்களைப் பாராட்டி சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.



இவர்களின் இச்செயளை பாராட்டி இந்த கண் கொள்ளாக் காட்சிகளை குருவி வாசகர்கள் அனைவரும் கண்டு கழித்து உற்சாகமடைய வேண்டும் என்பதற்காக நிகழ்வின் சிறப்புத் தொகுப்பு காணொளியும், நிகழ்வில் எடுக்கபப்ட்ட புகைப்படங்களும்,


Tamils' Business Connections

இன்றைய நிகழ்வுகளை
நாளைய சரித்திரமாக்கி
என்றும் பார்வையிட...

www.ekuruvi.com
e குருவி

All Your Events On
www.ekuruvi.com
www.biztha.com




416-272-8543

உங்கள் மாநகரம்! உங்கள் குரல்!

உங்கள் தெரிவு சோதி செல்லா!

கடந்த 21ஆண்டுகளாக உங்கள் மத்தியில் உங்களின் ஒருவனாக உங்களோடு நின்று பல பொது நிகழ்வுகளில் தன்னலமற்ற பொதுப்பணிகளை ஆற்றியதன் விளைவாக உங்கள் விருப்பிற்கிணங்க மார்க்கம் 7ம் வட்டாரத்தில் கவுன்சிலராகப்போட்டியிடுகின்றேன்.

- "சொத்துவரி அதிகரிப்பின்மையை நிலைநிறுத்தல்.
- வீதிப்போக்குவரத்து வசதிகளை முன்னேற்றுதல்,
- எல்சன் வீதியால் சென்ற TTC பஸ்சினை மீண்டும் இயங்கச்செய்து போக்குவரத்தினை சுலபமாக்குதல்.
- 14வது அவெனியுவினை அகலமாக்குதல்.
- மார்க்கம் நகரத்தை மேலும் பசுமையாக்குதல்.
- பாதுகாப்பான முறையில் சமூகங்களின் வாழ்வு தொடர்பாக பல முயற்சிகளை எடுத்தல்.

- என்னை நீங்கள் தேர்தலில் வெற்றிபெறச் செய்தால் மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கிணங்க என்றென்றும் உங்களோடு தோள்கொடுத்து நிற்பேன்.
- ஏனைய வேட்பாளர்களைப் போல வேறு தொகுதிகளிலோ, வேறு பதவிகளுக்கோ பதவியில் இருக்கும்போது போட்டியிடமாட்டேன் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

எனது கதவுகள் அனைத்து தமிழ் மக்களுக்கும், 7ம் வட்டாரத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் என்றுமே திறந்திருக்கும்.



Your City. Your Voice.

ON OCT 27, ELECT

SOTHY SELLA

WARD 7 COUNCILLOR, CITY OF MARKHAM

Phone: 905.995.8151 | www.sothy4ward7.com | Email: sjsothy@gmail.com

VOTE

Voting online is easy, call us today for detail.

Authorized by the CFO for the Sothy Sella Campaign

இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை மீதான ஐ.நா விசாரணைக்கு உதவுங்கள்:

ஈழப்போரில் நிகழ்ந்தேறிய போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றச்செயல்கள்,இனப்படுகொலை உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் ஆரம்பித்துள்ளது. இந்த விசாரணைக்கு பொதுமக்கள்,அமைப்புகள், அரசுகள் உதவலாம் என ஐக்கிய நாடுகள் அவை அறிவித்துள்ளது. இலங்கையில் நடந்த கொடூரங்கள் குறித்த விவரங்களை அறிந்தவர்கள் இந்த விசாரணைக்கு உடனடியாக உதவ வேண்டும்.

## இவ் விசாரணையின் பின்னணி என்ன?

இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய இன அழிப்பு இலங்கையில் நடந்தது. பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் படுகொலைசெய்யப்பட்டனர். கற்பழிப்பு, சித்தரவதைக் கொடூரங்கள் நடத்தப்பட்டன. பச்சிளம் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். மனிதாபிமான உதவிகள் தடுக்கப்பட்டன. சரணடைந்தவர்கள் சித்தரவதை செய்து கொடூரமாகக் கொல்லப்பட்டனர், ஏராளமானோர் காணடிக்கப்பட்டனர். இந்தக் கொடூரங்களை நிகழ்த்திய கொடுங்கோலர்கள் ஒருவரும் கண்டுபிடிக்கப்படவும் இல்லை, தண்டிக்கப்படவும் இல்லை.

ஆயுதப்போரின் இறுதிக் கட்டத்தில் மட்டும்70,000 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என ஐநா ஆய்வுக்குழு கூறியுள்ளது. 1,46,679 பேர் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் போயுள்ளனர் என மன்னார் கத்தோலிக்க ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட பெரும் பேரழிவு ஒருபுறம் இருக்க, "இனியும் ஈழத்தமிழர்கள் ஒரு தனிப்பட்ட இனமாக இருக்கக் கூடாது, அவர்களது அடையாளத்தையும், இருப்பையும் தகர்த்துவிட வேண்டும்" என்கிற கொடூரநோக்கத்துடன் இலங்கை இனவெறி அரசு ஈழத்தமிழர்கள் மீதான போரைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது.

இலங்கைத் தீவில் ஈழத்தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்ட கொடுமைகளுக்கு நீதிகிடைக்க வேண்டும்.

தொடரும் இன அழிப்பு உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கை உலகெங்கும் எழுந்ததது. இதனைத் தொடர்ந்து, 27.03.2014 ஆம் நாள் ஐநா மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பாக ஒரு பன்னாட்டு விசாரணைத் தீர்மானம் நிரைவேற்றப்பட்டது.

இலங்கையில் ஏற்கனவே நடைபெற்ற கொடும் குற்றங்கள், இப்போதும் தொடரும் மனித உரிமை மீறல்களுக்கு காரணமான குற்றவாளிகள் தண்டிக்கப்படவும், பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு நீதி கிடைக்கவும் இந்த விசாரணை சர்வதேச அளவிலான முதல் நடவடிக்கை ஆகும். இலங்கை மீதான இந்த ஐநா விசாரணைக்கு ஒவ்வொருவரும் உதவ முன்வர வேண்டும்.

பன்னாட்டு விசாரணைத் தீர்மானம் கூறுவது என்ன?

2014 மார்ச் மாதம் ஜெனீவாவில் உள்ள ஐநா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், "இலங்கையில் நடைபெற்ற போரின் போது நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் முறைகேடுகள், அவை தொடர்பான குற்றச்செயல்கள் குறித்து, ஒரு முழுமையான புலனாய்வை மேற்கொள்ளுமாறு" ஐநா மனித உரிமை ஆணையருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கூடவே "குற்றமிழைத்தவர்கள் தண்டனையிலிருந்து தப்புவதைத் தடுக்கும் நோக்கிலும் அரசாங்கத்தின் பொறுப்புடைமையை நிலைநாட்டும் நோக்கிலும், இத்தகைய விதி மீறல்கள் மற்றும் குற்றச்செயல்கள் நிகழ்த்தப்பட்ட சூழ்நிலைகளையும் உண்மையையும் வெளிக்கொண்டுவர வேண்டும்" என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக் குறித்து 2014 செப்டம்பர் மாதம் ஐநா மனித உரிமைப் பேரவையில் ஒரு வாய்மூல இடைக்கால அறிக்கையும், 2015 மார்ச் மாதம் விசாரணையின் இறுதி அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## பன்னாட்டு விசாரணையின் இப்போதைய நிலை என்ன?

ஜெனீவாவில் உள்ள ஐநா மனித உரிமை ஆணையர் அலுவலகத்தை தலைமை இடமாகக் கொண்டு,"இலங்கை மீதான ஐநா மனித உரிமை ஆணையர் அலுவலக விசாரணை (OHCHR Investiga on on Sri Lanka - OISL)" தொடங்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ச.ன்ரா பெய்தாஸ் என்பவர் இதன் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். புகழ்பெற்ற சர்வதேச மனிதவுரிமை சார்ந்த சட்ட நிபுணர்கள் இக்குழுவிற்கு ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பின்லாந்து நாட்டின் முன்னாள் அதிபரும் நோபல் பரிசு பெற்றவருமான மார்ட்டி அட்டிசாரி, கம்போடிய இனப்படுகொலை நீதிமன்ற நீதிபதியும் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்தவருமான சில்வியா காட்ரைட், பாகிஸ்தான் நாட்டின் மனித உரிமை வல்லுநர் அஸ்மா ஜகாங்கிர் ஆகியோர் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஐநா மனித உரிமை ஆணையத்தின் சிறப்பு வல்லுநர்களும் இந்த விசாரணைக்கு உதவுவார்கள். சட்டத்துக்கு புறம்பான அரசப்படுகொலைகள் (Extrajudicial executions), காணாமல் போகச்செய்தல் (Disappearances), உள்நாட்டு அகதிகள் (Internally displaced persons), சட்டவிரோத காவல் (Arbitrary detentions), பெண்களுக்கு எதிரான வன்முறைகள் (Violence against women), சித்தரவதை (Torture) ஆகியன குறித்த சிறப்பு ஐநா வல்லுநர்கள் இலங்கை மீதான விசாரணைக்கு உதவி செய்வார்கள்.

## ஐநா வின் மனித உரிமை ஆணையக விசாரணையின் கால வரையறை என்ன?

இலங்கைப் போரின் போது நிகழ்ந்த கொடூரங்கள், சர்வதேச சட்ட மீறல்கள் குறித்த ஆதாரங்களையும்,தகவல்களையும், ஆவணங்களையும் 01.08.2014 முதல் 30.10.2014 வரை சேகரிக்கின்றனர். 2014 நவம்பர்,டிசம்பர் மாதங்களில் இவற்றின் மீதான ஆய்வுகள் நடைபெறும். மார்ச் 2014 இல் முழுமையான விசாரணை அறிக்கை, ஐநா மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

ஐநா வின் மனித உரிமை ஆணையக விசாரணையின் நோக்கம் என்ன?

ஈழப்போரில் நடந்தாகக் கூறப்படும் சர்வதேச சட்ட மீறல்களையும், கொடூரக் குற்றங்களையும் விசாரித்து உண்மையை நிலைநாட்டுவதே இந்த விசாரணையின் நோக்கமாகும். ஆதாவது,இலங்கையில் நடந்த கொடும் குற்றச்செயல்கள் அனைத்தும் இதுவரை அதிகாரப்பூர்வமாக மெய்ப்பிக்கப்படவில்லை. இப்போது முதல் முறையாக, ஐநா மனித உரிமைகள் ஆணையர் அலுவலகம் இதனை விசாரித்து உண்மையை அதிகாரப்பூர்வமாக சுட்டிக்காட்டவுள்ளது.

இலங்கை அரசின் பொறுப்புத்தவறுதலை முடிவுக்குக் கொண்டுவருவதும் (ensuring accountability), அங்கு கொடும் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் சுதந்திரமாக விடப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைப்பதும் (avoiding impunity) இந்த விசாரணையின் நோக்கமாகும். அந்த வகையில் இலங்கையில் நிகழ்ந்த கொடும் குற்றங்களின் உண்மை நிலை, குற்றச்சூழல், குற்றம் செய்தவர்கள் என எல்லாவற்றையும் இந்த விசாரணை வெளிக்கொண்டுவரும் வாய்ப்பு இருக்கிறது.

## எப்போது நிகழ்ந்த குற்றங்கள் விசாரிக்கப்படவுள்ளன?

ஐநா வின் மனித உரிமை ஆணையக விசாரணையின் கீழ் 21.02.2002 முதல் 15.11.2011 வரை நிகழ்ந்த குற்றச்செயல்கள் விசாரிக்கப்படவுள்ளன. அதாவது, 2002 - 2011 ஆம் ஆண்டுகளுக்கு இடையேயான பத்தாண்டுகளில் இலங்கையில் நடந்த சர்வதேசக் குற்றச்செயல்கள் விசாரிக்கப்படவுள்ளன. இந்த காலத்தில் நடந்த குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நிகழ்வுகள் அல்லது அதன் தொடர்ச்சி அதற்கு பின்னர் நடைபெற்றாலும் அதுகுறித்தும் புகார் தெரிவிக்கலாம். எனினும், 2008, 2009 ஆகிய ஆண்டுகளில் இறுதிக் கட்டப் போரின்போதும், அதன் முடிவுக்கு பின்னரும் நிகழ்ந்த கொடூரங்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

## விசாரணையின் சட்ட வரம்பு என்ன?

இந்த விசாரணையில் இலங்கை அரசு நிகழ்த்திய குற்றங்கள் பிரதானமாகக் கொள்ளப்படும். கூடவே,ஈழப்போராளிகள் ஏதேனும் சர்வதேச சட்ட மீறல்களை இழைத்திருந்தால் அதுவும் விசாரிக்கப்படும். வழக்கமான சர்வதேச சட்டம் (customary international law), உள்நாட்டு மோதல்கள் தொடர்பான சர்வதேச மனிதாபிமானச் சட்டம் (international humanitarian law), சர்வதேசக் குற்றவியல் சட்டம் (international criminal law) - ஆகிய சர்வதேச சட்டங்களின் கீழ் விசாரணை நடைபெறும்.

குறிப்பாக, போர்க்குற்றங்கள் (War Crimes), மனித குலத்துக்கு எதிரானக் குற்றங்கள் (Crimes against humanity),இனப்படுகொலை (Genocide) ஆகிய சர்வதேசக் குற்றங்கள் இந்த விசாரணையின் வரம்புக்குள் இடம்பெறுகின்றன.

## ஐநா வின் மனித உரிமை ஆணையக விசாரணைக் குழுவின் வேலை என்ன?

இதுவரைக் கிடைத்துள்ள ஆவணங்கள், தகவல்கள், அறிக்கைகளை ஐநா விசாரணைக் குழுவினர் ஆய்வு செய்வார்கள். பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்தும், போரில் உயிர்த்தப்பியவர்கள், சாட்சிகள்,மற்றும் குற்றம் இழைத்த தரப்பிடமிருந்தும் ஆவணங்களைப் பெற்றும், சாட்சியங்களைப் பதிவுசெய்தும் விசாரணை மேற்கொள்வார்கள். செயற்கைக் கோள் படங்கள், காணொளிகள், புகைப்படங்கள் உள்ளிட்ட ஆவணங்களையும் ஆய்வு செய்வார்கள். இவை அனைத்தையும் முறையாக ஆய்வு செய்தும்,அவற்றின் உண்மைத் தன்மைக் குறித்த அறிவியல் ஆய்வுகளை மேற்கொண்டும் - முழுமையான உண்மைகளை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

புகார் அளிப்போருக்கு பாதுகாப்பு உண்டா? நிச்சயம் பாதுகாப்பு உண்டு.

ஐநா விசாரணைக் குழுவிற்கு புகார் அனுப்புவோர் குறித்த எந்தத் தகவலும் வெளியில் கசியாது. அவை அனைத்தும் மிக ரகசியமாகக் காப்பாற்றப்படும். ஐநா விசாரணைக் குழுவின் அறிக்கையில் சாட்சியம் அளித்த எவரது பெயரும் இடம்பெறாது. எந்த நேரத்திலும், எக்காரணத்தை முன்னிட்டும், தகவல் அளிப்பவர்களோ, சாட்சியம் அளிப்பவர்களோ யாரிடமும் காட்டிக் கொடுக்கப்பட மாட்டார்கள். மிகமிக ரக்சியமாகக் ரகசியம் காப்பாற்றப்படும்.

இந்திய அரசோ, இலங்கை அரசோ சாட்சியம் அளிப்பவர்களை எந்த நிலையிலும் அணுகாது. அவர்கள் குறித்த எந்தத் தகவலும் எந்த அரசுக்கும் தெரியாது. சாட்சியம் அளிப்பவர்களும் தகவல் அளிப்பவர்களும் முழுமையாக பாதுகாக்கப்படுவார்கள் என் உத்திரவாதம் அளிக்கிறது ஐநா மனித உரிமை ஆணையர் அலுவலகம். ஐநா விசாரணைக் குழுவைத் தொடர்புகொள்ளும் எந்த ஒரு நபரும் - அதற்காக, உலகின் எந்த ஒரு அரசாலும் எந்த ஒரு தொந்தரவுக்கும் ஆளாகாமல் காப்பாற்றப்படுவதை சர்வதேச சட்டமும் ஐநா அவையும் உறுதி செய்கிறது.

## விசாரணையில் யார் பங்கேற்கலாம்?

அரசு அமைப்புகள், ஆர்வமுள்ள நிறுவனங்கள், அமைப்புகள், கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைப்புகள்,அரசு சாரா அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், மக்கள் அமைப்புகள் என யார் வேண்டுமானாலும் ஐநா விசாரனைக்கு உதவலாம். இத்தகைய அனைத்து அமைப்புகளின் ஒத்துழைப்பையும் ஐநா விசாரணைக் குழு நாடுகிறது.

## தகவல்களை யார் எப்படி அளிப்பது?

உங்கள் தொகுதியில், உங்கள் தொடர்பில் இருக்கும் கனடியத் தமிழர் தேசிய அவை உறுப்பினர்களை அணுகினால் உங்களுக்கு தேவையான உதவிகளைப் புரிவார்கள். மேலதிக விபரங்களுக்கு கனடியத் தமிழர் தேசிய அவையின் தொடர்பு இலக்கமான 416.830.7703 ஐ தொடர்பு கொள்ளவும்.

## எதைக் குறித்து தகவல் அளிக்க வேண்டும்?

21.02.2002 முதல் 15.11.2011 வரையிலான பத்தாண்டு காலத்தில் இலங்கையில் நிகழ்ந்த குற்றச்செயல்கள் குறித்த தகவல்களை அல்லது ஆவணங்களை அளிக்க வேண்டும். ஒரு குற்ற நிகழ்வு குறித்தோ,ஒன்றுக்கும் மேற்பட்ட குற்ற சம்பவங்கள் குறித்தோ தகவல்களை அளிக்கலாம். குறிப்பாக, இலங்கை அரசாங்கம் மற்றும் அதன் சார்பானவர்கள் செய்த குற்றச்செயல்கள் குறித்து தெரிவிக்க வேண்டும்.

போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான்க் குற்றங்கள்,

இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்படுகொலை ஆகிய சர்வதேசக் குற்றங்கள் தொடர்பான அல்லது இதுபோன்ற குற்றங்கள் எதனைக் குறித்தும் தெரிவிக்கலாம்.

எனினும், எந்தக் குற்றம் எந்த சட்டத்தின் கீழ் வருகிறது என்கிற ஆராய்ச்சிகள் தேவையில்லை. குற்றம் எதுவாக இருந்தாலும், அதனை சாதாரண முறையில், உள்ளது உள்ளபடி தெரிவிக்கலாம்.

## எப்போது புகார் அனுப்ப வேண்டும்?

உடனடியாக அனுப்புவது விரும்பத்தக்கது. எனினும், புகார் அனுப்ப வேண்டிய கடைசி நாள்: 30.10.2014. (அக்டோபர் மாதம் 30 ஆம் நாளுக்கு முன்னதாக புகார்களை அனுப்ப வேண்டும்)

## புகார் அனுப்பும் போது கவனிக்க வேண்டியது என்ன?

தகவல்கள் அல்லது ஆவணங்களைத் தொகுப்பதற்கான விரிவான வழிகாட்டுதலை ஐநா விசாரணைக் குழு அளிக்கவில்லை. தகவல் அளிப்பவரை தொடர்புகொள்ள ஏதுவாக தொடர்பு முகவரி, மின்னஞ்சல்,தொலைபேசி எண் போன்றவற்றை அளிக்க வேண்டும். தகவலை எழுத்துப்பூர்வமாக அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். எனவே, தகவல்களை அளிப்பவர்கள் தான் கூறவிரும்பும் தகவலை விருப்பம் போல அளிக்கலாம். எனினும், பின்வரும் குறைந்தபட்ச வழிமுறையை பின்பற்றுவது நல்லது:

1. தகவல் அளிப்பவர் தன்னைப் பற்றிய முழு விவரங்களை அளிக்க வேண்டும்: தற்போதைய முகவரி,செல்பேசி எண், அடையாள அட்டை எண், இலங்கையில் முகவரி, அரசு ஆவண எண் உள்ளிட்டவற்றைக் குறிப்பிடலாம்.
2. உண்மையை மட்டுமே கூற வேண்டும். மிகைப்படுத்தியோ, நடக்காதவற்றையோ கூறக்கூடாது. இது மிக முக்கியமானதாகும். ஏனெனில், ஒரே வரலாற்று குற்ற நிகழ்வைக் குறித்து பலரும் சாட்சியம் அளிக்கக் கூடும். அப்போது ஆளுக்கு ஒருவர் வெள்வேறு விதமாகக் கூறும் நிலை ஏற்படக் கூடாது. எனவே, நடந்ததை, நடந்தவாறு கூற வேண்டும்.
3. தானே நேரில் பார்த்த சம்பவமா அல்லது மற்றவர்கள் தன்னிடம் கூறிய நிகழ்வா என வேறுபடுத்திக் கூற வேண்டும்.
4. குற்றம் நடந்த இடம், நேரம், நாள் ஆகியவற்றை கூடுமானவரை சரியாகக் குறிப்பிட வேண்டும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
கனடியத் தமிழர் தேசிய அவை
தொலைபேசி: 416-830-7703
மின்னஞ்சல்: info@ncctcanada.ca
முகநூல்: facebook.com/canadianncct

## இன்னும் இருப்பது பதினைந்து நாட்களே ! ஐ.நா விசாரணைக்கான சாட்சியங்கள் திரட்டும் பணி கனடாவில் தீவிரம்

புலம்பெயர் தமிழர்கள் செறிந்த வாழும் நாடுகளில் முதன்மையான கனடாவில் சிறிலங்கா தொடர்பிலான ஐ.நா விசாரணைக்கான சாட்சியங்களைத் திரட்டும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயல்முனைப்பில் இதற்கான பணிகளை இனஅழிப்புத் தடுப்பும், விசாரணை முயற்சிகளுக்கான மையம் (ICPPG) இது தொடர்பிலான விழிப்பூட்டல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

கனடாவினைச் சேர்ந்த பன்முகத்தளங்களில் பங்காற்றுகின்ற பிரமுகர்கள் பலரும் இதற்கான பிரச்சார பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

சாட்சியங்களின் இரகசியத்தன்மை உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அச்சமின்றி அனைவரும் சாட்சியம் வழங்கலாம் என கனேடிய ஒருங்கிணைப்பாளர் ஜோ அன்ரனி தெரிவித்துள்ளதோடு, ஒக்ரோபர் 30ம் திகதிக்கு முன்னராக சாட்சியங்களை வழங்கவேண்டியுள்ள நிலையில், தாமதமின்றி அனைவரும் பங்கெடுக்க முன்வரவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

குறித்த Scarborough> 1231 Ellesemers Road இந்த முகவரியில் சாட்சியங்களை வழங்கவோ அல்லது மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளவோ முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, 416 751 8483 இந்த தொடர்பிலக்கம் மூலம் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

21 பெப்வரி 2002ம் ஆண்டில் இருந்து 15 நொவெம்பர் 2011ம் ஆண்டுக்குள் பாதிப்புக்குள்ளானவர்களும், இந்த காலப்பகுதியோடு ஒட்டிய சம்பவங்களோடு தொடர்புடைய முந்திய அல்லது பிந்திய காலச்சம்பவங்களையும் ஐ.நா விசாரணைக்கு சாட்சியங்களாக வழங்கமுடியும்.

தமிழினஅழிப்பில் ஈடுபட்டவர்களை பொறுப்புக் கூற வைப்பதோடு, தமிழர்களுக்கான பரிகார நீதியினை அனைத்துலக சட்ட வழிமுறைகள் ஊடாக கோருவதற்கு எட்டியுள்ள வாய்ப்பாக ஐ.நா விசாரணையினை ஈழத் தமிழர்கள் கருதுகின்றனர்.

## வல்வை சகாறாவின் காவியத்தூது வேங்கையன் பூங்கொடி நூல் வெளியீட்டு விழா






இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியப் பிரதமர்-அமெரிக்க முதலாளிகள் ஒப்பந்தம் தொழிலாளர்களைப் பாதிக்கும்.

இந்தியப் பிரதமர் அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்தார். அப்போது அவர் அங்குள்ள கார்போரேட் முதலாளிகளுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். அந்த ஒப்பந்தம் தொழிலாளர் நலன்களை மிகவும் பாதிக்கும் என்ற உண்மை இப்போது வெளியாகி உள்ளது. இந்தச் செய்தியை குஜராத்தின் உண்மை(Truth Of Gujarat) என்ற இணையதளம் வெளியிட்டுள்ளது. அத்துடன் இது பற்றிய மேலதிக தகவல்களையும் இந்த இணைய தளம் அளித்துள்ளது. 2001 ம் ஆண்டு குஜராத் மாநிலத்தின் முதல்வராகப் பதவி ஏற்றுக்கொண்டதில் இருந்து பெரிய முதலாளிகளுக்குச் சாதகமாக நடந்து வந்து இருக்கிறார். புதிய பொருளாதார மண்டலங்கள் அமைக்கப் பட்டன .இப் பொருளாதார மண்டலங்களுக்கு அரசு நிலங்களைத் தனது நெருங்கிய நண்பர்களும் பெரும் பணக்காரர்களுமான அம்பானி, அடானி, டாட்டா ஆகியோருக்கு வாரி வழங்கினார்

ஏறக்குறைய 27,125 ஹெக்டேர் நிலங்கள் பெரிய முதலாளிகளுக்குக் கொடுக்கப் பட்டுள்ளன. பெரும் பகுதி நிலங்கள் ஏழை விவசாயிகளிடம் இருந்து கட்டாயப் படுத்திப் பெறப் பட்டது. இந்த விவசாயிகள் தாம் வாழும் பொருட்டு இடம் பெயர்ந்து பல இடங்களிலும் அலைகிறார்கள்.இந்த நிலங்களை அரசு கையகப் படுத்திய போது பல்வேறு மனித உரிமைகளும் மீறப் பட்டுள்ளன. அத்துடன் மத்தியில் பாரதீய ஜனதா அரசு அமைந்ததில் இருந்து பல முதலாளிகளுக்கு மேலும் பல சலுகைகள் வழங்கப் படுகின்றன.

அத்துடன் சட்டங்களும் இந்த முதலளிமாருக்குச் சாதகமாக உருவாக்கப் பட்டன. புதிய பொருளாதார மண்டலத்தில் தொழில் நிறுவனங்கள் தொழில் தொடங்கும் போது அங்குள்ள பஞ்சாயத்துக்களுக்கு வரி செலுத்தத் தேவை இல்லை என்ற சட்டம் கொண்டு வரப் பட்டது. இச் சட்டம் சாதாரண மக்களுக்குப் பெரும் சுமையாகவும் பணக்கார முதலாளிகளுக்கு வரிச் சலுகையாகவும் அமைந்து விட்டது. அத்துடன் அமரிக்கா சென்ற மோடி அவர்கள் செப்டம்பர் மாதம் 28 ம் திகதி மடிசன் சதுக்கத்தில் உரை நிகழ்த்தினார். அப்போது இந்தியாவில் தொழில் தொடங்க வெளி நாட்டவர்களுக்குத் தடையாக உள்ள அனைத்துச் சட்டங்களையும் இல்லாது ஒழிப்பதற்குத் தயார் என்று உறுதியளித்தார் .

அடுத்த நாள் காலையில் கூகுள், பெப்சிகோ, கேட்டர் பில்லர் உள்ளிட்ட 11 நிறுவனங்களின் தலைவர்களைச் சந்தித்துப் பேசிய போது பொருளாதார மாற்றத்தை விரும்பும் இந்தியா வெளி நாட்டு முதலீட்டுக்காக எல்லா உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறது எனவும் அதற்குத் தொழிலாளர் சட்டங்கள் தடையாக இருக்காது எனவும் தெரிவித்தார். அதே நாளில் பெரும் தொழில் அதிபர்களையும் சந்தித்துப் பேசினார். அங்கு உரையாற்றிய மத்திய சட்ட அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் தொழிலாளர் சம்பந்தமான முக்கிய சட்டங்கள் திருத்தி அமைக்கப் படும் என்றார். மேலும் 287 சட்டங்களையும் திருத்தி அமைக்க வேண்டி உள்ளது என்றும் சொன்னார். ராஜஸ்தானில் உள்ள பாரதீய ஜனதா அரசு பல தொழிலாளர் சட்டங்களைத் திருத்தியது குறிப்பிடத் தக்கது. வர்த்தகத்தைப் பெருக்குவதற்காக மோடி அரசு தொழிலாளர் சட்டங்களையும் சுற்றுச் சூழல் சட்டங்களையும் மாற்றுவதில் தீவிரமாக ஈடு பட்டுள்ளது. இதனைத் தொழிலாளர்களும் தொழிற்ச் சங்கங்களும் பெருமளவில் தமது எதிர்ப்பினைக் காட்டி வருகின்றனர்.



## கப்பல் மூலம் கனடா வந்த இலங்கை அகதிக் கோரிக்கையாளர்கள் மீது வழக்கு

கனடாவின் உயர் நீதி மன்றத்தில் கப்பல் மூலம் கனடா வந்த அகதிக் கோரிக்கையாளர்கள் பற்றிய விசாரணை நடை பெறுகின்றது. விசாரணையில் சாட்சியம் அளித்த கப்பல் பணியாளர் தாம் பலாத்காரமாகவே பணியில் அமர்த்தப் பட்டதாகச் சாட்சியம் அளித்தார். 2010 ம் ஆண்டு சன் சீ கப்பலில் 492 இலங்கை அகதிகள் கனடாவில் உள்ள வன்கூவர் நகர துறைமுகம் வந்தனர்.இதற்கு முன்னர் 2009 ம் ஆண்டும் 76 இலங்கை அகதிகளைக் கொண்ட ஒரு கப்பல் கனடா சென்றது .இக் கப்பலில் பயணம் செய்தவர்கள் 30,000 - 40,000 செலுத்தியே கனடா வந்ததாகச் சொன்னார்கள். இது சம்பநதமாக ஐந்து வழக்கால் தொடரப் பட்டன.

இதில் மூன்று வழக்குகளில் சம்பந்தப் பட்ட பணியாளர்கள் தாம் பலாத்காரமகத்தான் பணியில் அமர்த்தப் பட்டதாகச் சாட்சியம் அளித்தனர். நான்காவது வழக்கில் சம்பந்தப் பட்ட மாலுமிகள் தாம் அகதிகளுக்கு உதவி செய்ததாகக் குறிப்பிட்டனர். இதனை நீதி மன்றம ஏற்றுக்கொண்டது. அனால் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை.இந்த நிலையில் ஐந்தாவது வழக்கில் சம்பந்தப் பட்டவர் கியூபா நாட்டவராகும். அவர் கைது செய்யப் பட்டு நாடு நாடு கடத்தப் பட்டுள்ளார்.


FOR THE PEOPLE, FOR THE FUTURE

Over 100 Canadian engineers have endorsed a strong leader to represent the residents of Markham.

"It is with great pleasure to publicly endorse Raj Subramaniam for Councillor in Markham ward 5. My interactions with Raj carry many years both professionally and personally - he has worked tirelessly with tremendous dedication to improving the quality of lives for many individuals across this cith, always working to bring forth positive change in the community. I proudly and enthusiastically support Raj Subramaniam for Councillor in Markham Ward 5."

- Varathan Muthulingam. M.D,



Raj Subramaniam P.Eng

YOUR WARD 5 COUNCILLOR CANDIDATE
CITY OF MARKHAM




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ISIS தீவிரவாதிகளின் கத்தி, துப்பாக்கி, சதித் திட்டங்கள் கண்டு பிடிக்கப் பட்டன.




கனடிய உளவுத்துறை தீவிரவாதிகள் என்று கருதப் படும் 80 பேரைக் கவனித்து வந்தது. இவர்களிடையே நடந்த உரையாடல்கள் மூலம் இவர்கள் அமெரிக்காவையும் குடிமக்களையும் தக்குவதற்குச் சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப் பட்டது. இதனால் ஒட்டவாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு பலப் படுத்தப் பட்டுள்ளது. கனடிய அதிகாரிகள் பொதுக் கட்டடங்களின் பாது காப்பை அதிகரிக்க உள்ளது. ஒருவரோ அல்லது ஒரு குழுவினரோ தாக்குதல்களை மேற்கொள்ளும்போது காவல் துறையினர் வரும் வரை இந்த நடவடிக்கைகள் எடுக்கப் படும்.சமீபத்தில் வாக்கெடுப்பின் மூலம் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எதிராக ஈராக்கில் வான்வழித் தாக்குதல் நடத்தத் தீர்மானிக்கப் பட்டதன் பின்னரே ISIS பாணியில் செயல்பாடு உயர்ந்து உள்ளது என்று யு .எஸ். கனடிய அதிகாரிகள் நம்புகிறார்கள்."இந்த பயங்கரவாத அமைப்பு தடுக்கப் படாவிட்டால் இது வளர்ச்சி அடைந்து விடும்.இவர்கள் ச்கானடவையும் ஒரு இலக்காக அடையாளம் இட்டுள்ளனர் " என்று கனடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் கூறி இருக்கிறார்.

கனடியப் பாது காப்பு புலனாய்வுச் சேவை தலைவர் மைக்கேல் கொலம்பே "நாட்டின் உள்ளே பயங்கரவாத தாக்குதல்களுக்கு எந்த விதமான அறிகுறிகளும் இல்லை" என்றும் நாம் பயமுறுத்த விரும்பவில்லை. மக்கள் தமது வாழ்க்கையைத் தொடரலாம் என்றும் பயம் கொள்ளத் தேவை இல்லை என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். இதே போன்று ஆர். சி. எம். பி. ஆணையாளர் பொப் பால்சனும் கருத்துத் தெரிவித்துள்ளார்..

## "யாழ்ப்பாண நகரை டொரோண்டோ நகரின் சகோதர நகரமாக அறிவிக்கப்படும" -ஜோன் டோரி

## "மட்டக்களப்பு நகரம் மிசிசாகா நகரத்தின் சகோதர நகரமாக அறிவிக்கப்படும்" - போனி குரோம்பி

மிசிசாகா நகரத்தின் மேயர் பதவிக்குப் போட்டியிடும் முதன்மை வேட்பாளரான போனி குரோம்பி பெருந் தொகையாகக் கலந்து கொண்ட மக்கள் மத்தியில் தான் நகர மேயராகத் தெரிவு செய்யப்பட்டால் ஈழத்தின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு நகரை மிசிசாகா நகரின் சகோதர நகரமாக அறிவிப்பதாக உறுதி அளித்தார்.அவர் கடந்த சனிகிழமை யாழ் ஹோப் (Corp ) கட்டிட மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் கலந்துரையாடலில் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார் . டொரோண்டோ நகர மேயர் பதவிக்கு வேட்பாளராகப் போட்டியிடும் ஜோன் டோரி அவர்கள் தான் மேயராகத் தெரிவு செய்யப் பட்டால் ஈழத்தின் வடக்கு கிழக்கு மாகாணத்துடன் இணைந்து செயல் படப் போவதாகக் குறிப்பிட்டு இருந்தார்.

அத்துடன் யாழ்ப்பாண நகரை டொரோண்டோ நகரின் சகோதர நகரமாக அறிவிப்பதாகவும் தெரிவித்து இருந்தார். அதற்கு ஏற்ப தானும் மட்டக்களப்பு நகரினை மிசிசாகா நகரின் சகோதர நகரமாக அறிவித்து அந்த நகருடன் இணைந்து செயல் பட உறுதி பூண்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் கனடாவில் வாழும் தமிழ் மக்கள் கனடாவின் வளர்ச்சிக்குப் பெருமளவில் பங்களித்து இருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

கனடிய தமிழ் மக்கள் அரசியல் பலம் மிகுந்த சமூகமாக வளர்ந்து வருவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



எனவே இச் சந்தர்ப்பத்தை பயன் படுத்தி இரு நகரங்களின் முதன்மை வேட்பாளர்களும் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றும் வண்ணம் பெருமளவில் தமிழ் வாக்காளர்கள் வாக்களிப்பது அவசியமாகும்.



MY PLAN

**Advocate for Quality Education**
As a Trustee I will be focused on promoting 21st century learning on your child's academic achievement and character development while representing the community that I live in. As an active community member in this riding, I have the skill sets and the personal relationships to make an impact on the Board level that will ensure we have the best educational system for our children.

**Building Bridges With the Community**
An open and transparent dialogue is necessary to ensure we are maximizing our voice in providing the best education possible for our children. Our schools are the hubs of our community and their success is something for all of us to celebrate. As a Trustee I would take every opportunity to listen to community partners, identify issues and communicate the needs of our community as your Board representative.

**Special Needs Programming**
No two children learn the same way. Having adequate programming that reflects the special educational learning needs of each child is imperative for their success. Advocating for greater special needs programs and services will be a central point on what I will be advocating for on the School Board level.



Elect
Rukshan
PARA
On October 27
As your local School Board Trustee

Area 3




Cell: 647.273.8096 | Off: 905.910.0387
rukshan@rukshanpara.com
www.rukshanpara.com

இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.votejdlieberman.com

# ELECT



## Jeevitha Deborah Lieberman

for School Trustee - Scarborough - Rouge River

(Ward 21, city ward 41&42)

**STAND FOR:**

- Accountability - no misuse of tax payers dollars
- Advocacy - respect community values in school system
- Awareness - increase awareness of school system for parents
- Active Education - increase hands - on education and trade experience in school curriculum

Ward 21 Scarborough-Rouge River
October 27th, 2014

**416-949-9957**
votedlieberman@gmail.com

For WARD 6 Councillor



## நீங்கள் ஏன் வாக்களிக்க வேண்டும்?

இனி வரும் பொன்னான 4 வருடங்களுக்கு நீங்கள் செய்த உள்ளவரை மாற்ற முடியாது.
ஆகவே சரியான தகுதியான ஒருவரை தெரிவு செய்வது மிக மிக முக்கியம்.

## ஏன் நான் உங்கள் ஒரே தெரிவு?

நான் பல்லாயிரம் மாணவர்களை முன்னேற்றியுள்ளேன் இப்பொழுது எமது ஸ்டொவில் பகுதியை முன்னேற்ற வந்துள்ளேன்.

நான் ஓர் ஆசிரியர், அதிபர் மற்றும் கல்லூரிப் பேராசிரியர்.

எனக்கு 6ம் வட்டாரத்தின் முன்னேற்றமும் பாதுபாப்பும் வளர்ச்சியுமே மிக முக்கியம், ஏனெனில் நான் உங்கள் வட்டாரத்தில் கடந்த 6 வருடங்களாக வசிக்கிறேன். மேலும் எனக்கு மிகவும் பிடித்துள்ள ஸ்டொவில் மிக இலகுவாக முன்னேற்றக்கூடியதும் வளம் பொருந்தியதுமான பிரதேசம். இதனை திட்டமிட்டு, நெறிப்படுத்துவதற்கு என்னிடம் பல இலகுவான வழிமுறைகள் உள்ளன.

**நீங்கள் எனக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் உங்களின் பெருமை சொல்லும்.**
**தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா!**

ELECT
SENTHURAN

**PARAMASAMY**
B.Sc., M.Sc., B.Ed., M.Ed (cand)

**647 527 - 1435**
www.senthuranparamasamy.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இ குருவி ஐயாவும் நானும்




இகுருவி ஐயா சாதாரணமாக சிரிக்க சிரிக்கப் பேசுவார். ஆனால் படம் எடுக்கும் போது மட்டும் படு சீரியஸ் ஆகிவிடுவார்."ஏனண்ணை.. சீரியஸா இருக்கிறீங்கள்?" என்றால் கோபமாகிவிடுவார். "படத்தை ஒழுங்கா எடுக்க விடடாப்பா.." என்றுவிடுவார்.

அன்றும் அப்படித்தான். சீரியஸாக படம் எடுக்கிறார் என்று நினைத்து பேசாமல் இருந்தேன். பக்கத்தில் வந்து தான் எடுத்த போட்டோக்களை செக் பண்ணிக் கொண்டிருந்தார். நான் பகிடி விடுவோம் என "உங்கட படங்கள் நல்லாயிருக்கு அண்ணை..நல்ல கமாராதான் வைச்சிக்கிறியள் போல.." என்றேன்."ஓம்.. ஓம்..நீயும் நல்லாத்தான் எழுதுறாய்.. நல்ல பேப்பரும் பேனையும் வைச்சிருக்கிறாய்போல.." என்று திருப்பி அடித்தார். இருவரும் சிரித்தோம்.

"என்னண்ணை சரியான பிஸியே.." என்றேன். "ஓமடாப்பா ஓடி ஓடி படங்கள் எடுக்க வேண்டியிருக்கு. எலக்க்ஷன் வருகுதில்லே" என்றார். "எதை?முனிஸிபல் எலெக்க்ஷனைச் சொல்லுறியளே?" என்றேன். "ஓ... ஓ... இந்தமுறை பாத்தியே எத்தினை தமிழாக்கள் போட்டி போடுகினமெண்டு.." என்றார். "நல்லதுதான். ஒரு காலத்தில



ரெஸ்ரோரன்டுகள் போடுறதில நாங்கள் தீவிரம் காட்டினம். பிறகு இலவசப் பத்திரிகை அச்சடிப்பதில் தீவிரம்.. பிறகு ரியல்எஸ்டேட் வியாபாரத்தில தீவிரம்.... இப்ப பொலிக்டிக்ஸில தீவிரம் காட்டுறம்." என்றேன். "நல்லதுதானே.. சமூகம் வளருது.." என்றார். வளருதோ..? "இதொண்டும் வளர்ச்சியில்லையண்ணை.. வீக்கம் மாதிரித் தெரியுது." என்றேன்.

"சும்மாயிரடாப்பா.. எல்லாத்தையும் விமர்சிக்க ஏலாது. ஆரோ ஒரு ஆள் போட்டி போடத்தானே வேணும். அது எங்கட தமிழ் ஆளா இருந்துட்டுப் போகட்டன்" என்றார். நான் எதுவும் பேசவில்லை.

ஒரு வகையில் பார்த்தால் இகுருவி ஐயா சொல்வது சரிதான். தமிழர் அதிகமாக வாழும் பகுதிகளில் தமிழர்கள் போட்டி போட நினைப்பதில் என்ன குறை?. ஆனாலும் ஒரு குறை இருக்கிறது.ஷதாங்கள் போட்டியிடும் தொகுதிகளில் வெற்றி பெறவேண்டும் என்பதற்காகபோட்டியிடுகிறார்களா?☼ அல்லது ஷவெறுமனே போட்டி போடவேண்டும் என்பதற்காக போட்டியிடுகிறார்களா? என்பதையெல்லாம் ஆராய்ந்தால் சுவாரஸ்யமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டேன். போட்டியிடுபவர்களில் எத்தனைபேர் தாங்கள் போட்டியிடும் இடங்களில் கட்டாயம் வெல்வோம் என்ற நினைப்பில் இருக்கிறார்களோ தெரியவில்லை. எலெக்சன் ரிஸல்ட் வந்தாத்தான் தமிழ் ஆதரவு அலைஎப்படி அடித்தது என்று சொல்ல முடியும்.

நான் பேசாமல் இருப்பதைக் கண்டு இகுருவி ஐயா என்னைச் சீண்டினார்."போட்டி போட்டு வெல்லுகினம் எண்டு வைச்சுக்கொள். அதால அவை எல்லாத் தமிழரையும் பெருமைப்படுத்துவினம்தானே.." என்றார்.

நான் உடனே"வெல்பவர் தமிழரை பெருமைப்படுத்திறார் எண்டு அர்த்தம் எண்டா தோற்பவர்கள் தமிழரை அவமதிச்சிட்டினம் எண்டும் அர்த்தம் எடுக்கலாம்தானே அண்ணை?" என்றேன்.

இகுருவி ஐயா முறைத்தார். தமிழர் ஒருவர் வென்றால் தமிழருக்குப் பெருமை என்று பெருமிதப்படுவதுபோல தமிழர் ஒருவர் தோற்றுவிட்டால் அவரால் தமிழருக்கு அவமானம் வந்து விட்டதே என நாம் நினைப்பதில்லை. வெற்றி தோல்வி வாழ்க்கையில் சகஜம் என்போம். (அல்லது வேறு யாரையாவது தோல்விக்குக் காரணம் என குற்றம் சாட்டுவோம்.) ஏன் தோற்றோம் என்பதைக் குறித்துச் சிந்திக்க மட்டும் நாம் மறந்துவிடுகிறோம். களத்தில் ஒருவர் வெல்லவேண்டும் என்ற சூழ்நிலை அமைந்தால் மற்றவர் தோற்கத்தான் வேண்டும். அதுதான் தலைவிதி.

"தோத்தவனைப் பாத்து நீங்கெல்லாம் சிரிக்காட்டிச் சரி" என்றார்.

உண்மைதான். தோற்றவனைப் பார்த்து நக்கல் சிரிப்புச் சிரிப்பது என்பது உலக மகா அயோக்கியத்தனம். அதேபோல வென்றவன் பெரும் வீரன் என்று நினைப்பதும் அறிவிலித்தனம். எல்லாமே சூழ்நிலைதான். இந்த சூழ்நிலையைப் புரிந்து வெற்றி அடைவதற்கான வியூகத்தை வகுப்பதே ராஜதந்திரம். இன்று இந்த தேர்தல் களத்தில் நாம் பல வேட்பாளர்களைப் பார்க்கிறோம். அவர்கள் எந்த அடிப்படையில் வெல்வதற்கான தம் வியூகத்தை வகுத்தார்கள் என்பதைமட்டும் நம் சிற்றறிவை வைத்துக்கொண்டு ஊகிக்க முடிவதில்லை. தமக்கு தமிழ் மக்களிடையே ஆதரவு இருக்கிறது என்ற ஒரு பெரும் குருட்டு நம்பிக்கையைத் தவிர்த்துவேறு என்ன தெரிகிறது?அல்லது எந்தப் பின்புலத்தை நம்பி அவர்கள் களத்தில் குதிக்கிறார்கள் என்ற கேள்வி எனக்குள் எப்போதுமே குதியாடுவதுண்டு.

ஆனா எங்களிலஒரு சிலரைத் தவிர மற்ற பலரும் தமிழற்ரை வோட்டு மாத்திரம் கிடைச்சாலே போதும் தாங்கள் வெண்டிடலாம் எண்டமாதிரி நினைக்கினமோ தெரியேல்ல."


"இந்த நிலவரம் இருக்கேக்கை இரண்டு தமிழர் ஒரே தொகுதில போட்டி போட்டா தமிழ் வோட்டுகள் பிரியும் எல்லோ அண்ணை..."

"இரண்டுபேருமே தங்களுக்கு மட்டும்தான் முழுத் தமிழரும் வோட்டுப் போடுவினம் எண்டு நம்புறதால வாற வினை இது. பாவம் தமிழ் வாக்காளர்கள்..." என சிரித்தார் இகுருவி ஐயா.

"அண்ணை வாக்காளர்கள் புத்திசாலியள்.. அவையை பேய்க்காட்ட ஏலாது. உண்மையிலஷபாவம் வேட்பாளர்கள்☼ எண்டு சொல்லுங்கோ.." என்றேன்.

"ஒரு கிசு கிசு சொல்லுறன் கேள். எனக்குத் தெரிஞ்ச ரியல் எஸ்டேற்காரர் ஒருவரிட்டை வேட்பாளர் ஒருத்தர் ஷ எனக்கு விளம்பரங்கள் செய்யிறதுக்கு காசு போதாமக் கிடக்கு.. அதால என்ரை விளம்பரங்களை ஸ்பொன்ஸர் செய்வியளே☼ எண்டு கேட்டவராம்."

"அடிசக்கை.." என்றேன் நான். "மேல்பகுதியில நாட்டுக்காக விளம்பரம்.. கீழ வீட்டுக்காக விளம்பரம். நல்ல கொம்பினேக்ஷன்." என்று சிரித்தேன்.



ஒரு மன்னர் ஜோக்தான் நினைப்புக்கு வந்தது. சேவகன் மன்னரை வரவேற்று கத்துகிறான்: "பாராக். பாராக். இதுவரை நான்கு மன்னர்களை வெற்றி வீரராக்கிய நமது மன்னர் வருகிறார்.. வருகிறார்.." ஹா..ஹா..ஹா... அடிக்கடி தேர்தலில் தோற்கும் வேட்பாளர் யாராவது இருந்தால் அவருக்கு இந்த ஜோக் பொருந்துமோ? மனதுள் சிரிப்பு வந்தாலும் அடக்கிக் கொண்டேன். ஷசீ.. சீ... தோற்றவரைப் பாத்துச் சிரிக்கக்கூடாது.☼

"அண்ணை... எலக்க்ஷன்காறர் கனபேரைப் பாத்தனியள்.. அவை தமிழ் சமூகத்தைத் தவிர மற்ற கொம்முனிட்டியளில ஒண்டாவது தனக்குப் பின்னால நிக்கும் எண்டு நம்புகினமே?" என்று அவரிடம் கேட்டேன்.

இகுருவி ஐயா கமராவுக்குள் எதையோ பார்த்துக் கொண்டு இருந்தாரே தவிர பதில் சொல்லவில்லை.

"அப்ப எப்பிடியண்ண உவையெல்லாம் வெல்லுவினம் எண்டு நினைக்கிறியள்?" என்றேன்.

"ம்..ம்...ம்... மேயர் வேட்பாளர்களைப் பாத்தியெண்டா சமூகம் சமூகமாப் போய் தங்களுக்கு ஆதரவு தேடுகினம். அவை ஒவ்வொரு சமூகத்துள்ளும் தமக்கான ஆதரவாளர்களைத் தேடி அவர்களுக்கூடாக தங்கட வாக்கு வங்கியை கவனமாப் பலப்படுத்துகினம்.

"அப்படியும் எடுக்கலாம். இல்லாட்டி ரியல் எஸ்டேட்காரற்ரை தனிப்பட்ட செல்வாக்கை தனக்கு பயன்படுத்துற யோசனையாவும் இருக்கலாம். ஒரே கல்லில இரண்டு மாங்காய்.."

"அதுசரி அண்ணே.. மேயர் வேட்பாளர்களோட நிண்டு போட்டோவெல்லாம் போட்டிருக்கிறியள்... மூன்று பேரோட நிண்டாலும் நீங்க அதில ஒரு ஆளுக்குத்தானே வாக்களிக்க வேணும். ஆரை மேயர் எண்டு தெரிவு செய்வியள்?" என்றேன்.

"நோ.. நோ.. நோ... வேண்டாம்.. வேண்டாம்.. நான் மீடியாக்காறன். எல்லாரோடையும் நிப்பன். ஆனா ஆருக்கு என்ரை வோட் எண்டது என்ரை ரகசியம்." என்று சிரித்தார். "நீங்க மீடியாக்காரன் எண்டபடியால ஜோன் ரோறிதான் உங்கட சொய்ஸோ?" என்றேன் நானும் விடாமல்.

இகுருவி ஐயா சிரித்தார். "ஜோன் ரோறி ரேடியோ அறிவிப்பாளரா இருந்தவர். நான் ரேடியோ அறிவிப்பாளன் இல்லை.." என்றார்.

"ஜோன் ரோறி ரேடியோவில அறிவிப்பாளராக இருக்கேக்கைதான் ஹைவேயை தமிழாக்கள் மறிச்ச சம்பவம் நடந்தது. கன மீடியாக்கள் தமிழ் மக்களினர அந்தச் செயலுக்கு

...அடுத்த பக்கம்

இ குருவி பெருமையுடன் வழங்கும் Piztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பா இருந்தவை.அந்த நேரத்தில தமிழர்கள் பயங்கரவாதிகள் எண்டு ஆரோ சொன்னதுக்கு ஜோன் ரோறி ரேடியோவில சொன்ன மறுப்புப்பை பதிவா யூரியூப்பில போட்டிருக்கிறாங்கள். பாத்தனான். ஷஜோன் ரோறி இ ஷரமில்ஸ் என்று போட்டுத் தேடிப்பாத்தா வரும்.தமிழர்கள் செய்ததை தவறா எடுக்கக்கூடாது அவர்கள் பயங்கரவாதிகள் இல்லை... தமிழர்கள் சமூக அளவில குறிப்பிடத்தக்க

"அரசியல்வாதிக்கு வாக்கு தேவை. அதில என்ன பிழை இருக்கு? இதைப்பற்றிப் பேசினா சிலவேளை தனக்கு முத்திரை குத்தப்படும்... வாக்கு வங்கி குறைஞ்சிடும் எண்டு அடக்கி வாசிக்காம பயம் இல்லாம தமிழரை ஆதரிச்சு வெளிப்படையா - ரேடியோவில ஒரு அறிவிப்பாளரா இருந்துகொண்டும் - அப்படிப் பேசினது பெரிய விசயமில்லே..."



யூனியன்வில்லில் இருந்து ஸ்காபரோ ஊடாக விமான நிலையத்திற்கு செல்லும் விரைவு ரயில் பாதை!

விதமா சாதனை செய்யிறார்கள் எண்டு ஜோன் ரோறி தன்ரை ரேடியோவில ஐந்து நிமிசமளவுக்குப் பேசுவார்... கேட்டுப்பாருங்க அண்ண.. 2010 ஏப்ரலில அப்படி பேசினது எங்களுக்கு பெரிய விசயம்."

"ஓ... நீ அவற்ரை ஸப்போட்டரோ..?" என்று சொல்லிச் சிரித்த இகுருவி ஐயா "உண்மைதான். எங்கட ஆக்களுக்கு ஒப்பினா ஸப்போர்ட் பண்ணிறவையை நாங்க ஆதரிக்கலாம்தான்.. ஆனா தமிழற்றை வாக்குகளை எடுக்கத்தான் அப்படி பேசியிருப்பார் எண்டும் சொல்லலாமெல்லே..." என்றார்.

இகுருவி ஐயா கண்ணாடியைக் கழற்றி துடைத்துக் கொண்டே யோசித்துக் கொண்டிருந்தார். "ஆனாமற்றமேயர் வேட்பாளர்கள் தமிழருக்கு ஆதரவான ஆக்களில்லை எண்டும் சொல்ல முடியாதுதானே.." என்றார்.

"அப்படி நான் சொல்லேல்லை. ஆனா சிலற்ர கொன்ரிபியூசன்ஸ் பெரிசாத் தெரியுது.." என்றேன்.

"டக் போர்ட் என்ன சொல்லுறார்?"

"அண்ணை... டக் போர்ட் சொல்லுறதுக்கு புதிசா என்ன இருக்கு... அவற்றை சகோதரம் சொன்னதைத்தான் இவரும் திருப்பிச் சொல்லுறார். ரொப் போர்ட் செய்தவற்றையெல்லாம் தான் செய்ததுபோலவும் சொல்கிறார்.. அதுதான் கொஞ்சம் இடிக்குது. மற்றப்படி டக் போர்ட் புது ஆள்.அண்ணர்போலவே தம்பியும் சேட்டைக் கதைகள் சொல்வதுபோலவும் தெரியுது. ஒரு மேயர் வைத்திருக்கவேண்டிய மதிப்புக்களை மதிக்காமல்செயல்பட்டவர் ரொப் போர்ட். அவருக்கு கிடைத்த ஆதரவு தம்பியாருக்கு அப்படியே திருப்பித் தரப்படவேண்டுமா என்ற கேள்வி என்மனதில் இருக்கிறது. இன்னுமொன்று.. ரொப் போர்ட் செய்த நல்ல விசயங்கள் பலவும் ஒரிடத்தில் கட் பண்ணி மற்ற இடத்திற்கு கொடுத்த விடயங்கள் எண்டுதான் அவற்ரை விமர்சகர்கள் சொல்லுறாங்கள்."

"ஒலிவியா சோ?" என்றார் இகுருவி ஐயா.

"பொதுவா கருத்துக் கணிப்புகள் எல்லாம் அவ கடைசில இருக்கிறமாதிரித்தான் காட்டுது. தான் பொம்பிளை என்றதாலயும் தான் இமிகிரன்ட் பின்னணியை வைத்திருப்பதால பாதிக்கப்படுவதாகவும் அவர் சொல்லியிருந்தார். தாய்க்குலத்தின் ஆதரவையும், இமிகிரன்டுகளின் ஆதரவையும் கூடவே என்டிபியின் ஆதரவையும் அவர் நம்பியிருப்பதுபோல இருக்கிறது. போக்குவரத்தைச் சீர்படுத்த தன்ரை திட்டமா பஸ்களின் தொகையை அதிகரிக்கப்போவதாகச் சொல்கிறார். பஸ்களின் என்ணிக்கையை கூட்டுவது எந்த அளவுக்கு போக்குவரத்து நெரிசலைச் சீராக்கும்? அதில வேற சில சிக்கல்களும் உண்டு."

"அப்ப போக்குவரத்து நெரிசலை தவிர்க்க என்னதான் செய்யலாம்..? ஸப்வே எண்டு நிலத்தைக் கிண்டத் தொடங்கினா எவ்வளவு நாளெடுக்குமோ..." ஆதங்கப்பட்டார் இகுருவி ஐயா.

"மூன்று பேருமே ஸப்வேக்கு எதிரான ஆக்கள் இல்லை. ஆனா அவயின்ரை ஸப்வே தவிர்ந்த மற்றத் திட்டங்கள்தான் விவாதத்துக்கு உட்படுத்தக் கூடியவை. இதுக்குள்ள ஜோன் ரோறி சொல்லியிருக்கும் ஷஸ்மார்ட் ட்ராக் திட்டம் உண்மையில் ஒரு

## கனடா மூர்த்தி

இன்ரறஸ்டிங்கான திட்டம்."

"ம்... அந்தத் திட்டம் ஸ்காபரோவை மையப்படுத்துது.. எயர்போர்ட்டில இருந்து டவுன்ரவுனுக்கால போய் பிறகு ஸ்காபரோ... அதுக்குப் பிறகு யூனியன்வில் வரை போய் வாறமாதிரியான பிளான் என..?" ஆமோதிப்பதுபோல கேட்டார் இகுருவி ஐயா.

"இதை ஒரு புத்திசாலித்தனமான யோசினை எண்டு சொல்லலாம். இதை ஏன் இதுக்கு முந்தி இருந்த ஆக்கள் யோசிக்கேல்லை எண்டுதான் தெரியேல்ல. ஏற்கனவே இருக்கிற ரெயில் ரோட்டுக்களைப் பாவிச்சு கடுகதி மெற்ரோ ரயில் நிலத்துக்கு மேலயே ஓடுறமாதிரி ஜோன் ரோறியின் ஆக்கள் திட்டத்தை டிசைன் செய்திருக்கினம். திட்டத்தை நிறைவேற்றுறதும் ஒப்பிட்டு ரீதியில ஈஸியான விசயம். இந்தத் திட்டம் வந்தா தமிழர்கள் அதிகமா வாழுற எங்கட ஸ்காபரோ பகுதியில போக்குவரத்து வசதிகள் உண்மையிலேயே சீராகும். கார் இல்லாமல் ஆக்கள் அங்கயும் இங்கயும் போறதுக்கும் வாறதுக்கும் ஈஸியான போக்குவரத்து ஸ்காபரோவுக்குள்ள வந்திடும். வீட்டு விலையள்கூட இதால கூடலாம்.."

"ஸ்காபரோவாசிகளே... ஜோன் ரோறியை ஸப்போர்ட் பண்ணி மேயராக்குங்கோ எண்டு நசுக்கிடாமச்சொல்லுறாய் போல..." என்று என்று சொல்லி என் கழுத்தைப் பிடித்தார் ஐயா.

"மீடியாக்காரன் அண்ணேய்...." என்று சிரித்தேன் நான்.




இ குருவி பெருமையுடன் வழங்கும் Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்திற்கான ஒரு குரல்

# சிவவதனி பிரபாகரன்

வாக்களியுங்கள்

OCT 27 Elect



VOTE FOR YOUR VOICE
VOICE FOR THE CHANGE

SIVAVATHANI
**PRABAHARAN**

COUNCILLOR | SCARBOROUGH ROUGE RIVER | WARD 41



CITY COUNCILLOR WARD 37
SCARBOROUGH CENTRE

Elect

# BALACHANDRAN NIRANJAN



Tel: 416-919-5491
fb: Ab Ranjan
E-mail: info@niranjan.ca
Web: niranjan.ca


Everything is possible,
Change is in your hand.


**VOTE FOR THE CHANGE**
**DON'T VOTE FOR THE SAME**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வாண்டின் சமாதானத்திற்கான நோபல் பரிசு மலாலாவுக்கும், சத்யாத்திரிக்கும்





சிறுவர்கள், இளைஞர்களுக்கு மறுக்கபடும் உரிமைகளுக்கு எதிராக போராடியதற்காகவும், அனைத்து சிறுவருக்கும் கல்விக்காக போராடியதற்காக இந்த வருடத்தின் சமாதானத்துக்கான நோபல் பரிசை பாகிஸ்தானின் பள்ளிச்சிறுமியும், கல்வி ஆர்வலருமாகிய மலாலா யூசுப்சாய்க்கும், இந்தியாவில் சிறுவர்களின் உரிமைகளுக்காக போராடிவரும் ஆர்வலராகிய கைலாஷ் சத்யாத்திரிக்கும் வழங்குவதாக நோர்வே நோபல் அமைப்பு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் பெண்களுக்கான கல்விக்காக போராடியாதற்காக 2012ம் ஆண்டு தலையில் தலிபான்களாலால் சுடப்பட்ட 17வயது சிறுமியான மலாலா. குறைந்த வயதில் நோபல் பரிசை பெறுபவர் என்ற சாதனைக்கும் சொந்தக்காரர் ஆகிறார்.

இதேவேளை மலாவுடன் இணைந்து அமைதிக்கான நோபல் பரிசை பெறும் 60 வயதான சத்யாத்திரி, மகாத்மா காந்தியின் வழியில் அமைதியான முறையில் போராட்டங்களை மேற்கொண்டு பொருளாதார ஆதாயத்துக்காக சிறுவர் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதை தடுத்து இதுவரை 80,000 க்கு மேற்பட்ட சிறுவர் தொழிலாளர்களை மீட்டு மறுவாழ்வு அளித்து கல்வியூட்டி வருகின்றார்.

ஒரு இந்து மற்றும் முஸ்லிம், ஒரு இந்தியர் மற்றும் பாகிஸ்தானியர் கல்விக்காகவும், தீவிரவாதத்துக்கு எதிராகவும் இணைய வேண்டும் என்றும் முக்கிய செய்தி இவ்விருது வழங்கப்படுவதன் மூலம் வெளிப்படுகிறது என்று நோபல் அமைப்பு தெரிவித்துள்ளது.

## கிறீன் கார்ட் வீசாவுக்கு விண்ணப்பிக்கலாம்!

ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் 2016ஆம் ஆண்டுக்கான அதிர்ஷ்ட் குலுக்கல் மூலம் பல்வகைமை குடியேற்ற விஸா (கிறீன் கார்ட்) திட்டத்துக்கான விண்ணப்பங்கள் இன்று(01) கோரப்படுதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"கிறீன் கார்ட் (Green Card) அதிர்ஷ்ட குலுக்கல்" என அறியப்படும், ஐக்கிய அமெரிக்காவுக்கான 2016ஆம் ஆண்டுக்கான பல்வகைமை குடியேற்ற விஸாவுக்கான அதிர்ஷ்ட குலுக்கல் நிகழ்ச்சிக்கான இலங்கை மற்றும் மாலைதீவு பிரஜைகளுக்கான விண்ணப்ப காலம் 2014ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்படுகின்றது. இதன்படி, www.dvlottery.state.gov. என்ற இணையத்தள முகவரியின் ஊடாக அமெரிக்காவின் பல்வகைமை குடியேற்ற விஸாவுக்கு விண்ணப்பிக்க முடியும்.

பல்வகைமை குடியேற்ற விஸா அதிர்ஷ்ட குலுக்கல் நிகழ்ச்சியானது எழுந்தமானமாக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு குடியேற்ற விஸா நேர்காணலுக்கான சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. நேர்காணலில் தெரிவு செய்யப்படும் போது அவர்கள் ஐக்கிய அமெரிக்காவில் சட்டரீதியாக நிரந்த வதிவிட உரிமையைப் பெறுவார்கள்.

விண்ணப்பத்தின் போது நினைவில் கொள்ள வேண்டிய சில விடயங்கள் பின்வருமாறு:

1. இணையம் ஊடான பல்வகைமை குடியேற்ற விஸா முறைமையின் விண்ணப்ப காலம் 2014ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி இரவு 9.30க்கு ஆரம்பித்து, நவம்பர் மாதம் மூன்றாம் திகதி அதேநேரத்தில் நிறைவுக்கு வருகின்றது.
2. இலங்கை மற்றும் மாலைதீவுகள் ஆகிய தகைமை பெற்ற நாடுகளின் பிரஜைகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.
3. விண்ணப்பதாரிகள் ஒருமுறை மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பதாரிகள் பல்வகைமை குடியேற்ற விஸா நிகழ்ச்சிக்கு தகைமை பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். எனவே, விண்ணப்பிப்பதற்கு முன்னர் விண்ணப்பிப்பதற்கான உங்களுடைய தகைமை குறித்து உறுதி செய்து கொள்ளுங்கள்.
5. விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தின் உறுதிப்படுத்தப்பட்ட இலக்கத்தை பத்திரமாக வைத்திருக்க வேண்டும். நீங்கள் நேர்காணலுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளீர்களா என்பதனை அறிந்து கொள்வதற்கு அந்த இலக்கம் அவசியமானதாகும்.
6. இணையம் வழியான விண்ணப்பம் முற்று முழுதாக இலவசமானதாகும். எவ்விதமான மறைமுக செலவுகளும் இல்லை. ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்துடன் தொடர்புகொண்டவர்கள் எனத் தம்மை அறிமுகப்படுத்தும் போலி நபர்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்பில் அவதானமாக இருக்கவும். விண்ணப்பம் ஒன்றை பூர்த்தி செய்வதற்கும், சமர்ப்பிப்பதற்கும் மூன்றாம் தரப்பின் உதவி அவசியமாக இருக்காது எனவும்,

இந்த விண்ணப்பங்களை பங்களாதேஸ், பிரேசில், கனடா, சீனா, கொலம்பியா, பாகிஸ்தான், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் உள்ளோர் அனுப்ப முடியாது. கடந்த ஐந்து வருடங்களில் குறித்த நாடுகள் 50,000க்கும் மேற்பட்டவர்களை அமெரிக்காவுக்கு அனுப்பியுள்ளமை காரணமாகவே இந்த தடவை குறித்த நாடுகளுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று ராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

Education is the key to unlock the golden door of freedom.

Elect

>> Make a difference for the community since I live in the area
>> Set forum with parents, students, teachers & others to get their values and concerns
>> Respond to parents, teachers or others concerns and take action
>> Safer environment for everyone and a positive school climate that is inclusive with accepting of all children, and prevention of violence
>> Many after school program like academic help, activities, EQAO preparation and etc.



Sathiyanantham
Piravena B.Eng.
Toronto District School Board
Ward 21 ( City Wards 41&42 )

www.Piravena.com 416-999-1666



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ELECT



## Krishanthy Sarojkumaran

**Toronto District School Board Trustee**
Scarborough Rouge River, Ward 21
(City Wards 41 & 42)

647 248 5378
www.electkrishanthy.ca
info@electkrishanthy.ca



for **City Councillor**
**Ward 42 | Scarborough-Rouge River**



**Elect**
October 27
Venthan
**RAMANA**

- *Accessible Leadership*
- *Putting tax payers first*
- *Better Transportation*
- *Great advocate for increase programs for families, including children and youth*
- *Bring jobs and better opportunities*
- *Great support for local businesses*
- *Work for cleaner environment*
- *Promoting diversity and multiculturalism- With special support for seniors*
- *Foster positive image for ward 42*

416-410-4343 | electventhanramana@gmail.com
www.electventhan.com | /electventhanramana


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மார்க்கம் நகரசபை - 5ம் வட்டாரத்தில்
Councillor ஆகப் போட்டியிடும் முதற் தமிழ் வேட்பாளர்

# சிவா சிவஞானம்

Candidate for Councillor Ward 5 - City of Markham

**கடந்த 25 வருட காலமாக மார்க்கம் நகரில் பல்லின மக்களோடு சமூகசேவை செய்துவரும் சிவா சிவஞானம் ஆகிய என்னை வாக்களித்து தெரிவு செய்யுங்கள்**

சிறிலங்கா அரசாங்கத்தினால் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றம், தொடர்ச்சியாக நடத்தப்படும் மானுடத்திற்கு எதிரான குற்றம் மற்றும் இனப்படுகொலை/ இனஅழிப்பு ஆகியவற்றுக்கு எதிராக உலகளாவிய ரீதியல் மேற்கொள்ளப்பட்டுவரும் நீதிக்கான போராட்டத்தில் என் தமிழின உறவுகளுடன் தோளோடு தோள் நிற்பேன்

Your Choice for Ward 5





905-350-1274 | info@electsiva.com | www.electsiva.com

VOTE FOR THE CHANGE
DON'T VOTE FOR THE SAME

**Elect**

CITY COUNCILLOR WARD 38
SCARBOROUGH CENTRE

# THOMAS, DAVID

VOTE FOR ME ON OCT 27 2014

416 752-6999
votedavidthomas@gmail.com
www.votedavidthomas.com





**DIVERSITY & VIBRANT COMMUNITY**
**"MAKE THOMAS DAVID YOUR VOICE"**

*Everything is possible, Change is in your hand*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ELECT

## Nominate Nirmalan Vadivel

as the Federal Liberal Candidate for Scarborough North



"Nirmalan will bring intelligence and knowledge of our communities unto public service in the House of Commons, He has a big heart and is ready to go work for us in Ottawa." -Derek Lee (Former Member of Paliament for Scarborough - Rouge River)



# NIRMALAN VADIVEL

Creativity, Integrity, and Dedication
nirmalanvadivel.ca

# VOTE FOR SUSIE NADARAJAH

Ward 6 Councillor
Whitchurch - Stouffville

416.829.1325



**October 27, 2014** vote4susie.ca

இ குருவி பெருமையுடன் வழங்கும் *Biztha Web Awards 2014 , Dec 12th 2014 @ 6.00pm*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HELP JOHN TORY GET TORONTO BACK ON TRACK.

**JOHN TORY FOR MAYOR**
JOHNTORY.CA

Authorized by the John Tory Campaign



**Help John Tory be the next Mayor of Toronto.**

Join him on Sunday October 19 for a fundraising dinner and reception.

7 PM, Montecassino Place, 3710 Chesswood Drive.
Dinner and post-dinner reception **$100**
Reception only **$10**

Call 416 222-2014 today to reserve your ticket.

**SmartTrack**
**CITYWIDE TRANSIT RELIEF**

60 Wellesley Street West
416-916-8679 info@johntory.ca
@JohnToryTO
fb.me/JohnToryTO



## என் இனிய கனடா தமிழ் உறவுகளே...!

ஈழமண்ணில் தமிழ் உறவுகளின் இருப்பிடங்கள், வாழ்விடங்கள், உடல்,உயிர், உடமைகள் எல்லாம் பறிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு, எரிக்கப்பட்டு, "கூடு இழந்த பறவை போல" ஈழத்தமிழினம் அறிமுகமில்லா தேசங்களுக்கு ஓடியபோது. நீதன் சபாரத்தினம் ஆகிய நான் ஈழதேசத்தில் பிறந்து, மூன்று வயதில் கனடா மண்ணில் தவழ்ந்தேன். என்போன்ற பலருக்கு பலவிதமான உதவிகளையும் செய்து. பாதுகாப்பு கொடுத்து. "வேர் அறுந்த தமிழினத்தை மூலவேராக்கியது" கனடா தேசமல்லவா? எம் தாயிலும் மேலான கனடா தேசத்திற்கு தமிழர்களாகிய நாம் என்றென்றும் நன்றியுடையவர்களாகவே இருப்போம்..
கனடா தேசத்தின் வளர்ச்சிக்கு என் மனதில் உள்ள எண்ணங்களை நிறைவேற்றுவதற்கு. சில அரச அதிகாரங்களும் மக்களின் ஆதரவுகளும் தேவை என்பதை உணர்ந்து,சிறுதுளி பெருவெள்ளம் போல் சிறியேனின் ஆசைகளை Scarborough,Ward 42ம் Councillor பதவி மூலம் அறிமுகமாகி,எனது அரசியல் பயணத்தினை மேன்மேலும் தொடரவே விரும்புகின்றேன்.

இதே வேளை நான் பிறந்த மண்ணையும், தமிழர் பெருமையையும், பழமையையும், தமிழ் பாரம் பரியங்களையும், ஈழமண்ணில் நடந்த இனக் கொடுமைகளையும், அழிவுகளையும், ஈழதேசமக்களையும் புறம்தள்ளி விட்டு நான் கனடியதமிழன் என்ற பெருமையோடு வாழந்திடலாமா..? "காற்றை கைது செய்துவிட்டு கால்மணி நேரம் கூட உயிர்வாழ முடியாது". கண்கள் இரண்டு, இரண்டு செவிகள், கால்கள் இரண்டு, இரண்டு கைகள், சமபலமாக இயங்கினால்த்தான் மனிதவாழ்வு வளமடைந்து சுபீட்சமடையும். என் ஈழதேசத்தின் கொடுமையினை அறிந்ததில் இருந்து கனடாவையும், ஈழதேசத்தையும் இரு கண்கள் போல் மதித்து வருகின்றேன். அரசியலிலும் இளம் சந்ததியினர் வந்தால்தான் கனடாவில் ஈழத்தின் தேவைகளை முன்னெடுத்து செல்லமுடியும்.

தலைவர்களையும், தலைமைகளையும் உருவாக்குவது மக்களே...!

- 193 நாடுகளுக்கு மேற்பட்ட மக்கள் வாழும் கனடா ரொரன்ரோ மாநகரத்தில் இன மத மொழி கலாச்சார பாகுபாடு இன்றி கடமையாற்ற தகுதியுடையவன் என்ற பெருமையை எனக்கு வழங்குவீர்கள். என்ற நம்பிக்கையோடும்...!
- என்னுடைய அரசியல் பயணத்திற்கு நீங்கள் வழிகாட்டியாகவும், பக்க பலமாகவும், இருப்பீர்கள் என்ற துணிவோடும்!
- எனது வெற்றியை தீாமானிக்கும் பெரும்சக்தியான உங்களின் ஆதரவோடும்...!
- உங்கள் ஆசிகளோடும் எனது அரசியல் பயணத்தினை தொடருகின்றேன் !



**Campaign Headquarters**


என்றென்றும் அன்புடன்,
உங்கள்
நீதன் சபாரத்தினம்.

www.facebook.com/neethan.saba
@sabaformalvern
neethansabaward42@gmail.com
strongmalvern@gmail.com

**www.neethansaba.ca**
Tel: 647.966.3244 / 416.321.6705
5637 Finch Ave East, Unit 6
Scarborough ON M1B 5K9

**Vote for Neethan Sabaratnam COUNCILLOR**
**Scarborough . Ward 42**
**Your Concerns are my Priority!**
**Campaign Office : 416-321-6705**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org